கோமாளியாக்கப்பட்ட கோமான்

முஹம்மத் பின் துக்ளக்

செ.திவான்

முகம்மது பின் துக்ளக்
(கோமாளியாக்கப்பட்ட கோமான்)

வரலாற்றுப் பேரறிஞர்
செ.திவான் M.A.,M.Phil.,

உண்மையை அறிந்து கொள்வீர்களாக!

மெய்யானது வந்துவிட்டது.
பொய்யானது மறைந்துவிட்டது.
நிச்சயமாகப் பொய்யானது மறைந்து போகக் கூடியதாயிருந்தது.
சத்தியம் வந்தது.
அசத்தியம் மறைந்தது.
நிச்சயம் அசத்தியம் அழிந்தே தீரும்.

திருகுர்ஆன் 17:81.

உண்மையை அறிந்து கொள்வீர்களாக!
உண்மை உங்களை விடுதலையாக்கும்.

விவிலியம் யோவான் 8:32

உண்மை உரைமின் (உபநிஷத்).

வாசியுங்கள்; அதிசயப்படுங்கள்

For my own part, Iam Strongly tempted to deny both the fact and the consequences ,The fact is indeed marvellous, Read and Wonder Says the Historian him self.

- Edward Gibbon
The Decline and Fall of the Roman Empire,
London 1911, Volume V Page 453.

"உண்மையையும், நிகழ்வுகளையும் மறுப்பதைக் கண்டு நான் சீற்றமுறுகிறேன். உண்மை உள்ளபடி மகத்தானது வாசியுங்கள். அதிசயப்படுங்கள்."

உலகப் புகழ்பெற்ற வரலாற்றாசிரியர்
எட்வர்டுகிப்பன் ரோமானியப் பேரரசின்
எழுச்சியும், வீழ்ச்சியும் நூலில்
பாகம் 5, பக்கம் 453.

நூலாசிரியரின் 129வது நூல்

நூலின் தலைப்பு	:	முகம்மது பின் துக்ளக்
பொருள்	:	வரலாறு
நூலின் ஆசிரியர்	:	செ. திவான்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2021, அக்டோபர்
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	144
அச்சிட்டோர்	:	நியூஸ் மேன் பப்ளிகேஷன்ஸ், மதுரை போன்:0452–4396667, 90803 30200
வடிவமைப்பு	:	ஜ. அப்துல் நசீர்
விலை	:	ரூ. 100/–
ISBN NO.	:	**978-81-948259-6-8**

உள்ளே.......

1. எண்ண அலைகள் 05
2. டெல்லியில் முஸ்லிம் அரசுகள் 24
3. துக்ளக் 27
4. தந்தையைக் கொன்று அரியணை ஏறியவரா? 28
5. திட்டமிட்ட தலைநகர் மாற்றம் 65
6. அடையாளப் பணமும் அவதூறும் 95

எண்ண அலைகள்

அல்லா – அல்லா... அல்லா
நீ இல்லாத இடமே இல்லை
நீ தானே உலகின் எல்லை
அல்லா... அல்லா.. அல்லா...

நிலம் வெளுக்க நீர்தான் உண்டு
நீர்வெளுக்க மீன் தான் உண்டு
மனம் வெளுக்க எது தான் உண்டு
நபியே (ஸல்) உன் வேதம் உண்டு
அல்லா... அல்லா... அல்லா...

இருப்போருக்கு எல்லாம் சொந்தம்
இல்லாருக்கு எதுதான் சொந்தம்
நல்லாருக்கும் பொல்லாருக்கும் தான்
நாயகமே (ஸல்) நீ தான் சொந்தம்
அல்லா... அல்லா... அல்லா...

கவிஞர் வாலி இயற்றி மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் பாடிய பாடல் முகமது பின் துக்ளக் படத்தில் வரும். 1979 இல் பிரிஸ்டிஸ் புரொடக்ஷன்ஸ் தயாரித்த அந்தத் தமிழ்ப்படத்தில் 'சோ', மூர்த்தி, சேஷாத்திரி, மனோரமா, சி. சகுந்தலா உஷா நந்தினி, வீராச்சாமி மற்றும் 'சோவின் நாடக மன்ற நடிகர்கள் நடித்திருப்பார்கள். கதை வசனம் டைரக்ஷன் சோ.

விவேகாஃபைன் ஆர்ட்ஸ்

1968 இல் விவேகாபைன் ஆர்ட்ஸ் கிளப் குழுவினரால் முதன் முதலில் முகமது பின் துக்ளக் நாடகம் அரங்கேற்றப்பட்டது. 1969 இல் அதில் சில மாற்றங்களை 'சோ' செய்தார். அதனை 1989 இல் கிரிடிரேடிங் ஏஜென்ஸி நிறுவனத்தார் ஒன்பது ரூபாய் விலையில் 94 பக்கங்களில் நூலாக வெளியிட்டனர்.

முகமது பின் துக்ளக்

முகமது பின் துக்ளக் திரைப்படமாக தமிழில் 1971 இல் வெளிவந்தபோது முழு வசனம் – பாடல்கள் விலை 75 காசுகள்

என்று ஸ்ரீமகள் அச்சகம் 52 பக்கங்களைக் கொண்ட நூலாக வெளியிட்டது.

அது தான் யாருக்குமே புரியலை

சுல்தான் முகமது பின் துக்ளக் சபை கூடியிருக்கிறது. பாரசீக யாத்திரிகர் இபுன்பத்தூதா (Ibnubadah) துக்ளக்கைப் பார்க்க வருவதாக முதல் காட்சி திரைப்படத்தில் துவங்கும்.

துக்ளக்கைப் பற்றி ஆராய்ச்சி நடத்தும் கல்லூரி சரித்திரப் பேராசிரியர் ரங்காச்சாரி தன் சம்பந்தி நரசிங்கமாச்சாரிக்கு கதை சொல்வதுபோல காட்சி வரும்.

தாத்தாச்சாரி : ஓய் நரசிங்கமாச்சாரி இதுதான்யா துக்ளக் கதை...

நரசிங்கமாச்சாரி : ஓய் தாத்தாச்சாரி துக்ளக் கதையை சொன்னீர்.. சரி அவன் ஒரு மேதாவியா? இல்ல பைத்தியக்காரனா? இரக்கக்குணம் படைத்தவனா? கொடுமைக்காரனா? ஒண்ணுமே புரியலியே?

தாத்தாச்சாரி : அதுதான் யாருக்குமே புரியலை அது கிடக்கட்டும்.

நரசிங்கமாச்சாரி : ஓய் நீர் துக்ளக் கதையைத்தான் சொன்னீரா? இல்லை **ஆஸ் யூசுவல்** உம் கைச்சரக்கையும் சேர்த்து சொன்னீரா?

தாத்தாச்சாரி : ஓய் இஸ்ட்ரிண்ணாலே History (வரலாறு) **சரக்கும் கூட சேர்ந்தது தானே?**★

சரக்கும் சேர்ந்ததுதான்

நரசிங்கமாச்சாரி : மிஸ்டர் தாத்தாச்சாரி துக்ளக் சரித்திரத்தை அப்படியே சொன்னேளா? இல்லை சும்மா உம்மா சரக்கையும் சேர்த்திருக்கீரா?

★ முகமது பின் துக்ளக் முழுவசனம் பாடல்கள் பக்கம் 3, 4.

தாத்தாச்சாரி : History ன்னாலே சரக்கும் சேர்ந்ததுதான் நீர் எப்பவும் இப்படித்தான் என் வாயைக் கிளறி எல்லாத்தையும் கேட்டுக்க வேண்டியது கடைசியிலே சரக்கு அது... இதுன்னு சொல்ல வேண்டியது*

1972 இல் தெலுங்கில்

'சோ' நடித்த தமிழ்த் திரைப்படம் முகமது பின் துக்ளக் 1971 இல்; B.V.பிரசாத் தெலுங்கில் அதனை எடுத்தது 1972 இல். 1971 – 1972களில் அடியேன் கல்லூரி மாணவன்.

வங்கதேசயுத்த நிதி

வங்க தேச யுத்த நிதி வசூலிக்கப்பட்ட நேரம்; நானும் சக கல்லூரித் தோழர்களும் கல்லூரி சார்பில் தரப்பட்ட உண்டியலை ஏந்தினோம். தற்போது அறிஞர் அண்ணா சிலை நெல்லை சந்திப்பு பகுதிகளில் நாகர்கோவில் செல்லும் பயணிகள் பஸ்; அதில் ஏறினோம். அங்கே பயணித்தவர் 'சோ' நிதியும் உண்டியலில் போட்டார். முகமது பின் துக்ளக் படம் பற்றி அவரிடம் பேசும் ஞானம் அப்போது இல்லை.

மணா

எனது பிரிய நண்பர் மணா சோவின் 'ஓசாம அசா' ஒரு சாதாரண மனிதனின் அசாதாரணமான அனுபவங்கள் எனும் இரு பாகங்கள் நூலினைத் தந்துள்ளார். குமுதம் 2015 வெளியீடான முதல் பாகம் 256 பக்கங்கள்; இரண்டாம் பாகம் 256 பக்கங்கள்.

முஸ்லிம்களுக்கு எதிரான படம்

இந்தப்படம் வர்றதுக்கு முன்னாடியே இது முஸ்லிம்களுக்கு எதிரான படம்னு பிரச்சாரம் பண்ண ஆரம்பிச்சாங்க. அது எடு படாமப் போகணும் அதனால் அல்லாவைப் புகழ்ந்து டைட்டிலில் வரவேண்டிய பாடலை நீ எழுதனும்னு சோ, கவிஞர் வாலியிடம், சொன்னார்.

* சோ, முகமது பின் துக்ளக் (நாடகம்) கிரிடிரேடிங் ஏஜென்ஸி, மயிலாப்பூர், சென்னை. 1989, பக்கம் 13.

வாலியின் பாட்டு

வாலி எழுதிய பாட்டுதான் ‘அல்லா அல்லா’ அவ்வளவு தூரம் அருமையாக அமைந்து விட்டது அந்தப் பாட்டு.

‘அல்லா அல்லா’ பாடலைக் கேட்டதும் அப்படியே உட்கார்ந்து கைதட்டி விட்டார்கள் அந்த அளவுக்கு அந்தப் படத்துக்கு உதவியது வாலியின் பாட்டு.★

எம்.எஸ்.விஸ்வநாதன் பெயரிலேயே மூன்று சீட்டுகள்

‘அல்லா அல்லா’ பாடலை எப்படியும் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதனைக்கொண்டு பாட வைக்கவேண்டுமென்று முகமது ரஃபி, டி.எம்.சௌந்திரராஜன், எம்.எஸ்.விஸ்வநாதன் இந்த மூன்று பேரின் பெயர்களையும் திருவுளச் சீட்டில் எழுதிப் போட்டார்கள் – எம்.எஸ்.விஸ்வநாதனே அதனை எடுத்தார். அதில் அவர் பெயர் இருந்தது. எம்.எஸ்.விஸ்வநாதன் பாட முடிவெடுத்தார்.

சோ கேட்டார். சார் பாடுறதுன்று முடிவெடுத்துடீங்க இனி அதிலிருந்து மாற மாட்டீங்களே? அதெப்படி மாத்துவேன்? ஒத்துண்டுட்டேன். நிச்சயமாக மாறமாட்டீங்கள்லே? நிச்சயமா மாறமாட்டேன் என்று எம்.எஸ்.விஸ்வநாதன் சொன்னார்.

மோசடி வேலை

கையில் இருந்த மற்ற திருவுளச் சீட்டுகளை அவரிடம் (எம். எஸ்.விஸ்வநாதனிடம்) கொடுத்தேன். பிரித்துப் பார்த்தார் அவற்றிலும் எம்.எஸ்.வி. பெயர்தான் எழுதப்பட்டிருந்தது. இதென்ன... மோசடி வேலை என்று புலம்ப ஆரம்பித்து விட்டார் எம்.எஸ்.வி.★★

படத்தில் வரலாற்றில் சரக்கைச் சேர்த்தும், படத்தில் அல்லாப் பாடலை எம்.எஸ்.விஸ்வநாதனைக் கொண்டு சிறப்பாக பாடவைத்து எதிர்ப்பைச் சமாளித்ததும் சோவின் (மோசடி) வேலை என்று சொல்லவும் வேண்டுமோ?

★ சோவின் ஓசாம அசா, எழுத்தும் தொகுப்பும் மணா, முதல் பாகம் சென்னை - 2015, பக்கம் 191, 192.

★★ முற்கூறிய நூல் பக்கம் 199, 200

சொல் புதிது

சகோதரர் ஸதகத்துல்லாஹ் அவர்களை ஆசிரியராகக் கொண்டும், எளியேனை பதிப்பாசிரியராகக் கொண்டும் வெளிவந்த காலாண்டிதழ் சொல்புதிது. 2003 ஏப்ரல், ஜூன் இதழ் 11 இல் அடியேன் ஒரு தொடரைத் துவங்கினேன்; இதோ அந்தக் கட்டுரை அப்படியே....

கோமாளியாக்கப்பட்ட மன்னன்

அரபு நாட்டிலிருந்து இந்தியாவின் தென்பாகத்தில் கடல் வாணிபம் காலங்காலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்தியாவிற்குள் முஸ்லிம்கள் வந்த காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை முஸ்லிம் மன்னர்களின், சுல்தான்களின், நவாப்களின் ஆட்சி இங்கே இருந்து வந்தது.

எட்டாம் நூற்றாண்டு துவங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்களைப் பற்றி கொடுமையாக எழுதப்பட்ட பொய்ச் சரிதைகள் ஏராளம், ஏராளம். பாரதத்தை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் வன விலங்குகளைக் கிழித்துத் தின்னும் மாமிசப் பட்சிணிகள் என்றே நம்மை எண்ணவைத்திடும் அளவிற்கு சரித்திரம் வரையப்பட்டுள்ளது.

ஓர் இனத்தை இழிவுபடுத்தி, அதன் இன உணர்ச்சியையும் பெருமையையும் அதிலிருந்து அகற்றக்கூடிய முறைகளிலே அது தனது கடந்தகால உயர்வைக் குறித்து சந்தேகித்து வெட்கப்படுமாறு செய்யும் முறையும் ஒன்று. அதன் விளைவாக அந்த இனத்தின் தற்காலச் சந்ததியர் தங்கள் மூதாதையர்களை இழிவாகக் கருதி அவர்களை வெறுக்கவும் கூடும். ஓர் இனம் தனது பழங்காலப் பெருமையை மறந்து, தம் முன்னோர்களை வெறுப்புடன் நினைவுபடுத்த ஆரம்பித்து விட்டால் அது வெகுவிரைவிலும் எளிதிலும் தாழ்வடைந்து விடக்கூடும்.

ஆங்கிலேயர், இந்தியாவை ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்களின் வரலாற்றைத் திரித்தார்கள். கட்டுக்கதைகளைக் கலந்தார்கள். விளைவு! விஷங்கலந்த வரலாறு பாடநூல்களில்

கல்லூரிகளில் போதிக்கப்பட்டது. விளைவு முஸ்லிம்களே, முஸ்லிம் மன்னர்களைப் பற்றி மோசமாக எண்ணுமளவிற்கு வியக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடந்தன.

பொய்ப்பிரச்சாரம்

இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியைப் பற்றி எழுதிவைக்கப்பட்ட பொய்ச்சரிதைகளால் ஏற்பட்ட நஷ்டம். இந்த இனம் பெற்ற பேரழிவு இன்னும் தொடர்கிறது. இதனை மாற்றிடும் முயற்சிகளும் தொடர்கின்றது. வரலாற்றில் இழிவுபடுத்தப்பட்டவர்களில் ஒருவர்தான் முஹம்மது பின் துக்ளக். சினிமா, நாடகம் மற்றும் பல புதினங்களிலும் கூட கைதேர்ந்த கோமாளியாகக் காட்டப்பட்டவர்.

முஸ்லிம் மன்னர்கள்

விரிவாக விளக்கப்பட வேண்டிய அரேபியரின் சிந்துப் பகுதி வருகை, முஹம்மத் பின் காஸிமின் ஆட்சி மஹ்முத் கஜ்னவீ (கஜினி முஹம்மது, ஸுல்தான் முயிஸ்ஸுத்தீன் முஹம்மத் பின் ஸாம் கோரீ (முஹம்மது கோரி) அவரது அடிமையாகி பின்னர் சுதந்திரம் பெற்ற குத்புத்தீன் அய்பக் துவங்கி ஷம்ஸுத்தீன் அல்தமஷ், ரஸியா ஸுல்தான், நஸிருத்தீன் மஹ்முத், கியாஃஸுத்தீன் பால்பன், முயிஃஸுத்தீன் கைகுபாத், அதன் பின் கில்ஜி வம்சத்து ஜலாலுத்தீன் ஃபைரோஷ் ஷாஹ், அலாவுத்தீன்கில்ஜி *(1295–1316)* அதனத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர் குஸ்ருகான்.

இவரது வரலாற்றின் பக்கங்களிலிருந்து துவங்கினால் தான் துக்ளக் வம்சத்தின் துவக்கங்குறித்த தெளிவான வரலாற்றை நாம் தெரிந்து கொள்ள இயலும்.

குஸ்ரூகான் முஸ்லிமா?

அலாவுத்தீன் கில்ஜியின் பிரபுக்களில் மலிக்ஷாதிகான் என்னும் ஒரு பிரபு குஜராத்தைச் சேர்ந்த ஒரு ஹிந்துச் சிறுவனை வளர்த்தார். அச்சிறுவனுக்கு ஹஸன் என்றும் பெயர் வைத்தார். ஸுல்தான் அலாவுதீன் கில்ஜி, அவனுக்கு குஸ்ருகான் (Khusrukshan) என்னும் பட்டமளித்தார்.

"Like his father the young sultan had a vile favourite. a Hindu Parwani, a pariah of the lowest class from Gujarat, whom he styled khusrukhan,...."★

Khusrau, a man of low caste from Gujarat, who had become a special favourite of the sultan.★★

குத்புத்தீன்

அலாவுத்தீன் கில்ஜியின் புதல்வர் முபாரக்கான், குத்புத்தீன் முபாரக் ஷாஹ்கில்ஜி என்னும் பட்டத்துடன் ஆட்சிக்கு வந்தார். தமது ஆட்சியின் இரண்டாம் ஆண்டில் தக்காணத்தில் அதிக வன்மைபெற்று, அராஜகம் செய்து வந்த ஹர்ப்பால்தேவ் என்பவரை அடக்கிடப்போர் புரிந்து வென்றார். தேவகிரியில் அமைச்சர் பொறுப்பு குஸ்ரூகானுக்கு வழங்கப்பட்டது. தென்னாட்டு அரசர்களிடமிருந்து கப்பம் வசூலித்து அனுப்பும் பொறுப்பும் அதிகாரமும் அவருக்கே வழங்கப்பட்டது. குஸ்ரூகானின் இன்னொரு சகோதரர் ஹிஸாமுத்தீனை குஜராத்தின் கவர்னராகவும் நியமித்தார் குத்புத்தீன்.

ஹிந்து அரசாங்கம்

குஜராத்தில் ஹிஸாமுத்தீன் (பிறவி ஹிந்து) இந்துக்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களை வழங்கினார். தக்காணத்தில் குற்றம் ஏதும் செய்திடாத கோண்டுவானா அரசரை குஸ்ரூகான் அச்சமூட்டி 101 யானைகளை அபகரித்தார். மைசூர் ராஜாவிடமிருந்து 20 யானைகள் ஏராளமான நகைகள் வற்புறுத்தி வாங்கப்பட்டது. படைகளில் ஹிந்துக்கள் ஏராளமாகச் சேர்க்கப்பட்டார்கள்.

குஜராத்திலும், தக்காணத்திலும் மறுபடியும் ஹிந்து அரசாங்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் மறைவிலே நடைபெறத் துவங்கியது.

★ *Stanley Lane - Poole. Mediaeval India under Mohammedan Rule A.d.712-1764. London. 1926, P 117*

★★ *Ishwari Prasad, A Short history of Muslim Rule in India; Allahabad, 1965, P.128.*

இஸ்லாம் புறக்கணிக்கப்பட்டது

பள்ளிவாசல்களில் தொழுகை காணப்படவில்லை. ரம்ஜான் நோன்புகளும் மீறப்பட்டது. குத்புத்தீன கில்ஜி சமயத்தையும், ஒழுக்கத்தையும் தூக்கி எறிந்தார்.

No more was the sultan seen at the public prayers in the mosque of his fore fathers; the fast of Ramzan was openly violated.*

குஜராத்தில் ஹிஸாமுத்தீன் சுயேட்சையாக தனி அரசு அமைக்க முயலுவதைக் கண்ட முஸ்லிம் பிரபுக்கள் அவரைக் கைது செய்து டில்லிக்கு அனுப்பினார்கள். ஆனால் மன்னரோ அவர் மீது நடவடிக்கை எடுக்காமல் தன்னோடு அவரை வைத்துக் கொண்டார்.

தக்காணத்தில் குஸ்ரூகான் துறைமுகங்களிலுள்ள முஸ்லிம் வியாபாரிகளின் பொருட்களை அபகரித்தும், கொலையும் செய்தார். தன்னாட்சியை ஏற்படுத்த முயலும் அவரது செயல் குறித்து மன்னருக்குத் தாக்கீதுகள் பறந்தன. நயவஞ்சக நடிப்புக்கார குஸ்ரூகான் மன்னரை தமது வார்த்தையால் மயக்கினார். பின்னர் அவர் தில்லியில் முதலமைச்சராகவே ஆக்கப்பட்டார்.

சதித்திட்டம்

மாலிக்காபூரின் நண்பர்களை குஸ்ரூகான் தம்மோடு சேர்த்துக் கொண்டார். மாலிக்காபூர் குடியிருந்த மாளிகையில் ஹிந்துக்கள் கூடுவர். அங்கு அரசாங்கத்தைக் கவிழ்க்கத் திட்டம் தீட்டப்பட்டது. விரும்பாதவர்களை குஸ்ரூகான் கொலை செய்வார். அல்லது கைதியாக்குவார்; அல்லது எங்காவது தொலைதூர மாகாணங்களுக்கு அனுப்பி வைப்பார்.

குஜராத்திலிருந்து 20,000 ஹிந்து வீரர்களைத் தமது படையிலே குஸ்ரூகான் சேர்த்துக் கொண்டார். தில்லியையும் அதன் சுற்றுப்புறங்களிலிருந்தும் மேலும் ஹிந்து வீரர்களைப் படையில் சேர்த்தார். 40,000க்கு மேற்பட்ட ஹிந்துக் குதிரை வீரர்களின் படையொன்று திரட்டப்பட்டது.

★ முற்கூறிய ஸ்டான்லிலேன்பூல் நூல் பக்கம் 117.

காஜிகான்

இந்தச் சூழ்நிலையில் டில்லியிலிருந்த பிரபுக்களில் மன்னருடன் துணிந்து பேசக்கூடியவரும், மன்னரின் ஆசிரியருமான காஜிகான் என்ற காஜிஜியாவுத்தீன் மன்னரைச் சந்தித்து குஸ்ரூகானின் சதித்திட்டம் பற்றி எடுத்துரைத்தார். அப்போது அங்கு வந்த குஸ்ரூகான் மன்னரிடம் பாசாங்கு செய்து அழ ஆரம்பித்தார். மன்னர் நம்பினார். மதிமோசம் போனார். மறுநாள் வந்தது. இனியும் தாமதித்தால் திட்டம் தூளாகும் என்பதனை குஸ்ரூகான் உணர்ந்தார்.

மன்னரைக் கொல்ல முடிவெடுத்தார். குஸ்ரூகானின் சிறிய தந்தை ரன்தோல் ஜாகீர்தேவ் இருவரும் காஜிகானிடம் வெற்றிலை பீடா கொடுத்தனர்.

அரண்மனையில் ஆயிரம் தூண் மண்டபத்தின் நுழைவாயிலின் பாதுகாப்பு அதிகாரியாகவும் செயல்பட்டு வந்த காஜிகானின் விலாவில் ஜாகீர்தேவ் உடைவாளால் குத்தினார். அதே வேளையில் ஆயத்தமாக இருந்த குஸ்ரூகானின் விசுவாசிகளான ஹிந்து தளபதிகள் அரண்மனைக் காவலாளிகளைக் கொலை செய்திட ஆரம்பித்தனர். கூச்சல் குழப்பம் அதிகரித்தது. மன்னர் குத்புத்தீன் முபாரக் ஷாஹ் கில்ஜி அதைப்பற்றி குஸ்ரூகானிடம் விசாரித்தார்.

பாசாங்கு

வழக்கம்போல் பாசாங்கு செய்த குஸ்ரூகான், சுல்தானுடைய லாயத்திலிருந்து குதிரைகள் சில அவிழ்த்துக் கொண்டு இங்கும் அங்கும் ஓடுகின்றன. அவற்றைப் பிடித்துக் கட்டுகிறார்கள். அதனால் எழுகின்ற கூச்சல் இது என்றார். மன்னனும் அதனை நம்பிக் கொண்டிருந்தார்.

துரோகம்

திட்டமிட்டபடி கொலையாளிகள் கூட்டம் மன்னர் இருந்த மாடிப்பகுதிக்கு விரைந்தது. வாயில் காப்பாளர் இருவரும் கொல்லப்பட்டனர். அப்போதுதான் மன்னருக்குச் சந்தேகம் வந்தது. கொலையாளிகள் வாளுடன் வருவதைக் கண்ட அவர் அரண்மனையின் உள்பகுதிக்குள் ஓட முயன்றார்.

அவ்வாறு மன்னர் உள்ளே சென்று விட்டால் அவரைப் பிடிக்கவும், கொல்லவும் தாமதமாகும் என்று நினைத்தான் வஞ்சகன் குஸ்ருகான். மன்னரைப் பின்தொடர்ந்து ஓடினார். அரசரை அங்கு செல்லவிடாமல் பிடித்துக் கொண்டார். மன்னரின் தலைமுடி மிக நீண்டு இருந்தது. அதை குஸ்ருகான் பற்றிப் பிடித்துக் கொண்டு, மன்னரைக் கீழே சாய்த்தார். சுல்தான் குஸ்ருகானை கீழே தள்ளினார். அந்த நிலையிலும் மன்னரின் தலைமுடியை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டார். மன்னரும் தலைமுடியை விடுவித்துக் கொண்டு போகமுடியவில்லை.

கொலைகார ஜாகீர்தேவ் அங்கு வந்தார். சுல்தானும் குஸ்ருகானும் இருட்டில் அந்த நிலையில் இருப்பதைக் கண்டு, தான் குஸ்ருகானைக் காயப்படுத்தி விடக்கூடாது என்று தாமதித்தார். அச்சமயம் குஸ்ருகான் "நான் கீழே இருக்கிறேன் – மன்னர் என்மீது இருக்கிறார்" சீக்கிரம்! சீக்கிரம்!! வேலையை முடியுங்கள்!! இல்லாவிட்டால் நான் செத்துவிடுவேன் என்றார். மன்னரின் விலாவில் ஜாகிர்தேவ் வாளால் வெட்டினார். பிறகு தலையைக் கொய்தார். மன்னரின் தலை அரண்மனையின் ஜன்னல் ஒன்றில் தொங்கிக் கொண்டிருந்தது. 1321 மார்ச் மாதத்தில் இந்தக் கோரக் கொலை நடைபெற்று முடிந்தது.

"Finally one night in March, 1321, the favourite Murdered his Master, and the headless trunk of Mubarak Shah was seen by the light of torches falling one of the Palace windows"*

குஸ்ருகான் - நசிரூத்தின்

கொலை வெறி பிடித்த குஸ்ருகான் மறுநாள் நஸீருத்தின் குஸ்ருகான் என்ற பெயரில் (நஸீருத்தீன் – நம்பிக்கையின் உதவியாளன்) அரசரானான். வரலாற்றில் விசித்திரத்தைப் பாருங்கள். நம்பிக்கைத் துரோகமிழைத்து, வளர்த்து ஆளாக்கப்பட்ட அரசரையே படுகொலை செய்த குஸ்ருகான் தன்னை நஸீருத்தீன் நம்பிக்கையின் உதவியாளன் என்று அழைத்துக் கொண்டதை வரலாற்றில் அறிகிற போது வேடிக்கையாகவும் உள்ளது.

★ முற்கூறிய ஸ்டான்லிலேன்பூல் நூல் பக்கம் 118.

ஆட்சியில் குஸ்ரூகானுக்குத் தொடக்கத்திலிருந்தே இஸ்லாம் மார்க்கத்துடன் எத்தகைய தொடர்பும் கிடையாது. அவரது நோக்கம் டில்லியில் ஓர் ஹிந்து ராஜ்யத்தை நிறுவவேண்டும் என்பதே, அவர் அரசப் பொறுப்பை ஏற்றதும் தில்லியிலிருந்த பள்ளிவாசல் முஸ்லிம்களிடமிருந்து திருகுர்ஆன் பிரதிகள் பிடுங்கப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட திருமறையின் பிரதிகள் அரசவையில் அடுக்கப்பட்டன. மெத்தை, திண்ணை போன்று அவைகள் வைக்கப்பட்டு, அவற்றின் மீது ஹிந்து பிரபுக்கள் உட்காரவும் செய்தனர். கொடூரமான ஆட்சி நடைபெற்றது. தனது எஜமானனான மன்னரைக் கொன்ற குஸ்ரூகான் அவர் படுகொலை செய்யப்பட்ட மூன்றாவது நாளில் அவரின் துணைவியாரை தனது மனைவியாக்கிக் கொண்டார். அரண்மனையிலிருந்து பிரபுக்களின் மனைவி, அவர்களது பெண் மக்களை, குஸ்ரூகான் தன்னோடு இருந்த ஹிந்துக்களுக்கு தானமாக அளித்தார். குஸ்ரூகானின் "ரத்தக் களரியும், மிருகத்தன்மையும் வானத்தைச் சிவக்க வைத்தது" என்று வரலாற்றாசிரியர்கள் எழுதி வைத்துள்ளனர். இதோ ஸ்டான்லிலேன்பூலின் வரிகள்.

Then began a hideous reign of terror. Khusru mounted the throne as Sultan Nasir - addin. 'The helper of the faith,' and there followed and orgy of blood and violence such as had never before been heard of in India. The harim of the Sultan was brutally ravished; every one worth killing was killed in the Palace; three days after the murder of his sovereign Khusru took to wife the queen of his victim, a Hindu Princess to whom Such an alliance was an unspeakable profanation; the wives and daughters of the royal family and of the great noble were dllivered over to the scum of khursu's pariahs; the flames of blood shed and brutatily reddened the sky' The holy koran was desecrated; idols were setup in the mosques... ★

இக்கொடுமைகளை இந்திய வரலாற்றில் நிகழ்த்திய குஸ்ரூகான் எனும் கொடியவனை வீழ்த்திட வீரர் ஒருவர் தில்லி நோக்கி விரைந்தார்.

★ *Stanley Lane - Poole. Mediaeval India under Mohammedan Rule A.d.712-1764. London. 1926, P 118, 119.*

காஜி மாலிக்

அலாவுதீன் கில்ஜி காலத்தில் எல்லைப்புறத்தில் நிகழ்ந்த மங்கோலியப் படையெடுப்புக்களை வெற்றிகரமாக முறியடித்த மாவீரர் காஜி மாலீக் என்ற கியாஸ் உத்தீன்; இவர் தீபால் பூர் கவர்னராகப் பணியாற்றிக் கொண்டிருந்த தீரர் இவரது புதல்வர் மலிக்ஜூனாகான் தில்லியில் இருந்தார்.

குஸ்ரூகான் இந்த மலிக்ஜூனா கானுக்குவிசேஷ மரியாதைகளை அளித்தார். இப்படிச் செய்தால் இவரது தந்தையான காஜி மாலிக் என்ற கியாஸ் உத்தீன் தன்னை எதிர்க்கமாட்டார் என்று நம்பினார்.

மலிக்ஜூனாகான்

குஸ்ரூகானின் கொடூர ஆட்சியினைப் நேரில் பார்த்துக் கொண்டிருந்த மலிக்ஜூனாகான் ஒருநாள் சமயம் பார்த்து தில்லியிருந்து மாற்றுக் குதிரைகள் மீது சவாரி செய்தார்.

ஜூனாகான் தப்பிய செய்தி குஸ்ரூகானுக்குத் தெரியவந்தது. துரிதமாக அவரைப் பிடிக்க முயற்சி செய்தார். ஜூனாகானோ தீபால்பூருக்குத் தம் தந்தையார் காஜிமாலிக்கிடம் சென்றடைந்தார்.

பழிக்குப்பழி

தமது புத்திரனைக் கண்ட காஜி மாலிக் இறைவனுக்கு நன்றி செலுத்திவிட்டு, சுல்தான் குத்புதீன் முபாரக் கில்ஜியினை வஞ்சகமாகக் கொன்ற கொடூரன் குஸ்ரூகானை வீழ்த்திட படையெடுத்துச் சென்றார்.

ஸர் ஸூதி

இதனையறிந்த குஸ்ரூகான் பெருஞ்சேனையை காஜி மாலிக்கை எதிர்த்திட அனுப்பி வைத்தார். ஸர்ஸூதி என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் குஸ்ரூகானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. வெற்றியடைந்த காஜி மாலிக்கை இந்திரபிரஸ்து என்ற இடத்தில் குஸ்ரூகான் நேரில் வந்து எதிர்த்துப் போரிட்டார். பெரும் படையுடன் வந்த குஸ்ரூகானை, காஜி மாலிக்கின் சிறிய படை தோற்கடித்தது. தோல்வியடைந்த

குஸ்ருகான் தப்பி ஓடினார். தோட்டத்தில் ஒளிந்து ெ குஸ்ருகான் கண்டுபிடிக்கப்பட்டு, தலை துண்டிக் ஆகஸ்ட் 1321 இல் கொல்லப்பட்ட குஸ்ருகானின் ந கொடுங்கோல் ஆட்சி நிறைவுற்றது.

அதிகாரத்திற்கு யார்?

முஸ்லிம் பிரபுக்கள் மற்றும் ஆட்சியின் முக்கிய அலு கூட்டத்தை காஜி மாலிக் கூட்டினார். சகோதரர்களே ல்தான் குத்புத்தீன் கில்ஜியைக் கொன்றவர்களைப் பழிவா ங்கு வந்தேன். என் பணி முடிந்து விட்டது. இ கங்களுக்குப் பிரியமான ஒரு மன்னரைத் தேர்ந்தெடு ாள்ளுங்கள்" நான் அவருக்குக் கீழ்ப் படியத் தய க்கிறேன் என்றார். ஆனால் எல்லோரும் ஏகமனதாக ிக்கையே மன்னராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஸூத்தின் துக்ளக்

ஜ்ரி 720 இல் (கி.பி. 1320) இல் கில்ஜி அரசாங்கத்தி தளபதியாக இருந்த காஜி மாலிக் மன்னரானார். இந் மாலிக் என்பவர்தார் கியாஸூத்தின் துக்ளக் என்று றில் மன்னராக அழைக்கப்படுகிறார்.

ாவில் 'துக்ளக் சுல்தான்கள்' என்னும் புதிய வமிசம் பொறுப்பை அப்போதுதான் ஏற்றுக் கொண்டது.

என்றால் மலை நாட்டார் என்று பொருள். இவரின் ஜூனாகான் என்பவரே, நான்கு ஆண்டுகளுக்குப் கமது பின் துக்ளக் என்ற பெயரில் அரசப் 5 வந்தார். இந்த மன்னர் மீது தான் எத்தனை ள். அவர் பதவிக்கு வந்தபோது அவர் தன் வஞ்சகமாகக் கொன்றுவிட்டு ஆட்சிக்கு வந்தார் சரித்திரத்தில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. என்ன?

ண்முறை

ாஸூத்தின் துக்ளக் (காஜிமாலிக் ணம் ஆகிய பிரதேசங்

தெலுங்கானா, வாரங்கல் சிற்றரசர்கள் அவரது ஆதிக்கத்தை ஏற்க மறுத்தனர். அங்கு படை அனுப்பப்பட்டது. கியாசுத்தீன் துக்ளக் தனது மகனான ஜூனாகான் என்பவரை (உலூக் கான் என்ற பட்டம் பெற்றவர் (ulughhan) (முஹம்மது பின் துக்ளக்) வாரங்கலுக்கு அனுப்பினர். முதல்முறை வெற்றி பெற இயலவில்லை. மறு முறையும் படைகளுடன் சென்று ஜூனாகான் எனும் முஹம்மது பின் துக்ளக் வெற்றிக் கொடி நாட்டினார். வாரங்கல்லை வென்றபோது தான் ஜூனாகானுக்கு 'முஹம்மத்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

இதைப் போன்றே கிழக்கே வங்காளத்திலும், லக்நௌயிலும், டாக்காவிலும் மன்னரது ஆளுமையை ஏற்க மறுப்பவர்களை அடக்கி வென்றிட சுல்தான் கியாஸூத்தின் தயாரானார். **அப்போது டில்லியில் தமது பிரதிநிதியாக முஹம்மது பின் துக்ளக்கை நியமித்துவிட்டுச் சென்றார்.**

படையுடன் சென்ற சுல்தான் கியாஸூத் தீன் துக்ளக்கிடம் வங்காளக் கவர்னர் பணிந்தார்.

ஸூனார் காவ் அதிபதி பஹாதுர் கர்வம் கொண்டு கியாசுத் தீன் துக்ளக்கை எதிர்த்தார். அவரை வென்று கைதியாக்கிவிட்டு, அவரது ஆட்சிப் பகுதியை வங்காளக் கவர்னருக்குக் கொடுத்து விட்டு கியாசுத்தீன் துக்ளக் டில்லி திரும்பினார்.

வாகைசூடியவருக்கு வரவேற்பு

வெற்றி வாகை சூடி டில்லிக்குத் திரும்பும் கியாசுத்தீன் துக்ளக்கை (தனது தந்தையை) வரவேற்றிட தில்லியில் அரசுப் பொறுப்புக்களைக் கவனித்து வந்த ஜூனாகான் என்ற முஹம்மது பின் துக்ளக் ஏற்பாடுகளைச் செய்தார்.

டில்லியிருந்து ஆறு மைல் தூரத்தில் உள்ள ஆப்கான்பூரில் மரத்தினால் ஆன மாளிகை ஒன்றை அமைத்து, உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது.

மாளிகை இடிந்து மரணம்

மிகக் குறுகிய நாட்களில் (மூன்று நாள்) தயாரான அந்த மாளிகையில் கியாசுத்தீன் தங்கியிருந்தபோது, அதன் மீது இடி விழுந்து, மாளிகை தகர்ந்து, மன்னர் மரணமுற்றார்.

இம் மரணத்திற்கு முஹமது பின் துக்ளக்கின் சதி தான் காரணம் என்று கூறப்பட்டது.

சரித்திர ஆசிரியர் பரணி (Barani) இது குறித்து தெளிவாக ஒன்றும் கூறவில்லை. மன்னர் தங்கியிருந்த மாளிகையின் மீது இடி விழுந்தது. மன்னரோடு ஐந்தாறு பேர்களும் இடிபாடுகளுக்கிடையில் விழுந்து மடிந்தனர் என்கிறார்.

A thunder bolt of a calamity from heaven fell up on the Sultan and he was with five or six others crushed under the de bris! (Barani. Tarikhi - Firuz Shahi Biblioth, Ind. P.452)

எலியட்

வரலாற்றாசிரியர் எலியட் (Elliot) இதனை தவறுதலாக மொழி பெயர்த்துள்ளார். அவரது மொழி பெயர்ப்பில் இடி மாளிகையின் மேல் தளத்தில் விழுந்ததாகவும், முழு மரமாளிகையும் மொத்தமாக நொறுங்கி விழுந்தது என்று குறிப்பிடுவது பரணியின் கூற்றிலிருந்து மாறுபடுகிறது என்பார் வரலாற்றாசிரியர் ஈஸ்வரி பிரசாத்.

ஈஸ்வரி பிரசாத்

ஈஸ்வரி பிரசாத் இதுகுறித்து எழுதியிருக்கும் வரிகள் இதோ :

Elliot has in correctly translated the Passage. From his translation it appears that lighting feel up on the roof and the whole structure came down with a crash. But this is not in agreement with the text of Barani.*

இபுன்பத்தூதா

முஸ்லிம் பயணி இபுன்பத்தூதா, கியாசுத்தீன் துக்ளக்கைக் கொல்வதற்கு முகமது பின் துக்ளக் காரணமாக இருந்தார் என்று குறிப்பிடுகிறார்.

★ *Sir M, Henry Elliot. The History of India as told by its own Historians The Muhammadan period, Edited by John Dawson, III Volume London 1867. P.235*

(Ibn Batuta : voyages D' Ibn Batuta, Texte Arabe. Accompagre D one Traducation. Par C.Defremery Et. Dr.B.R.Sanguinetti volume III, Paris 1914, PP 212, 213)

இபின்பதூதா கூறுகிறார்: கியாசுத்தீன் துக்ளக்கோடு உடன் இருந்த ஷேக் ருக்னுதீன் முல் தானி (Shaikh Ruknuddin multani)" அந்தக் கட்டிடம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இடிந்து விழும் வண்ணமே கட்டப்பட்டிருந்ததாக தன்னிடம் அவர் கூறியதாக எழுதியுள்ளார்.

இபின் பதூதாவின் கூற்று சூழ்நிலை சாட்சியங்களை உறுதி செய்கிறது. அவரது சம காலத்திய சரித்திராசிரியர் இஸாமி (Isami) யின் கூற்று ஒத்துப்போகிறது என்று ஈஸ்வரி பிரசாத் குறிப்பிடுகிறார். மேலும் அவர் முகமது பின் துக்ளக் மீது சந்தேகங் கொள்கிறார். சரித்திர ஆசிரியர் நிஜா முதீன் அஹமது வரவேற்பு மாளிகை அவசர அவசரமாக கட்டியதே தனது தந்தையைக் கொல்லத்தான் என்று குறிப்பிட்டுள்ளார்.

(Nizamu - uddin Ahmad, Tabqat-j- Akbari, Persian text, Nawal Kishore Press, Lucknow, PP. 214-p 215).

பெரிஷ்டா - இறைவனே அறிவான்

முகமது பின் துக்ளக் தனது தந்தையாரான கியாசுத்தீன் துக்ளக்கை சதித் திட்டமிட்டு கொல்லமுயன்றார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தவறு : அப்படி நடந்திருக்கவே முடியாது என்று குறிப்பிடுகிறார்.பெரிஷ்டா.

(John Briggs History of the Rise of the mahomedan power in India till the yead A.D.1612. Translated form the original persian of Mahomad Kasim Firishta. vol. I.P.408. : Muhmmad Qasim Firishtas. Gulshan - I _ Ibrahimi persian text, Lucknow. P, 132) "Haji Muhammad Qandhari Says that it was struk by lightning, and this doew not seem at all improbable. Clearly Firishta has not made up his mind one way or the other. and in Characteristic fashion he brings his uncriti cal account to a close saying :But God only knows the real truth'

இறைவனே இதனை, உண்மையினை அறிவான் என்று குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றாசிரியர் சர் வுல்ஸ்லி கெயிக் (Sir wolsely Haig) இந்த மரணம் சதியால் விளைந்தது தான் என்கிறார்.

டாக்டர் மஹதி ஹூசைன்

"The Rise and fall of Muhammad bin Tughlug" என்ற நூலை 1938 இல் எழுதிய டாக்டர் மஹதி ஹூசைன் (A.Mahdi Husain) அந்த நூலில் பக்கம் 74 இல் தந்தையின் சாவுக்கு மகன் பொறுப்பானவர் அல்ல என்பதனை சான்றுகளுடன் நிரூபிக்கிறார்.

"Dr Mahdi Husain holds that the pavilion fell of its own accord and Prince Juna Khan had absolutely no hand in the matter. அந்த மாளிகை தானாகவே விழுந்ததே தவிர அதில் இளவரசர் ஜூனாகானுக்கு நிச்சயமாக பங்கு எதுவும் இல்லை என்று.

ஆக பதவிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பே முஹம்மது பின் துக்ளக் மீது இப்படியோரு பழிச்சொல் அதுவும் முஸ்லிம் வரலாற்றாசிரியர்களாலே சொல்லப்படுகிறது.

சரித்திரத்தில் ஏனைய முஸ்லிம் மன்னர்களை பிற சரித்திர ஆசிரியர்கள் தான் தூற்றி எழுதியுள்ளனர். ஆனால் முஹம்மது பின் துக்ளக்கின் மீது முஸ்லிம் சரித்திர ஆசிரியர்களே பழிச்சொல்லை வாரி வீசிஉள்ளனர்.

தந்தைக்குப்பிறகு, தானே ஆட்சிப் பொறுப்பைக் கவனிக்கும் இடத்தில் இருந்தவரும், வாரிசுப் போட்டி எதுவும் நிகழ்ந்திராத காலத்தில் தந்தையே வங்காளத்திற்குச் செல்லும்போது தனக்குத் தில்லியில் ஆளும் பொறுப்பைத் தந்துவிட்டுச் சென்றபோதும், தந்தையைக் கொல்வதற்கு தனயன் ஏன் முயலவேண்டும்? சிந்தையில் இந்த வினா எழுகிறதல்லவா!

சம காலத்தவரான பரணி தெளிவாக அக் கட்டிடம் இடி விழுந்ததால் தான் நொறுங்கியது என்று குறிப்பிட்டதற்குப் பின்னரும், பின்னால் வந்த வரலாற்றாசிரியர்கள் முஹம்மது பின் துக்ளக் மீது பழி போடுவது எதனால்? இந்த ஒரு விஷயத்தில் மட்டுந்தானா? அவரது நடவடிக்கைகள், ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அவரது செயல்கள் அனைத்திலும் குற்றங்கண்டு, அவரை ஒரு பைத்தியக்காரரைப் போல வரலாற்றில் சித்தரித்துள்ளார்களே.

யதார்த்தமாகவே முஹமது பின் துக்ளக் கோமாளியா? கோமானா? என்பதனை இனிவரும் ஆய்வுகளில் பார்ப்போம் என்று முதல் தொடரில் எழுதியிருந்தேன்.

என்ன காரணத்தாலோ அந்தத் தொடரை அப்போது தொடரவில்லை. ஆனால் எப்போதாவது சந்திக்கும் போதெல்லாம்,அல்லதுதொலைபேசியில்பேசுகிறபோதெல்லாம் அந்தத் தொடர்பற்றி சகோதரர் ஸதக்கத்துல்லாஹ் என்னிடம் கேட்பார்; உலகம் மீண்டு சுபிட்சம்பெற வேண்டும். கொடிய கொரோனா காலம் “அத்தா; இப்பொழுதாவது துக்ளக் தொடரை எழுதி நிறைவு செய்யுங்கள். குறைந்த பட்சம் முகமது பின் துக்ளக் பற்றி சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்தாவது உண்மை விளக்கம் எழுதித்தாருங்கள்” என்றார்கள்.

வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்

இஸ்லாமிய அரசர்களில் ஆலம்கீர் ஔரங்கஜேப் குறித்த 11 குற்றச்சாட்டுக்களுக்குப் ஆணித்தரமாகப் பதில் தரும் வகையில் ‘வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் என்னும் நூலை எழுதினேன்.

நிகரற்ற பெருவீரன் மாவீரன் மருத நாயகம்

நிகரற்ற பெரு வீரன் மாவீரன் மருதநாயகம் கான்சாகிப்பின் உண்மை வரலாறு நூல் எழுதினேன்.

மாலிக்காபூர், அதிசய அரசர் அலாவுதீன் கில்ஜி

குற்றஞ் சுமத்தப்பட்ட மாலிக்கபூர், அதிசய அரசர் அலாவுதீன் கில்ஜி குறித்த உண்மை வரலாற்றினை எழுதினேன். ஆனால் இவர்களைப் பற்றி எல்லாம் குறைத்து எழுதியவர்கள் முஸ்லிம் அல்லாதவர்கள். மாற்றுமதத்தினர் ஆங்கிலேயர்; இந்துக்கள் ஆவர். அவர்களுக்குப் பதில் சொல்லும் வண்ணம் அந்த நூல் அமைந்தது.

தீரன் திப்பு சுல்தான்

தென்னாட்டு வேங்கை சுதந்திரப் போர்க்களத்திலேயே மடிந்த ஒரே அரசன் தீரன் திப்பு மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்கும் அவதூறுகளுக்கம் பதில் தந்து நூல் எழுதினேன்.

குஞ்ஞாலிகள்

போர்த்துக்கீசியர்களால் கொள்ளைக்காரர்கள் என்று குற்றஞ் சுமத்தப்பட்ட கொள்கையாளர்கள் சுதேசப் போர்த்தீரர்கள், நாட்டிற்காக குருதி கொட்டிய குஞ்ஞாலிகள் குறித்தும் விரிவான நூல் எழுதினேன்.

ரஸியா சுல்தான்

டில்லியை ஆட்சிபுரிந்து ஒரே இஸ்லாமியப்பெண்ணரசி ரஸியா சுல்தான் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டிற்குப் பதில்கூறும் வகையில் ரஸியா சுல்தான் எனும் நூலை எழுதினேன்.

முஸ்லிம் மன்னரைத் தாக்கி எழுதிய முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள்

வரலாற்றில் முஸ்லிம் வரலாற்றாசிரியர்களே தாக்கி எழுதிய வரலாறு முகமது பின் துக்ளக் வரலாறு ஆகும். இதற்கான காரணம் என்ன? உண்மை வரலாறு எது? அதற்குரிய காலம் இப்போது சகோதரர் ஸதக்கத்துல்லாஹ் ஹஸனி மூலம் வந்துள்ளது. எல்லாம் வல்ல இறைவனுக்கும் காலத்திற்கும் நன்றி.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை;
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்.

செ.திவான்,
27.7.2021,

ரெகான் சுலைமான் இல்லம்,
பாளையங்கோட்டை

டில்லியில் முஸ்லிம் அரசுகள்

டில்லி சுல்தான்களின் ஆட்சி கி.பி. 1206 இல் துவங்கி, 1526 வரை நீடித்தது.

320 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த டில்லி சுல்தான்களை ஐந்து பிரிவாகப் பிரிக்கலாம்.

முகம்மது கஜினி	கி.பி. 971 – 1030
முகம்மது கோரி	கி.பி. 1,173 – 1206

ஆட்சியைத் தொடர்ந்து டில்லியில் சுல்தான்கள், முந்திய துருக்கிய அரசர்கள் ஆட்சி புரிந்தனர்.

முந்திய துருக்கிய அரசர்கள் (அடிமை வம்சம்)

குத்புதீன் ஐபக்	கி.பி. 1206 – 1210
ஆரம்ஷா	கி.பி. 1210 – 1211
இல்துமிஷ்	கி.பி. 1211 – 1236
ரஸியா சுல்தான்	கி.பி. 1236 – 1240
பஹ்ரம்ஷா	கி.பி. 1240 – 1242
மசூத்	கி.பி. 1242 – 1246
நசிருத்தீன் முகம்மது	கி.பி. 1246 – 1266
கியாசுதீன்பால்பன்	கி.பி. 1266 – 1286
கைகோபாத்	கி.பி. 1286 – 1290.

கில்ஜி மன்னர்கள்

ஜலாலுதீன் கில்ஜி	கி.பி. 1290 – 1296
அலாவுதீன் கில்ஜி	கிபி 1296 – 1316
முபாரக்ஷா	கி.பி 1316 – 1320

துக்ளக் மன்னர்கள்

கியாசுதீன் துக்ளக்	கி.பி 1320 – 1325
முகமது பின் துக்ளக்	கி.பி. 1325 – 1351
பிரோஷ்ஷா	கி.பி. 1351 – 1386
துக்ளக்ஷா	கி.பி. 1386 – 1389
அபுபக்கர்	கி.பி. 1389 – 1390
முகமது II	கி.பி. 1390 – 1394
முகமது ஷா	கி.பி. 1394 – 1412

சைய்யிது மன்னர்கள்

கிசர்கான்	கி.பி. 1414 – 1421
முபாரக்ஷா	கி.பி. 1421 – 1434
முகமது ஷா	கி.பி. 1434 – 1445
அலாவுதீன் ஆலம்ஷா	கி.பி. 1445 – 1450

லோடி மன்னர்கள்

பஹீலால் லோடி	கி.பி. 1451 – 1489
சிக்கந்தர் லோடி	கி.பி 1489 – 1517
இப்ராஹிம் லோடி	கி.பி. 1517 – 1526

இதற்குப்பிறகு முகலாயப் பேரரசு ஏற்பட்டது. அவர்களது விவரம் இதோ :

முகலாய மன்னர்கள்

பாபர்	கி.பி. 1526 – 1530
ஹிமாயூன்	கி.பி. 1530 – 1540
ஷெர்ஷா (சூர்வமிசம்)	கி.பி. 1541 – 1554,
ஹிமாயூன்	கி.பி. 1555 – 1556
அக்பர்	கி.பி. 1556 – 1605
ஜஹாங்கீர்	கி.பி. 1605 – 1627
ஷாஜஹான்	கி.பி. 1627 – 1656,
ஔரங்கஜேப்	கி.பி. 1658 – 1707

பிரித்தாளும் சூழ்ச்சியும் பிரித்தானிய ஆட்சியும்

பஹதூர் ஷாஹ்	கி.பி 1707 – 1711
ஜஹான்தார்ஷாஹ்	கிபி 1712 – 1713
ஃபர்ருக் ஸியா	கி.பி 1713 – 1719
ரஃபீயுத் தரஜாத்	கி.பி. 1719
ரஃபீயுத் தவ்வா	கி.பி 1719
முஹம்மது ஷாஹ்	கி.பி. 1719 – 1748
அஹ்மத் ஷாஹ்	கி.பி. 1748 – 1756
இரண்டாம் ஆலம் கீர்	கி.பி. 1756 – 1759
இரண்டாம் ஷாஹ் ஆலம்	கி.பி. 1759 – 1805
இரண்டாம் அக்பர்	கி.பி. 1806 – 1837
இரண்டாம் பகதூர்ஷா	கிபி 1837 – 1858

இதன் பின் வணிகக் கொடி பிடித்து வஞ்சகவலை விரித்து வந்த வெள்ளையர்கள் தங்களது பிரித்தாளும் சூழ்ச்சியால் பிரித்தானிய ஆட்சியை இந்தியாவில் ஸ்தாபித்தனர். *1947* ஆகஸ்ட் *15* இல் இந்தியத் திருநாடு சுதந்திரம் பெறும் வரை வெள்ளையர் கரங்களில் அன்னைத் திருநாடு வீழ்ந்து கிடந்தது.

மேலே கண்ட முஸ்லிம் மன்னர்கள் பட்டியலில் – துக்ளக் பரம்பரை மன்னர்களில் முகமது பின் துக்ளக் பற்றி இனி பார்ப்போம்.

துக்ளக்

துக்ளக் என்பது ஒரு குடும்பம் அல்லது ஓர் இனத்தைச் குறிக்கும் சொல் என்பர். துக்ளக் தனி மனிதரின் பெயர் என்பர் மங்கோலியத்தலைவர் துக்ளக் என்ற பெயரை வைத்திருந்தார் என்று அமீர் குஸ்ரூ துக்ளக் நாமாவில் தெரிவித்துள்ளார். (Tughluqnamah Page 138) துக்ளக் மன்னர்கள் எழுவரில் மூவர் பெயரில் மட்டுமே துக்ளக் என்று வருவதை முன்னரே பார்த்தோம்.

நாணயங்களும், சாசனங்களும் துக்ளக் என்பது தனி மனிதரின் பெயர் என்பதை வலியுறுத்துகின்றன. குலம் அல்லது குடும்பம், அல்லது இனம் சார்ந்திருந்தால் எல்லா அரசர்களும் துக்ளக் என்ற பெயரை வைத்திருப்பார்கள். ஆனால் அவ்வாறு வைத்திடவில்லை என்பதால் அது தனிமனிதப் பெயராகக்கருதலாம்.

கியாஸ் உத்தீன் துக்ளக்

'துக்ளக் என்ற பெயர் தாங்கி முதலில் தில்லி அரியணை ஏறியவர் கியாஸ் உத்தீன் துக்ளக், கி.பி 1320 முதல் கி.பி 1325 வரை இவரது ஆட்சி இருந்தது.

கி.பி. 1325 இல் இவரைக் கொன்று விட்டு முகமது பின் துக்ளக் அரியணை ஏறினார் என்று வரலாற்றில் சில முஸ்லிம் வரலாற்றாசிரியர்களாலேயே சொல்லப்படுகிறது.

இதில் உண்மை நிலை என்ன? இதோ வரலாற்றின் வெளிச்சத்தில் முகம்மதுபின் துக்ளக்...

தந்தையைக் கொன்றுவிட்டு அரியணை ஏறியவரா?

முகமது பின் துக்ளக் தனது தந்தை கியாசுத்தீன் துக்ளக்கை கொன்றுவிட்டு பதவிக்கு வந்தார் என்ற பழி காலங் காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. இதனை விரிவாக ஆராய்வோம்.

கியாஸ் உத்தீனின் மரணம்

கியாஸ் உத்தீனின் மரணம் குறித்து **இபுன்பத்தூதா** விளக்கியுள்ளார்; '**இசாமி**' யும் தகவல் தந்துள்ளார். '**பரணி**'யும் சொல்லியுள்ளார்.

இபின் பதூதா தரும் செய்தி

தலைநகரை நெருங்கியதும் கியாஸ் உத்தீன் துக்ளக் புதிதாகத் தோற்றுவித்த துக்ளக்பாத் நகரத்தை நெருங்கியதும் உலூக்கானுக்கு (முகமது பின் துக்ளக்கிற்கு) சில ஆணைகள் இட்டார்.

ஆப்கன்பூர்

நல்ல நேரத்தில் தான் நகருக்குள் நுழையவேண்டும்; எனவே துக்ளக்காபாத்திற்கு மூன்று அல்லது நான்கு கிரேக்கர் (Karohs) தூரத்தில் இருந்தே ஆப்கன்பூர் (Afghanpur) என்ற சிறிய கிராமத்தில் ஒரு தற்காலிக அரண்மனையை அமைக்கவேண்டும். இதுதான் கியாஸ் உத்தீன் துக்ளக் முகமதுபின் துக்ளக்கிற்கு இட்ட கட்டளை ஆகும். இதனை ஏற்று கியாஸ் உத்தீன் துக்ளக் வருவதற்குள் மூன்று நாட்களுக்குள் அவசரம் அவசரமாக அரண்மனை கட்டப்பட்டது.

அகமத் பின் அயாஸ்

மரத்தூண்களினால் ஆன அக்கட்டிடம் அகமத் பின் அயாஸ் (Ahmad Ayaz) மேற்பார்வையில் கட்டப்பட்டது.

கியாஸ் உத்தீன் துக்ளக் ஆப்கான்பூர் வந்ததும், முகமதுபின் துக்ளக் அவரைத் தக்கபடி வரவேற்று அரண்மனைக்குள் அழைத்துச் சென்றார். அரசரின் விருந்தினர்கள் விருந்துண்டு அதன்பின் சென்றனர்.

ஷெயிக்ருக்னுத்தீன்

ஷெயிக்ருக்னுத்தீன் (Shaikh Ruknuddin) கியாஸ் உத்தீன் துக்ளக்கோடு அப்போது இருந்தார். தொழுகைக்கான நேரம் வந்ததால் தொழுகை நடத்தும்படி அவரிடம் முகமது பின் துக்ளக் வேண்டினார். ஷெயிக்ருக்னுதீன் தொழுகை நடத்தச் சென்றார்.

யானைகள் அழைத்துவரப்படுதல்

முன்னரே ஏற்பாடு செய்தபடி யானைகள் குறிப்பிட்ட திசையில் இருந்து அழைத்து வரப்பட்டன. கியாஸ்உத்தீன் துக்ளக்கின் ஆணைப்படி குறிப்பிட்ட இடத்தில் ஒரு யானை வந்ததும் கட்டிடம் அப்படியே குமுறி விழுந்து விட்டது. தொழுகைக்குச் சென்ற மௌலானா ஷெயிக்ருக்னுத்தீன் திரும்பி வந்தார்.

மண்வெட்டிகள் கொண்டு வரச் சொல்லுதல்

மௌலானா திரும்பி வரும்போது முகமது பின் துக்ளக் மண்வெட்டிகளையும் களைபிடுங்கிகளையும் கொண்டு வரும்படி கட்டளையிட்டுக் கொண்டிருந்தார். காலதாமதம் செய்யவும் செய்தார். இறுதியில் சுல்தான் கியாஸ்உத்தீன் துக்ளக்கின் உடல் தோண்டி எடுக்கப்பட்டது. தோண்டி எடுத்தபோதே அவர் உயிர் பிரிந்து விட்டது என்றும், வெளியே எடுத்தபின் அவர் கொலை செய்யப்பட்டார் என்றும் சிலர் கூறுகின்றனர். அன்று இரவே துக்ளக்காபாத்திற்கு வெளியே கியாஸ் உத்தீன் துக்ளக் தானே கட்டி வைத்திருந்த சமாதியில் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

ஆப்கன்பூரில் நடைபெற்ற சம்பவம் குறித்து இபின்பதூதா முகமதுபின் துக்ளக் மீது குற்றஞ்சுமத்தி தருகின்ற விவரங்கள் இவையேயாகும்.

இபுன்பத்தூதா

இபுன்பத்தூதா தருகின்ற செயதிகளில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை விரிவாக ஆராயவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அப்துல்லா முஹம்மது (கி.பி. 1304 - 1377)

இபுன்பத்தூதா ஆப்பிரிக்கர் நீக்ரோ (*1304 – 1377*) அப்துல்லா முகம்மது (Abdllah Muhammad) என்பது இயற்பெயர் முஹமதுபின் துக்ளக் ஆட்சியாளராக இருந்தபோது இந்தியாவிற்கு வந்த இவர் அவரது அவையில் பணியாற்றியவர். அதன் பின் அங்கிருந்து சீனாவிற்கு அனுப்பப்பட்டார். பின் தன்ஸேருக்குத் திரும்பினார்.

இந்தியாவிலிருந்து எழுதவில்லை

இப்னுபதூதா இந்திய சரித்திரத்தை இந்தியாவிலிருந்து எழுதவில்லை. சொந்த ஊரான தன்ஸேரில் (Tangier) இருந்து எழுதினார். அதாவது இந்தியாவை விட்டுச் தன்ஸேருக்குத் சென்ற பல வருஷங்களுக்குப் பிறகு வட ஆப்பிரிக்காவிலிருந்து இந்திய சரித்திரத்தை எழுதினார். தாம் கேள்விப்பட்ட **வதந்திகளையும் பழைய விஷயங்களையுமே ஆதாரமாகக் கொண்டதாக அவரது நூல் அமைந்துள்ளது.**

எட்டு ஆண்டுகள் கழிந்த நிலையில்

கியாஸ் உத்தீன் துக்ளக் மறைந்து எட்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் தான் இபுன்பத்தூதா இந்தியாவிற்கு வந்தார். தாம் பிறரிடம் கேட்டு அறிந்தவற்றையே அவர் கூறியுள்ளார். வேறு சான்றுகளை அது அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

மௌலானா ருக்னுத்தீன்

கியாஸ் உத்தீன் துக்ளக் மரணம் பற்றிய கதையை மௌலானா ருக்னுத்தீனிடமிருந்து தாம் அறிந்ததாக இப்னுபதூதா கூறியுள்ளார். **தாம் அறிந்தவற்றை தம் சொந்த நாட்டிற்குத் திரும்பிய பிறகு, பல ஆண்டுகள் கழித்து தாம் சொல்லச் சொல்ல மற்றொரு வரை எழுதச் சொல்லியுள்ளார் இப்னுபதூதா** அதனால் இபுன்பத்தூதா ஞாபகமறதியாக சிலவற்றைக் கூறியிருக்கவும் வாய்ப்புள்ளது.

கி.பி. 1325 - 1377

இபுன்பத்தூதா உலகைச்சுற்றிய காலம் கி.பி. *1325 – 1354* இவர் டில்லிக்கு வந்தது கி.பி. *1334*. எட்டு ஆண்டு காலம் முகமது பின் துக்ளக்கிடம் காஜி (Gazi) (Judge) (*நீதிபதியாக*)

பணியாற்றியவர் பின் துரதிர்ஷ்டவசமாக முகமது பின் துக்ளக்கின் அனுசரணையை இழந்தார். கைதியானார்; பின்னர் விடுவிக்கப்பட்டார். கி.பி. 1342 இல் சீனாவிற்குத் தூதுவராக அனுப்பப்பட்டார்.

Unfortunately he lost the sultan's favour and was imprisoned. soon, however, he was released and was sent as Mugammad's Ambassador to China in 1342.*

சொல்லச் சொல்ல எழுதப்பட்ட சரித்திரம்

இப்னுபதூதா தம்முடைய நூலைத் தம்முடைய கையாலேயே எழுதவில்லை. தான் சென்று கண்ட நகரங்களின் வர்ணனைகளையும், தம்முடைய நினைவிற்கு வந்த நிகழ்ச்சிகள் வரலாற்றுச் செய்திகள் ஆகியவற்றை இப்னுபதூதா ஓர் எழுத்தருக்கு எடுத்துச் சொல்ல, அந்த எழுத்தர் அவற்றையெல்லாம் எழுதினார்.

He did not write his work himself, but was content to dictate to a copyist the description of the towns he visited, the anecdotes and history he could re call and soon. **

துக்ளக் மறைந்த நான்கு ஆண்டுகளுக்கப் பின்

இப்னுபதூதா தனது சரித்திர நூலை முகமது பின் துக்ளக் மறைந்த நான்கு ஆண்டுகளுக்குப் பிறகே கி.பி. 1355 இல் (முகமதுபின் துக்ளக் மறைந்தது கி.பி. 1351.) எழுதி முடித்தார்.

M. ஹுசைன்

அழிவுக்கு வழிகோலுகிற சிதைவுறுகிற வரலாறு Mine of history என்று எம்.ஹுசைன் இபுன்பத்தூதாவின் நூல் பற்றி குறிப்பிடுவார். ***

★ *E.Sreedharan, A Text book of Historiography 500 BC to AD 2000 Newdelhi 2012, Page 70.*

★★ *K.A.Nilakanda Sastri, Foreign notices of South India from Megasthenes to Mahuan, univeristity of Madras, 1972, Chennai, Page 35.*

★★★ *M.Hussain, the Rihla of Ibn Batuta, Baroda, 1953, Page XViii - Xix.*

வின்ஸ்டன்ஸ்மித்

பேராசிரியர் வின்ஸ்டன் ஸ்மித் ஆக்ஸ்போர்டு ஹிஸ்டரி ஆப் இந்தியா எனும் நூலை *1919* இல் எழுதினார். இரண்டாம் பதிப்பு *1923* இல்; *1928* இல் வந்த பதிப்பில் முகமது பின் துக்ளக் விஷயத்தில் இபுன்பத்தூதா நூலை அப்படியே பின் பற்றி எழுதியுள்ளார்.

தற்சார்பு அணுகுமுறை

வின்செண்ட் ஸ்மித் (Vincent Smith) The Early History of India (1906) எனும் நூலை *478* பக்கங்களில் தந்துள்ளார். அதில் கிரேக்கத்து அலெக்ஸாண்டரின் படையெடுப்பை மிகைப்படுத்தி கூறுவதை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். அலெக்சாந்தரது வருகை போர் பற்றி *66* பக்கங்களுக்கு மேலாக வர்ணிப்பார். அலெக்சாந்தரின் இந்திய வெற்றி கீழை நாட்டுப் படைகளின் திறமையின்மைச் சான்றாக சுட்டிக்காட்டுவார். ஆனால் இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்து தொல் குடித்தலைவரான போரஸை வெல்வதற்கு அலெக்சாந்தர் எடுத்துக்கொண்ட முயற்சியையும், போருக்குப் பின் போரஸிற்கே அரசுரிமையை வழங்கியதையும் வரலாறு கற்ற அனைவரும் அறிவர். மேலும் கிரேக்கப் படைகள் சந்திரகுப்த மௌரியரை எதிர் கொள்ள முடியாமல் தோல்வியுற்றபோது இதே அளவுகோலை ஸ்மித் பயன்படுத்தவில்லை என்பது வின்ஸ்டன் ஸ்மித்தின் தற்சார்பு அணுகுமுறையைப் புலப்படுத்தும்.

How ever Smith fails to apply a similar yard stick when dealing with the defeat of the greek generals at the hands of chantragupta maurya ★

எம்.எல்பின்ஸ்டன் Mountstuart ElPhinstone (1778 - 1859)

எம்.எல்பின்ஸ்டன் M.Elphinstone the History of India எனும் நூலை *1841* இல் இலண்டனில் வெளியிட்டார். *1841* எல்பின்ஸ்டனில் இந்திய வரலாறு நூல் காலக் கணிப்பில் சிறப்பான கவனம் செலுத்தப்பட்ட நூல்; அரச குலங்களின்

★ *Dr.V.Manickam, on History and Historiography, Madurai, 2010, Page 107. (Book Totally 472 Pages)*

காலத்தை அவர் கணித்துள்ளார் அந்தக் காலக் கணிப்பு அதிக மாற்றமின்றி இன்னும் வழக்கில் உள்ளது.வரலாற்றியல் நெறிக்கிணங்க இவர் தம் ஆய்வை மேற்கொண்டார். இந்தியரின் பண்பாட்டுப் பெருமையை ஏற்றுக்கொண்டது.

தூசிடைடிஸ்

இவரது (எல்பின்ஸ்டன்) சிறப்பான வரலாற்றுப் பணிக்காக இந்திய வரலாற்றின் தூசிடைடிஸ்யாக (Tacitus) இவர் கருதப்படுகிறார்.*

A work forwhich he has been called the Tacitus of Modern Historians . **

மிக்க திறன் வாய்ந்தவர்

எல்பின்ஸ்டன் தனது இந்திய வரலாற்று நூலில் முகமது பின் துக்ளக் பற்றி எழுதுகிறார்.

"அக்காலத்திற்குரிய இளவரசர்களுள் பேசுவதிலும் கலையிலும் மிக்க திறன் வாய்ந்தவர் என்று முகமது பின் துக்ளக்கை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். அராபிய மொழியிலும், பாரசீக மொழியிலும் இவர் எழுதிய கடிதங்கள் ஆளுவதை நிறுத்திக் கொண்ட நீண்ட காலத்திற்குப் பின்பும் அவைகளின் நேர்த்தியான குணத்திற்காக புகழப்பட்டன்.

நினைவாற்றல்

முகமதுபின் துக்ளக்கின் நினைவாற்றல் எல்லை கடந்திருந்தது. கிரேக்க அளவை நூலிலும் மெய் விளக்கத் துறையிலும் முகமது பின் துக்ளக் மிக்க அறிவுத்திறன் பெற்றிருந்தார்.

தொழுகையில் ஒழுங்கு

மேலும், கணித சாஸ்த்திரத்திலும், விஞ்ஞானத்திலும் பற்றுக் கொண்டிருந்தார். புதிய வியாதிகளின் அறிகுறிகளை உற்றுக்

* முனைவர் வீ.மாணிக்கம், வரலாறும் வரலாற்றியலும், மதுரை, 2010, பக்கம் 86.

** *Parshotam Mehra, a dictionary of Modern Indian History 1707 - 1947 Delhi, 1985, Page 242.*

கவனிப்பதற்கு இவரே நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தார். **தொழுகைகளில் ஒழுங்காக இருந்தார்.**

மது அருந்துவதில்லை - அக்காலத்தின் அற்புதம்

மது அருந்துவதில்லை தம் சொந்த வாழ்க்கையில் சமயத்தைச் சேர்ந்த ஆன்மீகக் கட்டளைகளுக்கெல்லாம் கீழ்ப்படிந்தார். இவர் போரில் தன் வீரத்துக்கும் தனிப்பட்ட செயல்களுக்குப் பிரசித்தி பெற்றிருந்தார். இதனால் இவருடைய சம காலத்தவர்கள் **இவரை அக்காலத்தின் அற்புதம்** என்று நியாயமுற மதிப்பிட்டனர்.

Wonders of the age - அக்காலத்தின் அற்புதம்

It is admitted, on all hands, that he was the most eloquent and accomplished prince of his age. His letters, both in Arabic and persian were admired fot their elegance long after he had ceased to reign. His Memory was extraordinary; and be sides a thorough knowledge of logic and the philosophy of the Greeks, he was much attached to Mathematics and to physical Science; and used himself to attend sick persons for the purpose of watching the symptoms of any extraordinary disease, He was regular in his devotions abstained from wine, and conformed in his private life to all the moral Precepts of his religion. In war he was distinguished for his gallantry and Personal activity, so that his contemporaries were justified in esteeming him as one of the wonders of the age.★

பணிவு மனப்பான்மை

முகமது பின் துக்ளக் பணிவு மனப்பான்மையுள்ளவர்; பரம ஏழையின் பிரேதம் சென்று கொண்டிருந்தால் தானும் தோள் கொடுத்து தூக்கிச் செல்வார்.

திருகுர்ஆன் மனனம்

தித்திக்கும் திருமறையாம் திருகுர்ஆன் முழுவதையும் மனனஞ் செய்தவர்; முகமது பின் துக்ளக் எப்போதும் மார்க்க மேதைகளோடு மார்க்க விஷயங்களையே பேசிக் கொண்டிருப்பார்.

★ *M.Elphinstone, The History of India London, Firstedition 1893, Re-edition 1905.*

பிற பெண்களை ஏறெடுத்துப் பாராமை

முகமது பின் துக்ளக் தமது அரண்மனையில் ராணி இருக்குமிடத்திற்குச் செல்லும்போது வாயிற் படியில் நின்று கொண்டு ஒரு சேவகனை அனுப்பித் தாம் வருவதாகச் சொல்லி அனுப்புவார். அதாவது தமது ராணியுடன் வேறொரு பெண் இருந்தால் அவள் அங்கிருந்து அகன்று விடுவதற்காகவும், தமது பார்வை பிற பெண்களின் மீது விழாமலிருப்பதற்காகவும் முகமது பின் துக்ளக் அவ்வாறு செய்தார்.*

முல்லா அப்துல் காதிர் பதாயூனீ

முல்லா அப்துல் காதிர் பதாயூனீ தான் எழுதிய வரலாற்று நூலான **முன் தகபுத்தவாரீக் கில்** முகம்மது பின் துக்ளக் பற்றி புகழ்ந்து குறிப்பிகிறார்.

ஆதில் - நீதியுள்ளவர்

முகம்மதுபின் துக்ளக் (ஆதில்) நீதியுள்ளவர் என்று எழுதியுள்ளார் அப்துல் காதிர் பதாயூனீ.**

கே.ஏ.நீலகண்டசாஸ்திரி - மு.ரா. பெருமாள் முதலியார்

தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள் என்ற ஆங்கில நூலை தொகுத்துப்பதிப்பித்தவர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி. அதனை தமிழாக்கம் செய்தவர் மு.ரா.பெருமாள் முதலியார். 568 பக்கங்கள் கொண்டது அந்த நூல் மேற்கோள் நூற்பட்டியல் பொருட்குறிப்பு அகராதியை கழித்தால் 540 பக்கங்கள்தான். அதில் இபுன்பத்தூதா(Ibnubadah) குறித்து 356 வது பக்கம் முதல் 476வது பக்கம் வரையிலும் 539 முதல் 540வது பக்கம் வரையிலும் மொத்தம் இபுனுபத்தூதா எழுதிய பயணக் குறிப்புகளை 122 பக்கங்களில் தந்துள்ளார்.

★ சையித் இப்ராஹிம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, சென்னை. 2014. பக்கம் 175.

★★ *Abdul qadir Budanni, Mutakhab-ut-Tawarikh Edited by W.N.Lees, Kabiruddin Ahmad and Ahmadali Bibliontheca Indica 3 Volumes Calcutta, 1864 - 1869. English Translation by G.S.A. Ranking (Volume I) W.H.Lowe (Volume II) T.W. Haig (Volume III, Biblotheca Indica, Calcutta, 1884 - 1925.*

யூல் - கார்டியர்

யூல் (Yule) மற்றும் கார்டியர் (Cordier) தொகுத்த இபுன்பத்தூதா குறித்த நூல் Cathay and the way Thither, 4 Volumes (Hakluyt Society London 1913 - 1916.

மேஜர்

மேஜர் (Major) என்பவர் இந்தியா 15 ஆம் நூற்றாண்டு என்ற நூல் தந்துள்ளார்.

India in the Fifteenth centenary Itakluyt Society London 1857

டிப்ரமெரி - சங்குயினிட்டி

டிப்ரமெரி மற்றும் சங்குயினிட்டி இருவரும் தொகுத்த இபுன்பத்தூதா நூல் Defremery and Sanguinetti Voyages Ibn Batoutah (Societe Asiatique) Paris Volume III 1855, Volume IV 1858இல் வந்துள்ளது.

H.A.R. GIBB - Good Print நிறுவனம்

The Travels of Ibnbattua Translated and Selected by H.A.R. GiBB தொகுத்த 198 பக்கங்களைக் கொண்ட நூலும் இபுன்பத்தூதா பற்றி 1929 இல் வெளி வந்துள்ளது. 2011 இல் (Good Print) நிறுவனத்தார் மறுபதிப்பு செய்துள்ளனர். இவைகளை வாசிக்கிறபோது இபுன்பத்தூதாவின் ஒழுக்கத்தை உணரமுடிகிறது.

பெண் பிரியர்

இபின் பதூதாவின் தனிப் பற்றுக்குரிய பெண் இறந்துபோனார். ஏனைய பெண்களை ஜாவா அரசன் கைப்பற்றிக் கொண்டான்.*

திபத்-உல்-மஹல் (மாலத்தீவு)

மாலத்தீவில் வாஜீர்களுள் ஒருவனுடைய மகளையும் வேறு மூன்று பெண்களையும் இப்னுபதூதா திருமணம் செய்து கொண்டார். **

★ கே.ஏ.நீல கண்ட சாஸ்திரி முற்கூறிய நூல் பக்கம் 369.

★★ முற்கூறிய நூல் பக்கம் 370.

ஷெரீப் ஜலாலுதீன்

மாபாரின் இராஜ்ஜியத்திற்கு தலைவராக ஷெரீப் ஜலாலுதீனை முகமது பின் துக்ளக் நியமித்திருந்தார். 1338 – 1339 இல் அவர் தன்னை சுயேச்சை அரசனாக அறிவித்தார்.

அஹசன்ஷா சுல்தான்

ஷெரீப் ஜலாலுதீன் அஹசன்ஷா சுல்தான் என்று பட்டப் பெயரில் ஆட்சி செலுத்தினார். இபுன்பத்தூதா இவரது மகளைத் திருமணம் செய்து கொண்டார்.

ஹூர்னா சாப்

ஹூர்ணாசாப் (Hhurna sab) என்பவள் ஷெரீப் ஜலாலுதீனின் மகள் அவளை இபுன்பத்தூதா திருமணம் செய்து கொண்டார். அவர் மூலம் ஒரு குழந்தையையும் பெற்றார். ஆனால் குழந்தையும் அவரது மனைவியும் எப்படி இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது என்கிறார்* இப்னுபதூதா.

இபுன்பத்தூதாவின் மாமனாருக்கு விரோதமானவர் முகமதுபின் துக்ளக்

முகமது பின் துக்ளக் தந்த மலபார் ஆட்சிப் பொறுப்பைப் பெற்று, பின் அவருக்கு விரோதமாகக் கலகம் செய்து, தானே ஆட்சியாளரான ஷெரீப் ஜலாலுதீன் (Sharif Jalaluddin) மகளான ஹூர்ணசாப்பை திருமணம் செய்து கொண்டவர் இப்னுபதூதா.

தனது மாமனார் எதிர்த்த ஒரு அரசரைப் பற்றி எப்படி அவரால் நல்லவிதத்தில் எழுத முடியம் என்பதனை சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறேன்.

மாலத்தீவு மனைவி

இபுன்பத்தூதா மாலத்தீவிலேயே விட்டு விட்டு வந்த மனைவிகளுள் ஒருத்திக்கு ஆண் குழந்தை பிறந்திருந்தது.**

★ முற்கூறிய நூல் பக்கம் 372, 373. *Ibn Battuta, during his stay at Delhi had Married one of sheriff's daughters...* ஆங்கில நூல் பக்கம் 225.

★★ முற்கூறிய நூல் பக். 374.

மஹல்

"தீவானமஹல் தீவை அடைந்தார் இப்னுபதூதா. அங்கிருந்த வாஜீர் அடிமைப் பெண் ஒருத்தியை அனுப்பி வைத்தார். இந்தப் பெண்ணைத் தங்களுக்குப் பிடிக்காவிட்டால் மராத்தியமங்கை ஒருத்தியை அனுப்புவதாக வாஜீர் சொன்னார்."

குலிஸ்தான்

"தோட்டப்பூ அல்லது பூந்தோட்டம் என்ற பொருள் கொண்ட குலிஸ்தான் என்ற பெண்ணை எனக்கு அனுப்பி வைத்தார். நான் அவளை மிகவும் விரும்பினேன்."

அன்பரி

சோழ மண்டலக்கரையைச் சேர்ந்த அடிமைப் பெண் அன்பரியை வாஜீர் எனக்கு அனுப்பி வைத்தார்.*

மாநாயக சுலைமான் மகள்

மாநாயக சுலைமான் மகளை இப்னுபதூதா திருமணம் செய்து கொண்டார். **

வாஜீர் அப்துல்லா

என்னுடைய மனைவி முஹமதுல் ஹஸ்ரமியின் மகனான வாஜீர் அப்துல்லாவின் மனைவிகளில் ஒருத்தியின் மகள்.

'ஆலி' த்தீவு

மஹல் தீவிலிருந்து ஆலித்தீவை அடைந்தேன். எனது மனைவி ஒருத்திக்கு நோய் கண்டதால் அவளை மணவிலக்கு செய்தேன். எனக்கு மிகவும் பிடித்தமான அடிமைப் பெண் ஒருத்தியை அழைத்துக்கொண்டேன் என்னுடைய பயணம் தொடர்ந்தது என்கிறார் இபுன்பத்தூதா. ***

எத்தனை எத்தனை திருமணங்கள் இப்னுபதூதா செய்துள்ளார். அதிலும் முகமது பின் துக்ளக்கினால் பதவி பெற்ற ஷரீப் ஜலாலுதீன்

---

* முற்கூறிய நூல் பக்கம் 433.

** முற்கூறிய நூல் பக்கம் 438, 439.

*** முற்கூறிய நூல் பக்கம் 447

அசன்ஷா முகமதுபின் துக்ளக்கிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்து தனி அரசை அமைத்துக் கொண்டவர். அவருடைய சகோதரியை டில்லியிலிருந்து தற்போது திருமணம் செய்து கொண்ட இப்னுபதூதா முகமது பின் துக்ளக் பற்றி எவ்வாறு உயர்வாக எழுதியிருப்பார் என்று எதிர்பார்க்க முடியும்?

ஜியா உத்தீன் பரணி

உத்திரப்பிரதேசத்தில் பரன் எனுமிடத்தில் பிறந்தவர் ஜியா உத்தீன் பரணி. கி.பி. 1356 இல் அவர் தனது நூலை எழுதி முடித்தபோது அவரது வயது 74. முகமது பின் துக்ளக் மறைந்தது கி.பி. 1351 (ஹிஜ்ரி 752). அப்போது ஜியாவுத்தீன் பரணியின் வயது 67. முகம்மது பின் துக்ளக் அரியணையில் அமர்ந்தபோது பரணியின் வயது நாற்பது.

கியாஸுதீன் பால்பன் இறந்தபோது பரணியின் வயது ஒன்று தான் (கி.பி. 1266 - 1286) அதாவது ஜியாவுத்தீன் பரணி கியாசுதீன் பால்பனின் இருபதாண்டு ஆட்சியைப் பற்றி விரிவாக அதிகமாக எழுதியுள்ளார்.

அலாவுத்தீன் கில்ஜி

அலாவுத்தீன் கில்ஜி 1296 - 1316யின் இருபதாண்டுகள் ஆட்சி பற்றி ஜியாஉத்தீன் பரணி விரிவாக எழுதியுள்ளார்.

முகம்மது பின் துக்ளக் 26 வருடங்கள் ஆட்சி பற்றி சுருக்கமாக

முகமது பின் துக்ளக்கின் 26 வருடங்கள் ஆட்சி முழுமையிலும் ஜியாஉத்தீன் பரணி இருந்தார். ஆனால் முகம்மது பின் துக்ளக் ஆட்சி பற்றி மிகச் சுருக்கமாகவே எழுதியுள்ளார்.

சூழ்ச்சியும் இரகசியமும்

ஜியாவுத்தீன் பரணி முஹம்மத் பின் துக்ளக் ஆட்சி வரலாற்றை ஒன்றன் பின் ஒன்றாகவும், கால ஆராய்ச்சியுடனும் எழுதவில்லை. 26 வருட ஆட்சிக்கால நிகழ்ச்சிகளைச் சுருக்கி சில அத்தியாயங்களாகப் பிரித்து முதல் ஆண்டில் ஓர் விஷயத்தை முகம்மது பின் துக்ளக்கின் இருபதாம் ஆண்டு ஆட்சி குறித்த வரலாற்றோடு கலந்துவிடுகிறார். வரலாற்றைப் படிப்பவர்களை குழப்பிவிடுகிறார். அவர் கூறுவதை

படிப்பவர்களை நம்பவைத்து விடுவார். ஜியாஉத்தீன்பரணி எழுதிய முகமது பின் துக்ளக் வரலாறு கால வாரியாக ஒழுங்காக எழுதப்படவில்லை. முகம்மதுபின் துக்ளக் ஆட்சி குறித்து வரலாறு எழுதும் விஷயத்தில் ஜியாவுத்தீன் பரணி ஏன் இத்தகைய பிழை செய்தார்? நாம் ஆராயவேண்டும். இதில் ஏதோ வஞ்சனையும், சூழ்ச்சியும் இரகசியமும் இருப்பதாகத் தோன்றுகிறது.

தாரிக் - இ - பிருஷ்ஷாய (Tarikhi - Firuz Shahi)

தாரிக் இ பிருஷ்ஷாயி என்ற நூலைத் தந்தவர் ஜியாவுத்தீன் பரணீ.

W.N. லீஸ்

டபின்யூ.என்.லீஸ் (W.N.Lees) *பதிப்பித்தது.*

எஸ்.அகமதுகான் - கபீர்உத்தீன்

S.Ahmadkhan *மற்றும்* Kabir ud-din Bibliotheca Indica, Calcutta 1860 - 1862 Extrrats Translation History of India as told by its own Historians translated by H.M.Elliot and J.Dowson Volume III, Page 93 - 268. *ஜியாவுத்தீன் பரணீ நூலின் சுருக்கம் எலியட் மற்றும் டௌசனால் தரப்பட்டுள்ளது.*

நேர்மையற்ற வரலாற்று ஆசிரியர்

வரலாறு ஜியாவுத்தீன் பரணிக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. அதன் பயனைப் பற்றி அடிக்கடி எடுத்தியம்பி உள்ளார். மதி நுட்பம் வாய்ந்தவர்களே வரலாறு படிக்கும் தகுதியினைப் பெற்றவர்கள் ஆவர். என்பது பரணீயின் கருத்தாகும்.

குறுகிய மனப்பான்மை உடையவர்களும், அற்பர்களும் வீணர்களும், கயவர்களும் வரலாறு படிப்பதனால் பயனை அடையமுடியாது என்று எண்ணிய பரணி வரலாற்றாசிரியர் உண்மையை உரைக்கவேண்டும்.

பாரபட்சமின்றி நடக்கவேண்டும் என்றெல்லாம் சொல்லுவார். ஆனால் தான் எழுதிய வரலாற்று நூலை எவ்வாறு எழுதினார் என்பதை விவாதத்திற்கு வைத்தாக வேண்டியுள்ளது.

தமது புரவலரான சுல்தானுடைய கோபத்திற்கு இலக்காகக் கூடாது என்பதற்காக பரணீ தமது நூலில் குறிப்பிட வேண்டிய

நிகழ்ச்சிகளைச் சில வேளைகளில் குறிப்பிடத்தவறி விட்டார். *பரணீ சில முக்கிய நிகழ்ச்சிகளை சரி வர எடுத்துச் சொல்லத் தவறி விட்டார் என்பதனை எலியட் சுட்டிக்காட்டுகிறார்.* அதனால் பரணீயை நேர்மையற்ற வரலாற்றாசிரியர் என்று எலியட் குறிப்பிட்டுள்ளார்.*

தேதிகளும் - தவறுகளும்

பரணீயின் வரலாற்று நூலில் தேதிகள் குறிப்பிடுவதில் கவனம் செலுத்தவில்லை. பல நிகழ்வுகள் எப்போது நடைபெற்றன என்பதை பரணீ எடுத்துரைக்கவில்லை. சில தேதிகள் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. சில நிகழ்வுகளின் தேதிகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கூறப்படவில்லை. அவற்றை ஒழுங்காகவும் அமைக்கவில்லை.

விருப்பு - வெறுப்பு

வரலாற்று நிகழ்வுகளை எழுதுகிறபோது சில இடங்களில் அவரது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன.**

17 ஆண்டுகள் அரசவையில்

முகமது பின் துக்ளக்கின் அரசவையில் 17 ஆண்டு காலம் பணியாற்றியவர் ஜியாவுத்தீன் பரணீ. முகமது பின் துக்ளக் மறைந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே அவரது நூலை எழுதி முடித்தார். (1356 – 1357). பொதுமக்கள் முகம்மதுபின் துக்ளக்கைப் போற்றிப் புகழ்ந்ததை ஜியாவுத்தீன் பரணீ ஒப்புக்கொள்கிறார். ஆனால் சின்னஞ்சிறு குற்றங்களைத் தேடி தேடிக் கண்டுபிடித்து அவற்றிற்கு மெருகிட்டு விளக்கம் தருவதில் சாமர்த்திய சாலியாகத் திகழுகிறார்.

பிற்காலமும் முற்காலமும்

பிற்காலத்தில் நடந்த செய்திகளை முற்காலத்துடன் சேர்த்தும் வரலாற்றை வாசிப்பவர்களை குழப்பமடையச் செய்கிறார் ஜியாவுத்தீன் பரணீ.

★ முற்கூறிய *Elliot* இந்திய வரலாறு நூல் தொகுதி III பக்கம் 96.

★★ டி.ஆர்.இராமச்சந்திரன், டில்லி சுல்தானியத்தின் வரலாறு 1206 முதல் 1320 வரை முதல் பாகம், சென்னை, 1977, பக்கம் 31.

வெகு தந்திரம்

முகமது பின் துக்ளக்கின் ஆட்சியை மிகச் சுருக்கமாக ஜியாவுத்தீன் பரணீ எழுதியிருந்தபோதிலும் அவருடைய பண்பு நலன்களை விளக்குகிறபோது, அவற்றுக்கு இடையில் கஷ்டப்பட்டு ஒரு சில வாக்கியங்களைத் திணித்து முகமதுபின் துக்ளக்கை கெட்டவரென்று கருதும்படி செய்து விடுகிறார்.

புகழும் வசைமாரியும்

முகமதுபின் துக்ளக்கை ஜியாவுத்தீன் பரணீ புகழ்ந்து வசைமாரி பொழிகிறார். முகமது பின் துக்ளக் மீது குற்றங்கூறி பல பக்கங்களை எழுதியுள்ளார்.

பழைய புதிய சட்டங்கள் என்ற குழப்பம்

முகமதுபின் துக்ளக் பழங்காலச் சட்டங்களையும் பழக்கங்களையும் நீக்கிவிட்டு, புதிய சட்டங்களைப் புகுத்தி விட்டதாகவும், அரசாங்கத்தின் எல்லாத்துறைகளிலும், இவ்வாறு செய்ததாகக் ஜியாவுத்தீன் பரணி கூறுகிறார். அந்தப் புதிய முறைகளும், சட்டங்களும் என்னவென்று பரணீ எடுத்துக்காட்டாமல் மறைத்து விடுகிறார். ஓரிடத்தில் புதிய சட்டங்கள் அறிவுக்கு நல்லனவாகத் தோன்றினாலும் அதனைச் செயலாற்றிட முடியாது என்பார்; எங்கேனும் முகமது பின் துக்ளக்கின் புதிய சட்டங்களைப் பற்றி பரணீ விளக்கிடவே இல்லை.

மிகவும் நிலை தவறிய குழப்பம்

ஜியாவுத்தீன் பரணீ தான் கண்ணால் கண்ட விஷயங்களே சரித்திரமாக எழுதியுள்ளார் என்ற நம்பிக்கையில் பிற்காலச் சரித்திர ஆசிரியர்கள் அவரைப் பின்பற்றி அப்படியே எழுதி முகமதுபின் துக்ளக்கை குறை கூறிவிட்டார்கள். ஜியாவுத்தின் பரணீயின் **தாரீக் பைரேஸ் ஷாஹி** நூல் மிகவும் நிலைதவறி குழப்பமாக எழுதப்பட்ட நூலாகும்.*

அநியாயச் செயல்

மௌலானா ஜியாவுத்தீன் பரணீ முகமது பின் துக்ளக்கின் ஆட்சியை விளக்கும் பொழுது அவரது பண்பு நலன்களை மறைத்துவிட்டு துக்ளக்கின் சிறு பிழைகளை எல்லாம்

★ சையத் இப்ராஹிம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி பக்கம் 160 - 162.

மலையைப் போன்று பெரிதாக்கி விட்டார். இவ்வாரு அவர் செய்த அநியாயச் செயல் ஏதோ பழிவாங்கும் எண்ணத்துடன் செய்ததாகத் தோன்றுகிறது.

உண்மையைத் தைரியமாகக் கூறாதவர்

பெரிஷ்டா என்ற முஸ்லிம் வரலாற்றாசிரியர் ஜியாவுத்தீன் பரணீ சில நேரங்களில் உண்மையைத் தைரியமாக எடுத்துக் கூறவில்லை என்பதற்காக அவரைக் கண்டித்துள்ளார் என்பர் பேராசிரியர் டி.ஆர்.இராமச்சந்திரன்.★

பழி வாங்கும் எண்ணம்

ஜியாவுத்தீன் பரணீ, முகமது பின் துக்ளக் மீது பழிவாங்கும் எண்ணம் ஏற்பட்டது எதனால் என்பதனைச் சொல்ல வேண்டிய கட்டாயமுள்ளது. ஜியாஉத்தீன் பரணீயின் தந்தையார் வருவாய்த்துறையில் பணியாற்றியவர். அதனால் உயர் அரசாங்க அதிகாரிகளுடன் பழகுவதற்கு பரணீக்கு வாய்ப்பாக இருந்தது.

சதியாலோசனை ஸ்தலம் பர்ன்

தோஆப் (உத்திரப்பிரதேசம்) என்ற மாகாணத்தில் பர்ன் என்ற இடம் உள்ளது. கங்கைக்கும் யமுனைக்கும் இடையில் மிகவும் வளம் பொருந்திய மாகாணம். இங்குள்ள மக்கள் செல்வந்தர்கள்; அரசாங்கத்திற்கு விரோதமாக அடிக்கடி கலகம், செய்தவர்களாய் இருந்தனர். பர்ன் என்ற இடம் அரசாங்கத்தை எதிர்த்து சதி ஆலோசனை செய்கின்ற கூட்டத்தினருக்கு முக்கிய ஸ்தலமாக இருந்தது. இந்த இடத்தில் பிறந்தவர்; வளர்ந்தவர்; வசித்தவர் ஜியாவுத்தீன் பரனீ.

அமைதியும் சமாதானமும்

முகமது பின் துக்ளக் தனது அரசாங்கத்தின் கீழ் உள்ள இப்பகுதியில் அமைதியையும் சமாதானத்தையும் நிலவச் செய்திட நடவடிக்கைகளை எடுத்தார்.

தண்டவரி

'பர்னி'யிலுள்ள மக்கள் அரசாங்கத்திற்கு விரோதமாக பகிரங்கமாகக் கலகஞ் செய்தனர். ஆனால் முகமது பின்

★ டில்லி சுல்தானியத்தின் வரலாறு பாகம் 1, சென்னை 1977 பக்கம் 31.

துக்ளக்கின் படைகள் அக்கலகத்தை அடக்கியது. அத்துடன் அங்குள்ள மக்கள் மீது தண்ட வரியும் விதிக்கப்பட்டது. கலகம் அடங்கியது. இதனால் ஜியாவுத்தீன் பரணீயும் அவரது குடும்பத்தாரும், இதர உறவினர்களும் பர்னியில் சிரமங்களையும் கஷ்டங்களையும் அடைந்திருந்தனர்.

விரோதமாகச் சரித்திரம்

பின் தனது தந்தை பணியாற்றும் டில்லிக்கு வந்தார் ஜியாவுத்தீன் பரணீ.

முகமதுபின் துக்ளக் ஆட்சியில் அவரது படையினரால் தனது ஊரில் அரசாங்கத்திற்கு எதிராக நடந்த கலகம் அடக்கப்பட்டு, தானும் தனது உறவினர்களும், இதர மக்களும் தண்டவரி செலுத்தியது வரலாற்று நிகழ்வு. இது ஜியாவுத்தீன் பரணீ முகமது பின் துக்ளக்கிற்கு விரோதமாக சரித்திரம் எழுதிட காரணமாயிற்று.★

அடிமை (முந்தைய துருக்கிய) சுல்தான்கள் அரசாட்சிக் காலத்தில் ஜியாவுத்தீன் பரணீயின் குடும்பம் வெகு சாதாரண நிலையில் இருந்தது.

கில்ஜி சுல்தான்கள் ஆட்சியில் அந்தக் குடும்பத்தில் பலர் அரசாங்க உத்தியோகங்களும் உயர் பதவிகளையும் ஜாகிர்களையும் பெற்று புகழ்பெற்ற நிலைக்கு வந்தனர்.

முகம்மது பின் துக்ளக் ஆட்சி காலத்தில் ஜியாவுத்தீன் பரணீயின் குடும்பத்தின் உயர்வு செல்வாக்கு வீழ்ச்சியுற்றது. அது பரணீயின் உள்ளத்தில் கோபக் கனலானது. எனவே அவர் எழுதிய முகம்மது பின் துக்ளக் சரிதையில் குறைவாக எழுதினார். இப்னுபதூதா, ஜியாவுத்தீன் பரணீயின் சார்பு வரலாற்றுக் குறிப்புகளை வைத்து முகமது பின் துக்ளக் மீது தந்தையைக் கொன்றவர் என்று கூற முடியாது.

★ மௌலவீ அஹ்மத் ஸையீத்சாஹிபு, ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர் இந்திய முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி இந்திய சரித்திரத் தவறுகளின் விளக்கம், ஸைபுல் இஸ்லாம் பிரஸ், சென்னை 1935, விலை அணா 10. பக்கம் 18 - 19. (நூல் மொத்தம் 80 பக்கங்கள்)

ஐன் உல்முல்க் முல்டானி

ஐன் உல் முல்க் முல்டானி (Ainu'1 Muk-Multani) என்ற சமகாலத்தவர் தாம் எழுதிய கடிதம் ஒன்றில் முகமது பின் துக்ளக் தனது தந்தையை வரவேற்க ஆப்கன்பூரில் மூன்று நாட்களில் எழுப்பிய அரண்மனை உறுதியாகக் கட்டப்பட்டிருந்ததைக் குறிப்பிட்டுள்ளார். இதில் சதி எதுவும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ShihabudDaula சிகாபுத்தௌலா என்ற பூட்டான் கவர்னருக்கு ஐன்உல்முல்க் முல்டானி எழுதிய அனுதாபக் கடிதத்தில் இந்தக் குறிப்பு காணப்படுகிறது.*

It Clearly mentions the A fghanpur Palace to have been extremely strong. **

கடித வாசகம்

Reached afghanpur and took his abode there in the palace which had strong foundations and sound Pillars. மூன்று நாட்களில் கட்டிய மாளிகை உறுதியானதாகவும் அடிப்படை பலமானதாகவும் இருந்தது என்று ஐன்உல் முல்டானி எழுதிய கடித முழுமையும் ஆகா மஹிதி ஹூசைனால் தரப்பட்டுள்ளது.***

முபாரக்ஷா

கில்ஜி வம்சத்து கடைசி அரசர் முபாரக்ஷா (கி.பி. 1316 – 1320) அலாவுதீன் கில்ஜியின் மகன் அவரது நற்பெயருக்கு

* *Asiatic Society of Bengal, MS No 338 - F 33a, Letter No. XIII (Written in persian naskb-taliq style)*

** *'The Tughluq Dynasty (Containing a revised and enlarged edition of the Rise and fall of Mohammad bin Tughlug thesis approved for the Degree of. Doctor of Philosophy by the university of London in 1935 and Published in London with a grant from London University Calcutta University, 1963 September, Reprint, S.Chaand co New Delhi, 1976, Page 81. (Book Totally 675 Pages). Agha Mahdi Husain, M.S.Phd., London D.Lit, Sarbonne, Paris)*

*** முற்கூறிய நூல் பக்கம் 619, 620.

களங்கம் ஏற்படுத்தியவர். இவரை குஷ்ருகான் படுகொலை செய்தார்.

குஷ்ருகான்

குஷ்ருகான் இந்த சமயத்தைச் சார்ந்தவர்; பிறகு ஹசன் என்ற பெயரில் முஸ்லிமாக மாறியவர் அட்டூழியக் கொலைகார ஆட்சி நடத்தியவர். எனவே அவரை ஒழித்துக்கட்ட முடிவு செய்யப்பட்டது.

காசி மாலிக் (Ghazimalik)

இஸ்லாம் மார்க்கத்திற்கும், புனித திருகுர்ஆன் வேதத்திற்கும் அவப் பெயர் தருகின்ற குஷ்ருகானை காசி மாலிக் கொன்றார். கி.பி. 1320 இல் ஆட்சிக்கு வந்தார். இந்த காசி மாலிக் தான் கியாசுதீன் துக்ளக் அதாவது முகமதுபின் துக்ளக்கின் தந்தையாவார்.

உலூக்கான்

முகமதுபின் துக்ளக்கின் துவக்ககாலப் பெயர் உலூக்கான். குஷ்ருகான் ஆட்சியின்போது உலூக்கான் (Ulughkhan) அமீர் பேக் என்ற பதவியில் இருந்தார். (Amir - Commander; the third highest official grade of the Delhi Sultanat தில்லி சுல்தானிய ஆட்சியில் மூன்றாவது தலைமை அலுவலகப் பொறுப்பு) கமாண்டர். குஸ்ரூகானின் ஆட்சி முறை பிடிக்காததால் வெளியேறி தந்தை காசி மாலிக் (கியாசுத்தீன் துக்ளக்) இடம் வந்தார். குஷ்ரூகானை ஒழித்திட தனது தந்தையார் எடுத்த முயற்சிகளுக்குத் துணை நின்றவர் உலூக்கான் என்ற முகமதுபின் துக்ளக்.

துக்ளக் உலூக்கான்

குஸ்ரூகானை வீழ்த்தி தான் வெற்றிபெற உதவிய தனது மைந்தன் உலூக்கானுக்கு துக்ளக் உலூக்கான் என்ற பட்டத்தை வழங்கி பாராட்டியவர் கியாசுத்தீன் துக்ளக்.

தெலுங்கானா படையெடுப்பு

தனது ஆட்சியின்போது தெலுங்கானா படையெடுப்பு நிகழ்த்திட உலூக்கான் என்ற முகமது பின் துக்ளக்கையே காசி மாலிக் என்ற கியாசுத்தீன் துக்ளக் அனுப்பி வைத்தார்.

அப்போதும் உலூக்கான் கலகம் செய்ய முயன்றார் என்று அமீர்கள் பலர் கியாசுத்தீன் துக்ளக்கிடம் புகார் கூறினார்கள்.

உலூக்கான் என்ற முகமது பின் துக்ளக் மீது புகார் கூறிய அமீர்கள் தண்டிக்கப்பட்டனர். **கியாஸ்உத்தீன் துக்ளக் முகமதுபின் துக்ளக்கைத் தண்டித்ததாக அறிய முடியவில்லை.**

தெலுங்கானா இரண்டாவது முறை

தெலுங்கானாவிற்கு இரண்டாவது முறையாகப் படையெடுத்திட உலூக்கானையே கியாஸ் உத்தீன் துக்ளக் அனுப்பிவைத்தார்.

பகர ஆட்சிக்குழுவில் இடம்

தனது வங்காளப் படையெடுப்பின்போது கியாஸ்உத்தீன் துக்ளக் தக்காணத்திலிருந்து முகமதுபின் துக்ளக்கை வர வழைத்துப் பகர ஆட்சிக்குழுவில் இடம் பெறச் செய்தார்.

அரண்மனையைக் கட்டச் சொன்னவர்

தற்காலிகமாக அரண்மனையை அமைத்திடச் சொன்னவர் கியாஸ் உத்தீன் துக்ளக்தான். எனவே தற்காலிக அரண்மனை அமைத்து அதை யானைகள் வரச் சொல்லி விழச் செய்யச்செய்தவர் முகமதுபின் துக்ளக் என்பதை ஏற்க இயலுமா? ஏனென்றால் யானைகளை தற்காலிக அரண்மனை முற்றத்திற்குள் கொண்டு வரச் சொன்னதே கியாஸ்உத்தீன் துக்ளக் தான். எனவே இதில் சதி இருக்க வாய்ப்பு உள்ளதா?

தாயாருடன் சுமூக உறவு

முகமது பின் துக்ளக்கின் தந்தை கியாசுத்தீன் துக்ளக் மறைந்ததற்குப் பின் அவரது துணைவியார் முகமது பின் துக்ளக்கை எதிர்த்தார் என்றோ, பாசமில்லாது இருந்தார் என்றோ எந்தக் குறிப்பும் இல்லை. கணவனைக் கொன்றவன் மகனாக இருப்பினும் அவனை எந்த மனைவியாவது வெறுக்காமல் இருக்க முடியுமா? அப்படி ஏதேனும் வரலாற்றில் குறிப்புக்கள் இல்லை. முகமது பின் துக்ளக்கிற்கும் அவரது தாயாருக்கும் அவரது தந்தையின் அகால மரணத்திற்குப் பின்னர் எந்தவிதக் கருத்து வேற்றுமையும் இருந்ததில்லை.

சகோதரர்கள் சம்மதத்துடன் சக்கரவர்த்தி

முகமதுபின் துக்ளக்கின் சகோதரர்கள் நால்வர் பஹ்ராம்கான் (Bahramkhan), ஜாபர்கான் (Zafarkhan), மஹ்மூதுகான் (Mahmudkhan), நஸ்ரத்கான் (Nusratkhan), ஆகிய நான்கு சகோதரர்களின் சம்மதத்துடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.★

சகோதரர்கள் எவ்வித எதிர்ப்பும் இல்லை

முபாரக்கான், நஸ்ரத்கான், மசூத்கான், முகமதுகான் என்றும் நால்வரை குறிப்பிடுவர். முகமதுபின் துக்ளக் பட்டம் பெற்று அரசாள வந்தபோது எவ்வித எதிர்ப்பும் இன்றி இவர் அரியணை ஏறினார். இவருடன் பிறந்த நால்வரும் எவ்வித எதிர்ப்புணர்வினையும் காட்டவில்லை என்பர் டாக்டர் கி.ர.அனுமந்தன், ந.க.மங்கள் முருகேசன்.★★

ஷேக் நிஜாமுதீன் அவுலியா

ஷேக் நிஜாமுத்தீன் அவுலியா பதாயூன் நகரில் பிறந்தவர்கள் இவர்களது காலம் கி.பி. 1244 – 1325 முகமது பின் துக்ளக் இவர்கள் மீது மிகுந்த அன்பும் பற்றும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்.

அரசியல் தலையீடு இல்லை

ஷேக் நிஜாமுத்தின் அக்கால அரசியலில் தலையிட்டதாக நமக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. அரச சபைகளுக்கும் அவர்கள் செல்வதில்லை. அப்படிப்பட்ட புனிதரான ஒருவர் முகமது பின் துக்ளக்கின் மனத்தில் ஆசைகளை வளர்த்தார் என்றும், அவருடன் நெருங்கிப் பழகியதால் முகமதுபின் துக்ளக்கை தந்தையார் கியாஸ் உத்தீன் வெறுத்தார். எனவே கியாஸ்உத்தீனை முகமது பின் துக்ளக் கொல்வதற்கு சதி செய்தார் என்று கூறுவது எந்தவிதத்திலும் பொருத்தமாக இல்லை.

★ *Ziya-ud-din Barani, Tarikh - i - Firozshahi Bibiotheca Indica Series Calcutta, 1891, Page 428.*

★★ இந்திய வரலாறு கி.பி. 1206 முதல் கி.பி. 1773 வரை பட்டப்படிப்பிற்குரியது. சென்னை, 1976, பக்கம் 71

கான்கா ஆசிரமம்

நிஜாமுதீன் அவ்லியா (இறைநேசச் செல்வர்; மெய்ஞ்ஞானி), கான்கா (Khanqah), (a house of mystics) ஆஸ்ரமம் நடத்தி வந்தார். அல்லாஹ் குறித்தும் அவனது திருத்தூதர் அண்ணல் முஹம்மது (ஸல்) குறித்தும் பாடல்கள் பாடப்படும். சிலர் இது இஸ்லாமிய சட்டத்திற்கு விரோதமானது என்று கியாசுத்தீன் துக்ளக்கிடம் புகார் தெரிவித்தனர். விசாரணை நடைபெற்றது. இறுதியில் மார்க்கத்திற்கு எதிராக எதுவும் நடைபெறவில்லை என்பது உறுதியாயிற்று.

வங்காளத்திலிருந்து வரும் முன்

கி.பி.1325இல் (ஹிஜ்ரி 725), வங்காளத்திலிருந்து நாம் தில்லிக்கு வருமுன்னர் நீர் டில்லியிருந்து வெளியேறிவிடவேண்டும் என்று கியாசுத்தீன் துக்ளக் நிஜாமுதீன் அவுலியாவிற்கு கட்டளை பிறப்பித்திருந்தார்.

திஹ்லி தூர் அஸ்த்

அதைக்கேட்ட நிஜாமுத்தீன் அவ்லியா 'திஹ்லிதூர் அஸ்த்' (Delhi is Still far off (Hunuz Dillidurat) **தில்லி தூரத்தில் இருக்கிறது** என்று கூறினார்கள். கியாசுத்தீன் துக்ளக் டில்லி வருவதற்கு முன் அவர் தங்கியிருந்த கட்டிடம் திடீரென சாய்ந்து மரணமடைந்தார். இவ்வாறு கதை கட்டப்படுகிறது. பரணி, அமீர் குஸ்ரூ போன்ற பல வரலாற்று ஆசிரியர்கள் இதை ஏற்கவில்லை; மறுத்துள்ளனர்.

ரபியல் அவ்வல் 725 அல்ஹிஜ்ரி

இஸ்லாமியரின் மூன்றாவது மாதமான ரபியுல்அவ்வல் (Rabi-us-Awwal) ஹிஜ்ரி 725 இல் மறைந்தவர் கியாசுத்தீன் துக்ளக்.*

நிஜாமுத்தீன் அவுலியா

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் அவுலியா மறைந்தது இஸ்லாமியரின் நான்காவது மாதமான ரபியுல் ஆகிர் 18 (ரபீ உத்தானி) இரண்டாவது ரபிஃ) (Rabi-us-sani) ஹிஜ்ரி 725 இல் ஆனால்

★ *Yahya b Ahmed sirhindi Tarikh-i-mubarak shahi, Edited K.B.Hidyat Hosain, English Translatin K.K.Basu Gaekwad oriental Series 1932, Page 96.*

அதற்கு 40 நாட்களுக்கு மேலாக அவர்கள் கடுமையாக சுகவீன முற்றிருந்தார்ர்கள்.* நிஜாமுதீன் அவுலியா அரை நினைவுடன் அந்த நாட்களில் இருந்தார்கள். யாருடனும் பேசிடவும் இல்லை.

காலிக் அகமது நிஜாமி

காலிக் அகமது நிஜாமி ஷேக்நிஜாமுதீன் அவுலியா எனும் நூலை ஆங்கிலத்தில் 1991 இல் 222 பக்கங்களில் தந்துள்ளார் அதில் பக்கம் 119, 123 வரை நிஜாமுத்தீன் அவுலியாவிற்கும் கியாசுத்தீன் துக்ளக்கிற்குமான உறவைக் குறித்து விவரித்துள்ளார்.

"Some reckless and uncritical writers, have cast as persions on the Character of the shaikhand have expressed the view that he was involved in a conspiracy against the sultan with the prince this is absurd. No one who has slightest knowledge of the shaikh's character can entertain such suspicions."

சீராய்வற்ற கூற்று

சீராய்வற்ற திறனாய்வு முறைப்படாத, பொருட்படுத்தாத அசட்டையான, எண்ணாமல் துளிர்கிற விளைவைப்பற்றிக் கவலைப்படாத துடுக்கான எழுத்தாளர்கள் சிலரின் கூற்று பொருளற்றது. பொருத்தமில்லாதது நகைப்புக்கிடமானது. அறிவில் குறைந்தது. என்று கூறிவிட்டு தொடர்ந்து சொல்வார்.

மாஸிக்

Mzik, Die Reise des Arabers Ibn Batuta durch Indian and China, Hamburg, 1911. என்ற நூலில் பக்கம் 103 இல் இது குறித்து கருத்து தெரிவித்துள்ளார். Such a view is, according to Mzik, untenable and unhistorical ஏற்றுக் கொள்ள இயலாத வரலாற்றுக்கு மாறான குற்றச்சாட்டு இது என்று மாஸிக் கூறுவதை ஆகாமகதி ஹூசைன் தனது நூலில் மேற்கோள் காட்டுகிறார். **

★ *Syed Muhammad b mubarak kirmani Known as Amir Khurd, Siyar - u' Auliya, Page 154.*

★★ *Agha Mahdi Husain, The Rise and Fall of Muhemmad bin Tughlug Delhi, Second Reprint 2012, Page 63.*

போரா

எம்.ஐ.போரா நிஜாமுத்தீன் அவுலியா குறித்து எழுதிய கட்டுரையில் கியாசுத்தீன் துக்ளக்கின் மரணத்திற்கும் நிஜாமுத்தீன் அவுலியாவிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை அக்குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்று கூறியுள்ளார்.*

காலிக் அகமது நிஜாமி

மாசிக், போரா மற்றும் சிலரது கூற்றுப்படி கியாசுத்தீன் துக்ளக்கிற்கும் நிஜாமுதீன் அவுலியாவிற்கும் இடையே கூறப்படும் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்று காலிக் அகமது நிஜாமி கூறியுள்ளார்.

Mzik - Bohrah and others have expused the absurdity and baselessness of this charge. **

உல்ஸ்லிஹூக்

தற்கால வரலாற்றாசிரியர் உல்ஸ்லிஹூக் 1922 இல் எழுதிய கட்டுரையில் முகமதுபின் துக்ளக்கை குற்றஞ்சாட்டியுள்ளார். ***

ஈஸ்வரி பிரசாத்

தற்கால வரலாற்றாசிரியரான ஈஸ்வரி பிரசாத் காராநா துருக்கியர் வரலாற்று நூலில் உல்ஸ்லிஹூக்கின் கருத்தை நியாயப்படுத்தியுள்ளார். ****

மொய்னுல் ஹக்

வரலாற்றாசிரியர் மொய்னுல் ஹக் முஸ்லிம் பல்கலைக்கழக இதழில் 1939 இல் முகமது பின் துக்ளக் தந்தையைக்

★ *M.I.Borah, Nizam - Uddin Auliya and his Relatios with his Contemporary Bovereigns, Proceedings of the Indian History Congress Volume III Page 649-660.*

★★ *Khali & Ahmad Nizami, The Life and Times of Shaikh Nizamuddin Auliya, New Delhi, 1991, Page 121.*

★★★ *Journal of the Royal Asiatic society - July 1922 page 330.*

★★★★ *Ishwari Prasad, A History of Qaraunah Turks in India, Allahabad, 1936 Page 46.*

கொன்றவரா? என்ற கட்டுரையில் இதுகுறித்து விரிவாக ஆராய்ந்து எழுதி **முகமது பின் துக்ளக் குற்றமற்றவர் என்பதனை நிருபணஞ் செய்கிறார்.**★

ஆகா மஹதி ஹுஸைன்

இலண்டனில் 1935 இல் டாக்டர் பட்டத்திற்காக துக்ளக் வம்சம் குறித்து ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்றவர் ஆகா மஹதி ஹுஸைன் அந்த நூல் 1963 இல் Thacker spink Calcutta *வில் இருந்தும்,* S.Chand & Co *டில்லியிலிருந்து 1976 இலும் 675 பக்கங்களில் வெளிவந்துள்ளது. 1938 இல்* The Rise and Fall of Muhamad bin Tughluq *என்றும் நூல்* Luzac *வெளியீடாக வந்தது. 1972 இல் டில்லியிருந்து 274 பக்கங்களிலும், 2012 இல் 254 பக்கங்களிலும் அது நூலாக வெளிவந்துள்ளது. இதில் விரிவாக ஆராய்ந்து முகமது பின் துக்ளக் குற்றமற்றவர் என்று தெளிவுபடுத்தியுள்ளார்.*

Mahdi Husain and Moinul Haq have exonerated muhammad bin Tughluq of complicity in any conspiracy against Ghiyas-ud-din and have shown that the sultan's death was due to accident. ★★

காலிக் அஹமது நிஜாமி

கியாசுத்தீன் துக்ளக் மறைவு விபத்தினால்தான் நிகழ்ந்தது. அதில் முகமது பின் துக்ளக்கின் சதி ஏதுமில்லை என்று காலிக் அஹமது நிஜாமி தெளிவுபடுத்தியுள்ளார்.

பரனீயின் சுருக்கமான கூற்று

கியாசுத்தீன் துக்ளக் மறைவுபற்றி பரனீ மிகச் சுருக்கமாகக் கூறியுள்ளார் ஆப்கன்பூரில் அமைக்கப்பட்டிருந்த மரத்தாலான அரண்மனைக்குச் சென்ற பிறகு அனைவரும் உணவருந்தினார்கள். மலிக்குகளும் அமீர்களும், கைகளை

★ *S.Moinul Haq, Was Muhammad Bin Tughluq a Patricide? Muslim University Journal 1939.* இவர் முகமது பின் துக்ளக்கின் தக்காணக் கொள்கை குறித்தும் கட்டுரை தந்துள்ளார்.
The Deccan Policy of Muhammad bin Tughluq Proceedings of Indian History Congress Volume VII Page 269 - 276.

★★ காலிக் அகமது நிஜாமி முற்கூறிய ஆங்கில நூல் பக்கம் 122.

கழுவுவதற்கு வெளியே வந்தனர். அப்போது ஆகாயத்திலிருந்து பூமியில் வாழ்ந்து வந்த மக்கள் மீது பேரிடி விழுந்தது. அதன் விளைவாக அரண்மனையின் கூரை திடீரெனக் கீழே விழுந்தது. அதன் கீழே உட்கார்ந்திருந்த (கியாசுத்தீன் துக்ளக் சுல்தான் அதனடியில் சிக்கி உயிரிந்தார்.

தெளிவில்லை

கியாசுத்தீன் துக்ளக்கோடு உடனிருந்த ஐந்து அல்லது ஆறு பேர்களும் மாண்டனர். பரனீ கூறும் விவரங்கள் இவ்வளவுதான். அப்போது என்ன நடந்தென்று தெளிவாக நமக்குக் கூறவில்லை.

பேரிடி

பேரிடி விழுந்தது. அல்லது பேரிடி போன்ற ஆபத்து வந்தது என்ற இருவிதமான பொருளை அவர் கூறுவதிலிருந்து பெற இயலும். பேரிடி என்பது பொருத்தமாக இல்லை. இடி போன்ற பெரிய ஆபத்து அப்போது ஆகாயத்திலிருந்து பூமிக்கு வந்தது என்பதனை, அந்த ஆபத்து எது என்பதை பரணீ விளக்கவில்லை. எனவே அவருடைய கூற்றானது சரித்திரத்திற்குப் சான்றாகப் பயன் தரவில்லை.

ஈஸ்வரி பிரசாத்

டாக்டர் ஈஸ்வரி பிரசாத் History of Mediaval India எனும் நூல் *1966* இல் அலகபாத்திலிருந்து வெளியிட்டார். *621* பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் பக்கம் *263* இல் முகமது பின் துக்ளக்கை குற்றவாளியெனக் கூறுகிறார். ஆனால் அதே பக்கத்தில் அடிக்குறிப்பில் தரும் செய்தியை அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

Barani does not Clearly State what happened he Simply says "**A thunder bolt** of a Calamity from heaven fell upon the sultan and he was with five or six others crused under the de bris"★

முன்னர் கூறியதுபோல வானத்திலிருந்து பேரிடி போல வந்தது மண்டபம் விழுந்தது. சுல்தான் கியாசுதீன் துக்ளக்கும் அவருடன் ஐந்து அல்லது ஆறு பேர்களும் மாண்டனர்.

★ *Ziau-o-din Barni, Tarik H-1 Firuz Shahi Bibliotheca Indica Calcutta, Page 452.*

எலியட் தவறான மொழி பெயர்ப்பு

பரனீயின் கூற்றை எலியட் தனது இந்திய வரலாற்றில் தவறாக மொழி பெயர்த்துள்ளார் என்று ஈஸ்வரி பிரசாத்தே கூறியுள்ளார்.

மின்னல்

Elliot has in correctly translated the Passage from his Translation it appears that **Lightning** fell upon the roof and the whole structure came downwith a crash. But this is not in agreement with text of Barani, *என்று ஈஸ்வரி பிரசாத் எலியட்டின் மொழி பெயர்ப்பில் உள்ள தவறைச் சுட்டிக்காட்டியுள்ளார்.*★

(பரனீயின் கூற்றை சரியாக மொழி பெயர்த்தவர் உல் ஸ்லிஹூக்)

தாரீக் இ-முபாரக் ஷாகி

Tarikh-i - Mubarak Shahi *தாரிக்கி முபாரக் ஷாகி எனும் பாரசீக நூலை* (Persian Text) *கல்கத்தாவில் 1931 இல் யகியாபின் அகமது அஸ் சிர்கிந்தி வெளியிட்டார்.*

கே.கே.பாசு

அதன் ஆங்கில மொழியாக்கத்தை K.K.*பாசு 1932 இல் வெளியிட்டார்.* Gaekwad's Oriental Series, Baroda, LXIII, (63) 1932

ஆர்.சி. மஜூம்தார்

The History and Culture of the Indian People *என்ற தலைப்பில் மும்பை (பம்பாய்) பாரதீயவித்யாபவன் இந்திய வரலாற்றை பதினொன்று தொகுதிகளாக தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. அதில் ஆறாவது தொகுதி தில்லி சுல்தானியம்; 913 பக்கங்கள்; இந்தத் தொகுதிகளுக்கான பொது ஆசிரியர் பேராசிரியர் ஆர்.சி.மஜூம்தார். அவர் கியாசுதீன் துக்ளக் குறித்த கட்டுரையையும் எழுதியுள்ளார். அந்த நூலில் பக்கம் 58 இல் ஆர்.சி. மஜூம்தார் குறிப்பிடுகிறார்.*

★ ஈஸ்வரி பிரசாத் முற்கூறிய நூல் பக்கம் 263

The Tariki-i-Mubarak Shahi neither refers to the lighting not to the deliberate murder.*

தாலீக் - இ - முபாரக் சாகி

கியாசுத்தீன் துக்ளக் மரணம் வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்டதல்ல என்று தாலீக் – இ – முபாரக் சாகி கூறுகிறதை ஆர்.சி.மஜூம்தார் கோடிட்டுக் காட்டுகிறார்.

கியாசுத்தீன் துக்ளக் 1325 பிப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் மறைந்தார் என்று கூறப்படுகிறது. அம்மாதத்தில் இடி ஏற்பட வாய்ப்பில்லை. மே மாதத்தில் நடந்திருக்கலாம் என்று ஆகா மகதி ஹூசைன் கருதுகிறார்.

6.9.1320

கியாசுதீன் துக்ளக் 6.9.1320 சனிக்கிழமை பதவியேற்றார்.** (ஷபான் மாதம் முதல் நாள் ஹிஜ்ரி 720) நான்கு வருடங்கள் நான்கு மாதம் ஆட்சி புரிந்தார்*** என்பார் உல்ஸ்ஸிஹூக்.

நான்கு வருடங்கள் பத்து மாதங்கள்

கியாசுத்தீன் துக்ளக் நான்கு வருடங்கள் பத்து மாதங்கள் ஆட்சி புரிந்தார் அவரது ஆட்சியின் கீழ் முகமது பின் துக்ளக் இருந்தார் என்பர் ஆகா மஹதி ஹூசைன்.

கியாசுத்தீன் மரணம்

ஆட்சிக்கு வந்தது 6.9.1320 சர் உல்ஸ்ஸிஹூக் கூற்றுப்படி 4 வருடங்கள் 4 மாதங்கள் அதாவது 1325 பிப்ரவரி அல்லது மார்ச் வரை ஆப்கன்பூரில் கியாசுத்தீன் துக்ளக் மறைந்தது 1325 பிப்ரவரி ஆகாமகதி ஹூசைன் கூறுவது கியாசுத்தீன் துக்ளக் ஆட்சி 4 வருடங்கள் 10 மாதங்கள் அதாவது 1325 சூலை

---

* *R.C,Majumdar, The Delhi Sultanate, Volume VI, Mumbai 1990, Page 58.*

** *Amir Khusrav, Tuquluq namah, Edited S.H.Faridabadi, Hyderabad, 1933, Page 132 - 134.*

*** சர் உல்ஸிஹூக் கேம்பிரிட்ஸ் இந்தியவரலாறு தொகுதி 3 பக்கம் 135.

வரையில் கியாசுத்தீன் துக்ளக் மறைந்தது. கி.பி. 1325 சூலையில் என்கிறார் ஆகாமதிஹூசைன். இதற்கு என்ன ஆதாரம்?

முகமதுபின் துக்ளக் நினைவுகள் எச்சக்கூறு முறிந்த துண்டு

முகமது பின் துக்ளக்கின் வரலாற்றின் முறிந்த துண்டுப்பகுதி, துண்டு துணுக்குகள் கொண்ட மீதியிருந்த பகுதி முடியாத பகுதி, எச்சக்கூறு அல்லது அறை குறையா விடப்பட்ட பகுதி ஒன்று உள்ளது.

பிரிட்டிஷ் மியூசியத்தில்

இலண்டன் பிரிட்டிஷ் மியூசியத்தில் முகமது பின் துக்ளக்கின் வரலாற்றின் ஒரு எச்சப் பகுதி உள்ளது.★அதன் பிரதியை ஆகாமகதி உசேனின் துக்ளக் பரம்பரை நூலில் தந்துள்ளார். ★★

1325 ஜூலை

இலண்டனில் பிரிட்டிஷ் மியூசியத்தில் நான்கு பக்கங்கள் அரபியில் உள்ள முகமது பின் துக்ளக் வரலாற்றின் துண்டுப்பகுதியில் கியாசுத்தீன் துக்ளக் மறைந்தது 1325 சூலை மாதம் என்று உள்ளது.

வங்காள அரசர் ஷம்ஸ் உத்தீன்

வங்காள அரசர் ஷம்ஸ்உத்தின் பிருஷ்ஷா கிபி 1322 இல் இறந்தார் அதையடுத்து அவரது நான்கு பிள்ளைகளும் பதவிக்காகப் போட்டியிட்டனர்.

கியாஸ் உத்தீன் பகதூர் Ghiyas -ud-din Bahadur

நான்கு பிள்ளைகளில் கியாஸ் உத்தீன் பகதூர் மிகுந்த பேராசைக்காரராய் இருந்தார் லக்னோதி (Lakhnauti) யிலிருந்த தமது சகோதரர் **ஷிஹாபுத்தீனைத்** துரத்தினார். பிறிதொரு சகோதரர் **குத்லூகான்** (Qutlukhan) கொல்லப்பட்டார். நாசீர் உத்தீன் என்ற சகோதரரை பலவாறு துன்புறுத்தினார்.

★ *Muhammad bin Tughluq memoirs of (A Fragment) British Museum, Add 25, 785.*

★★ *Tughliq Dynasty, New Delhi, 1976, 666*வது பக்கத்தினைத் தொடர்ந்து 4 பக்கங்கள் இதற்கு பக்க எண் தரவில்லை.

ஷிஹாபுத்தீன் - நாசிர் உத்தீன்

ஷிஹாபுத்தீனும், நாசிர் உத்தீனும் (Shihab-ud-din) அரசர் (Nasir-ud-din) கியாசுத்தீன் துக்ளக்கினுடைய உதவியை நாடினார்கள். வங்காள பிரபுக்கள் சிலரும் அவர்களுக்கு ஆதரவளித்தனர். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி டில்லியின் ஆதிக்கத்தை வங்காளத்தில் நிலைநாட்ட கியாசுத்தீன் துக்ளக் படையுடன் சென்றார்.

பகர ஆட்சிக் குழுவில் முகமது பின் துக்ளக்

முஹம்மது பின் துக்ளக்கை தாம் தில்லியில் இல்லாதபோது அரசகாரியங்களைக் கவனிக்கப் பகர ஆட்சிக்குழுவை அமைத்து அதில் அவரை இடம் பெறச் செய்தார் கியாஸ் உத்தீன் துக்ளக். அவரைக் கொல்ல சதி செய்தார் முஹம்மது பின் துக்ளக் என்பதனை ஏற்கத்தான் முடியுமா?

திர்ஹுத்

கியாஸ் உத்தீன் துக்ளக் திர்ஹுத்தை (Tirhut) அடைந்தார். அங்கு அவரை வங்காள நாசிர்உத்தீனும், கியாஸ் உத்தீனும் சந்தித்தனர். தங்களுக்கு ஆதரவு வேண்டினர்.

பஹ்ராம்கான் (Bahramkhan)

பஹ்ராம்கான் தலைமையில் படை லக்னோதிக்குச் சென்றது. கியாஸ்உத்தீன் பகதுார் போரில் தோற்றார். நாசிர் உத்தீன் லக்னோதி அரசரானார்.

அஹமத்கான்

வங்காளத்திலிருந்து திரும்பும்போது கியாசுத்தீன் துக்ளக் திர்ஹுத்தைத் தாக்கினார். வென்றார். அஹமத்கான் (Ahmad Khan) அங்கு ஆட்சியாளராக நியமிக்கப்பட்டார். இதற்குப் பிறகு தான் டில்லிக்கு வருகிறார் கியாசுத்தீன் துக்ளக்.

அஹமது ஹஸன்

Sadr-i-Ala Ahmad Hasan சத்ர்– இ– அலா அஹமது ஹஸன் கியாசுத்தீன் துக்ளக் இன் அரசவையைச் சார்ந்தவர் மன்னரது பரிவாரத்தினர் ஆவர். (Courtier) அவர் கியாசுத்தின் துக்ளக்கோடு லக்னோதி படையெடுப்பில் பங்கேற்றவர் கியாசுத்தீன் துக்ளக் டில்லிக்குத் திரும்பும்போது அவருடன் திரும்பி வந்தவர்.

பாஸ்டின் - அல் - அன்ஸ்

சதர் இ அலா அஹமதுஹஸன் எழுதிய நூல் பாஸ்டின் அல் அன்ஸ் அது பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளது.★

கியாத்தீன் துக்ளக் நோய்வாய்ப்படுதல்

வங்காள லக்னேதி படையெடுப்பிற்குப் பிறகு டில்லி திரும்பும் வழியில் கியாசுத்தீன் துக்ளக் அதிக உஷ்ணத்தாலும், பருவமாற்றங்களாலும் துன்பத்திற்குள்ளாகி மிகவும் அபாயகரமாக நோய் வாய்ப்பட்டார். இதனை அஹமது ஹஸன் தெரிவித்துள்ளார். கியாசுத்தீன் துக்ளக் 1325 சூலை 25 இல் மறைந்ததை முகமது பின் துக்ளக் நினைவுகள் சிறுபகுதி பிரிட்டிஷ் மியூசிய ஆவணம் தெரிவிக்கிறது. இவ்வாறு இருக்கிறபோது கி.பி. 1325 இல் பிப்ரவரி – மார்ச் மாதத்தில் ஆப்கன்பூரில் புதிதாக கட்டிய அரண்மனை இடிந்து விழ கியாசுத்தீன் துக்ளக் மறைந்தார் என்பத சரியா? என்று கேட்கிறார் ஆகாமகதி உசேன்.

The author of the Basatin - ui - Uns, Sadr-iAla - Ahmad Hasan - a courtier of Sultan Ghiyas - ud - din Tuqhuluq was in his suite in the Lakhnauti expedition, and accompanied him to delhi He describes most vividly the over whelming heat, **hot winds and hard ships that he, with** his companions, had suffered during the return Journey to delhi, where he at last fell dangerously ill. This is brone out by the memoirs of Muhammad bin Tughluq, which fix Ghiyas - ud - din Taghluq's death about the month of july 1325. ★★

என்ன இது! காலங்காலமாக சொல்லப்பட்டு வந்த கியாசுத்தீன் துக்ளக் மரணம் குறித்த செய்தியை மாற்றச் சொல்கிறாயே என்று நீங்கள் நினைப்பது புரிகிறது சான்றுக்கு ஒன்றைச் சொல்லியாக வேண்டும்.

★ *Ahmad Husain, Bastin - ul - un.s. British Musewm, Add 7717.*

★★ *Agia Mahdi Husain, The Rise and fall of Muhammad bin Tughluq, Delhi, First Reprint 1972, Second Reprint 2012 Page 59, (Ist edition Luzac 1938).*

Agha mahdi Husain Tughluq dynasty I print Calcutta, 1963 Re print new delhi 1976 Page 78 -79.

பகவான் புத்தர்

தர்மானந்த கோஸம்பி மராட்டியில் எழுதி கா.ஸ்ரீ.ஸ்ரீ. தமிழாக்கம் செய்து, சாகித்திய அகாடமிக்காக பழனியப்பா பிரதர்ஸ் 1957 இல் 458 பக்கங்களில் வெளியிட்ட நூல் பகவான் புத்தர்.

சாக்கிய சிம்மன்

சர்வார்த்த சித்தன், செளத்தோதனி (சுத்தோதனன் மகன்) கௌதமன், அர்க்கபந்து, மாயாதேவி மகன் சாக்கியசிம்மன் இவை புத்தரின் பெயர்கள் பகவான் புத்தர் நூலில் பக்கம் 133 இல் சாக்கியரும், கோலியரும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஆதலால் அவர்களுக்குள் நெருங்கிய தொடர்பு இருந்தது. சில சமயம் ரோகிணி ஆற்றின் தண்ணீர் விஷயமாக அவர்களுக்குள் சச்சரவு நிகழ்வதுண்டு.

பக்கம் 137

ரோகிணியாற்றின் நீருக்காகச் சாக்கியரும் கோலியரும் சண்டையிட்டு வந்தார்கள். ஒரு தடவை இரு திறத்தாரும் படை திரட்டிக் கொண்டு ரோகிணி ஆற்றங்கரைக்குச் சென்றார்கள். அப்பொழுது புத்தர் பெருமான் இரண்டு சேனைகளுக்கும் நடுவில் நின்று **அத்ததண்டஸுத்தத்தை** உபதேசித்தார்.

அத்ததண்டஸுத்தம்

"ஆயுதம் தாங்குவது பயங்கரமாகத் தோன்றியது. அதனைக்கொண்டு இந்த மக்கள் எப்படிச் சண்டையிடுகிறார்கள் பாருங்கள்! எனக்கு வைராக்கியம் எப்படி ஏற்பட்டது என்பதைக் கூறுகிறேன்.

புத்தரின் வெறுப்பு

குறைவான நீரில் மீன்கள் துடிப்பது போல ஒருவரை ஒருவர் பகைத்துத்துடிக்கும் மக்களைக் கண்டு என் உள்ளத்தில் அச்சம்புகுந்தது. நான்கு பக்கங்களிலும் உலகம் சாரமற்றதாகப் புலப்பட்டது.

திசைகள் யாவும் நடுங்கு வனவாகத் தோன்றின. அங்கே புகலுக்கு உரிய இடத்தைத் தேடிய பொழுது அச்சமற்ற இடமே

தென்படவில்லை எனவே, கடைசி வரைக்கும் மக்கள் யாவரும் தமக்குள் எதிரிகளாகவே இருப்பதைக் கண்டதனால் எனக்கு வெறுப்பு உண்டாயிற்று.*

நதி நீரில் கலந்த நஞ்சு

இதனைப் பின்னர் அவரது மகன் தாமேதர் தர்மானந்த கோஸாம்பியும் உறுதிப்படுத்துகிறார். ரோகிணி நதிநீர் காரணமாக மூண்ட போரில் எல்லாப் போர் விதிகளையும் மீறி சாக்கியர் நீரில் நஞ்சைக் கலந்தனர்.**

The Sakyans fighting with them Over the waters of Rohiniriver, had naturally no compunction in Poisoning that water, against all rules of warefare among aryans. ***

சுத்தோதனன்

புத்தரின் தந்தை சுத்தோதனன் இவர் சாக்கிய குடியைச் சேர்ந்தவர் (Sakyan)

மாயா

புத்தரின் தாயார் மாயா இவர் கோலியா குடியைச் சேர்ந்தவர்.

சாக்கியர்களின் பிரதேசம்

சாக்கியர்களின் சிறு பிரதேசம் பூர்வீகத் தன்மை வாய்ந்ததாகவும் வளம் குன்றியதாகவும் இருந்தது. இன்றுள்ள இந்திய – நேபாள எல்லையின் இருபக்கங்களிலும் பஸ்தி (Basti), கோரக்பூர் (Gorakhpur) மாவட்டங்களை ஒட்டி அப்போது அது அமைந்திருந்தது.

★ புத்தர் - அந்த தண்டஸுத்தம் பகவான்புத்தர் நூல் பக்கம் 137.

★★ டி.டி.கோசாம்பி, பண்டைய இந்தியா பண்பாடும் நாகரிகமும், சென்னை, 2006, தமிழாக்கம் ஆர்.எஸ்.நாராயணன் பக்கம் 195. முற்கூறிய நூல் தமிழாக்கம் எஸ்.ஆர்.என்.சத்யா, சென்னை. 1989, பக்கம் 195.

★★★ *D.D.Kosambi, The Culture & Civilisation of Ancient India in Historical out line New Delhi First Published 1970, Fourth Impression 1976. Page 109.*

இவர்களுக்கு அடுத்தாற்போல வாழ்ந்தவர்கள் கோலியர்கள் (Koliyan) சாக்கிய குலத்தைச் சேர்ந்தவர் புத்தரின் தாயார் இந்த இரு குலங்களுக்கும் இடையே தான் ரோஹினி நதி நீர்தகராறு போர் – நீரில் நஞ்சு கலத்தல்...

பயிர்த்தொழில்

ஆயுதம் தாங்கிப்போராடும் சத்திரியர்களாயினும் சாக்கியர்கள் பயிர்த் தொழிலையும் செய்தனர். புத்தருடைய தந்தை உட்பட எல்லா சாக்கியர்களும் ஏர் பிடித்து உழுதவர்களே சாக்கிய குலத்தலைவர் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ராஜான்யா

குலத்தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுடைய எந்த சத்திரியரையும் **ராஜான்யா** என்ற பட்டம் குறிக்கும். புத்தரின் தந்தை அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டதால், புத்தரை இளவரசராக எழுத வைத்தது. (Kosalam) கோசல மன்னர் பாசேனாதி (Pasenadi) (சமஸ்கிருதத்தில் பிரசேனஜித் Prasenajit) இவர் ஆதிக்கத்தின் கீழ் தான் சாக்கியர்கள் இருந்தார்கள்.

ஆளார காலாமன் ஆசிரமம்

புத்தர் இளம் வயதில் ஆளாரகாலா மனுடைய ஆசிரமத்திற்குச் சென்று தத்துவ ஞானம் பயின்றவர். தந்தையுடனே அல்லது தனியாகவே சென்று வயலில் வேலை செய்தவர் அவ்வாறு சென்ற புத்தர் கிழவனையும் நோயாளியையும் பிணத்தையும் பார்த்ததில்லை என்பது எப்படி பொருந்தும்? என்று கேட்பார் தர்மானந்த கோசாம்பி.

புத்தரின் இனத்தவரான சாக்கியருக்கும் கோலியருக்குமிடையே சண்டை சச்சரவுகள் நிகழ்ந்தன. அவற்றில் தாம் தலையிடுவதா வேண்டாமா? என்ற கேள்வி புத்தருக்கு எழுந்தது.

துறவு பூண முடிவு

அடிதடியினால் இந்தச் சச்சரவுகள் தீரமாட்டாது என்பதை அவர் அறிந்தார். ஆனால் அவர் அவற்றில் ஈடுபடாவிட்டால் மக்கள் அவரைப் பயங்கொள்ளி என்பார்கள். இல்லறத்துக்கும் அது ஏற்றதன்று ஆகவே இல்லறம் அவருக்குத் தொல்லையான

இடமாகத் தோன்றியது. அதைவிட துறவியாகி எதிலும் விருப்பமற்றுக் காடு மேடுகளில் திரிவது எவ்வளவோ மேலல்லவா?

வீட்டைத் துறப்பது மிகவும் கடினமாக இருந்தது. தீவிரமாகச் சிந்தித்தார் புத்தர். நானே பிறப்பு, முதுமை நோய், சாவு ஆகியவற்றின் தன்மைகளையுடையவனாக இருக்கும் பொழுது, இதே இயல்பினால் கட்டுண்டவர்களான புதல்வன் மனைவி முதலியவர்களிடம் பற்றுக் கொண்டு இந்தத் தொல்லையும் குப்பையுமான இல்லறத்தில் விழுந்து கிடப்பது சரியன்று என்று புத்தருக்குத் தோன்றிற்று.

அதனால் அவர் பிரிவிராஜகரானார். **மூன்று காரணங்களில் முதன்மையானது சாக்கியருக்கும் கோலியருக்கும் நிகழ்ந்து வந்த அடிக்கடிச் சண்டைகள், என்பார் டி.கோசாம்பி.***

போதி சத்வா

1947 இல் தர்மானந்த கோசாம்பியின் மறைவிற்குப் பின்னர் 1949 இல் அவரது **'போதி சத்வா: நாடக்'** நாடக நூல் மராட்டி மொழியில் வெளிவந்தது. புத்தர் ஏன் இல்லத்தை துறந்தார் என்பதுபற்றிய ஆராய்ச்சி நூல். அந்த நாடகம். உலகத்தின் மீதான மறுப்பும் பரி நிர்வாணம் மீதான நம்பிக்கை அவரது ஞானத்தேடலுக்கான காரணம் அல்ல என்றும், இரண்டு குடிகளுக்கு இடையில் இருந்த நதி நீர்ப் பங்கீடு தொடர்பிலான பிரச்சினையைத் தீர்க்க படைபலத்தையும், சண்டையையும் பயன்படுத்துவதை புத்தர் தீவிரமாக எதிர்த்தது தான் காரணம் என்பார் தர்மானந்த கோசாம்பி. இளவரசர் சித்தார்த்தனின் துறவுக்கு காரணங்கள் என காலங்காலமாக கூறப்பட்டவற்றை தர்மானந்தா கோசாம்பி தனது பிற்கால வாழ்க்கையில் மறுத்தார்.**

★ தர்மானந்த கோஸம்பி, டி.பி.கோஸம்பியின் தந்தை ஆவார். தர்மானந்தகோஸம்பி, பகவான் புத்தர் கோவை, 2006, பக்கம் 120.

★ ஷங்கர் ராம சுப்பிரமண்யம், (ஜெய்ராம் ரமேஷ் திலைட் ஆஃப் ஏசியா தி போயம் தட்டிஃபைன்டு தி புத்தா நூலின் சிறுபகுதியை தமிழாக்கியது) இந்து தமிழ்திசை 12.6.2021.

வரலாற்றின் வெளிச்சத்தில்

ஆப்கன்பூரில் அரண்மனை இடிந்து விழுந்து கியாசுத்தீன் துக்ளக் 1325 பிப்ரவரி மார்ச்சில் மறைந்தார் என்பது காலங்காலமாகச் சொல்லப்பட்டு வரும் சரித்திரத் தவறாகும்.

ஏனென்றால் கியாசுத்தீன் துக்ளக் நோய் வாய்ப்பட்டு 1325 சூலையில் இறந்தார் என்பதனை ஆகாமஹதி உசேன் சமகாலச் சான்றுகளுடன் விளக்கியுள்ளதை ஒப்பிட்டுப் பார்த்தேன்.

வரலாற்றின் வெளிச்சத்தில் உண்மைகள் வெளிவர வேண்டியது அவசியமும், காலத்தின் கட்டாயமுமன்றோ!

எஸ்.ஏ.ஏ. ரிஸ்வி

பரணீயின் தெளிவற்ற கூற்றைக் கொண்டு பிந்தைய வரலாற்றாசிரியர்கள் முகமது பின் துக்ளக் தனது தந்தையைக் கொல்லச் சதியில் பங்கு பெற்றிருந்தார் எனக் கருதுகின்றனர்.

"but some later writers consider Ulughkhan to have been innocent"

பிற்கால வரலாற்றாசிரியர்கள் கூற்றுப்படி, உலூகான் என்ற முகமது பின் துக்ளக் தந்தையைக் கொல்ல சதி செய்ததாகக் கூறப்படுவதை ஆராயும்போது அவர் அப்பாவி என்று தெரிகிறது (குற்றமற்றவர்) என்பர் எஸ்.ஏ.ஏ. ரிஸ்வி.*

Dr. பி.பி.சாக்சினா

டாக்டர் பி.பி. சாக்சினா ஆப்கன்பூரில் கியாசுத்தீன் துக்ளக் இறந்தது விபத்து என்று தான் கூறுகிறார்.

Dr. B.P.Saxena have expressed that he died in an accident. **

★ *S.A.A. Rizvi, The Wonder That was India Voume II New Delhi,* 9வது பதிப்பு 1999, பக்கம் 45.

★ *L.P.Sharma, The Sultanate of Delhi, Delhi, 1988, Page 179, L.P. Sharma, History of Medieval India 1000 - 1740 AD 2nd Revised edition, Delhi, 1991, Page 121*

தனது தந்தையைக் கொல்வதற்கெனவே இளவரசன் (முகமதுபின் துக்ளக்) அம்மண்டபத்தைக் கட்டினான் என்று கூறுவது அவ்வளவு பொருத்தமானதாயில்லை என்று பேராசிரியர் சாக்சினா போன்வறர்கள் கருதுகின்றனர்.★

இறைவனே அறிவான்

பிரபல வரலாற்றாசிரியர் ஆர்.சி. மஜூம்தார் இந்த நிகழ்வு பற்றி எழுதிவிட்டு இறுதியாகச் சொல்வார் “God Only knows the real turth★★ *இறைவன் ஒருவனே இதன் உண்மையை அறிவான்.*

ஆப்ரகாம் எரேலி

ஏற்கனவே தனக்குப் பின் தனது மகன் முகமது பின் துக்ளக் அரசப் பொறுப்பிற்கு என்று நிர்ணயிக்கப்பட்டதற்குப் பிறகு அரச குடும்பத்தார் அனைவரும் ஒப்புக் கொண்டதற்குப்பிறகு முகமது பின் துக்ளக், கியாசுத்தீன் துக்ளக்கை சதியால் கொன்றார் என்பதனை நம்பும் படியாக இல்லை என்பார் ஆப்ரகாம் எரேலி.★★★

★ ஏ.உஸ்மான் ஷெரீப், இந்திய வரலாறு கி.பி. 1206 முதல் 1707 வரை, சென்னை, 1972, பக்கம் 79.

★★ *R.C.Mujumdar, The delhi sultanate, Bombay (Mumbai) 1990, Page 58.*

★★★ *Abraham Eraly, The Age of Wrath A History of the Delhi Sultanate, New Delhi, 2014 Page 146 - 147. (Totally Books 448 Pages)*

திட்டமிட்ட தலைநகர் மாற்றம்!

டெல்லி அடிக்கடி மங்கோலியரின் தாக்குதலுக்கு ஆளாயிற்று. எனவே மங்கோலியரின் தாக்குதலிலிருந்து தலைநகர் தில்லியைக் காத்திடப் புதிய தலைநகரமாக வேறு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைக்கு முகமது பின் துக்ளக் உள்ளானார். தௌலதாபாத் புதிய தலைநகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஏறக்குறைய பேரரசின் மையப் பகுதியில் அந்நகர் அமைந்திருந்தது.

தௌலதாபாத்

தௌலதாபாத்தில் அரசு அலுவலர்களும் மக்களும் வாழ்வதற்காகத் தகுந்த முயற்சிகளை முகமதுபின் துக்ளக் மேற்கொண்டனர். டெல்லியிலிருந்து தௌலதாபாத்திற்கு சென்ற பயணிகளின் நன்மைக்காகச் சாலைகள் அமைத்தல், நிழல்தரும் மரங்களை நடுதல், அஞ்சல் வசதிகள் ஏற்படுத்துதல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தீடிரெனத் தீர்மானிக்கப்படவில்லை

தலைநகர் மாறுதல் எல்லோரும் எண்ணுவதைப் போல உடனடியாகவோ திடீரென்று தீர்மானித்தோ நிறைவேற்றப்படவில்லை.

குடும்பத்தார் அனுப்பி வைக்கப்படல்

முகமது பின் துக்ளக்கின் குடும்பத்தார், அவரது அன்னையார் அரண்மனையைச் சார்ந்தவர்கள், முதலில் தௌலதாபாத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

இலவச உணவு - உறைவிடம்

தௌலதா பாத்திற்கு வருவோர் தங்கிட இலவச உறைவிடமும் இலவச உணவும் முகமது பின் துக்ளக்கால் வழங்கப்பட்டது.

எல்லா மக்களும் - தவறான கருத்தும்

தில்லியிலிருந்த எல்லா மக்களும் மொத்தமாக தௌலதாபாத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பது தவறான கருத்தாகும்.

உண்மையில் உயர் வகுப்பினர், பிரபுக்கள், ஷேக்குகள், மார்க்க அறிஞர்கள் ஆகியோரே முதலில் தௌலதபாத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்துக்கள் அனுப்பி வைக்கப்படவில்லை

தில்லியிருந்து தௌலதாபாத்திற்கு இந்துக்கள் அனுப்பி வைக்கப்படவில்லை என்பதனை அக்காலத்தியச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. அவைகள் குறித்து விரிவாகப் பார்ப்போம்.★

பில்லமன்

கல்யாணச் சாளுக்கிய அரசர் நான்காம் பரமேசுவரனுக்குச் சிற்றரசராக இருந்தவர் **பில்லமன்.** சாளுக்கியரின் வலிமை குன்றியபோது கிருஷ்ணா ஆறு வரையிலுள்ள இடங்களைக் கைப்பற்றிக் கொண்டு, **கி.பி. 1187** இல் தேவகிரி என்ற நகரை நிறுவினார். உலகின் சிறப்பான நகரங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட செல்வச்செழிப்பான தேவகிரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார் பில்லமன். ஹொய்சாள பல்லாளன் **கி.பி. 1191** இல் போரில் பில்லமனைக் கொன்றார்.

இராமச்சந்திர தேவி

கி.பி. 1296 இல் அலாவுதீன் கில்ஜி தேவகிரி மீது படையெடுத்தார். அண்டையிலிருந்த அரசுகள் எதுவும் உதவவில்லை. தேவகிரி அரசர் இராமச்சந்திர தேவா போரில் தோற்றார். டில்லிக்கு கப்பம் கட்ட ஒப்புக் கொண்டார். பெருச் செல்வம் கிட்டிற்று. விந்திய மலைக்குத் தெற்கே தேவகிரி, வாரங்கல், துவார சமுத்திரம் சேர, சோழ, பாண்டிய அரசுகள் இருந்தன. அவை ஒன்றோடொன்று போரிட்டுக் கொண்டிருந்தன.

சங்கனா

ராமச்சந்திர தேவாவின் மகன் சங்கனா டில்லிக்கு கப்பம் கட்ட மறுத்தார் (1309–1312) கி.பி. 1312 இல் மாலிக்கபூர் தேவகிரியின் மீது படையெடுத்து வென்றார்.

★ கி.ர.அநுமந்தன், ந.க.மங்கள முருகேசன் இந்திய வரலாறு கி.பி. 1206 முதல் கி.பி. 1773 வரை சென்னை, 1976, பக்கம் 76, 77.

கி.பி. 1327

கி.பி. 1327*இல் முகமதுபின் துக்ளக் டில்லியிருந்து தேவகிரிக்கு தலைநகரை மாற்ற முடிவெடுத்தார்.

டில்லி மக்களைத் தண்டிப்பதற்காகவா?

டில்லி மக்களைத் தண்டிப்பதற்காக தலைநகரை மாற்றும் முயற்சியில் முகமதுபின் துக்ளக் இறங்கினார் என்று இபின் பதூதா சொல்கிறார்.

ஏசல் கடிதங்கள்

டில்லி மக்கள் முகமது பின் துக்ளக்கை பலவாறாகத் திட்டியும், ஏசியும் கடிதங்கள் எழுதி அரண்மனை ஆலோசனை மண்டபத்தில் போட்டு விடுவார்கள். அரசர் தவிர வேறு எவரும் படிக்கக் கூடாது என்று குறிப்பிட்டிருந்த அந்தக் கடிதங்களைப் படித்தபோது டில்லி மக்கள் மீது கோபங்கொண்டார். டில்லி மக்களை தேவகிரிக்குச் செல்லுமாறு உத்திரவிட்டார். இந்த இபுன்பதூதாவின் கருத்தை நாம் ஏற்க இயலாது.**

கிரையத்தைத் தருதல்

டில்லி மக்களுக்குச் சொந்தமாக இருந்த எல்லா வீடுகளையும் முகமதுபின் துக்ளக் விலைக்கு வாங்கி அவைகளுக்குரிய கிரையத்தையும் கொடுத்துவிட்டார் என்று இபின் பதூதாவே கூறி உள்ளார். டில்லி மக்களுக்கு மனக்கஷ்டமும், பொருளாதார நஷ்டமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக முகமதுபின் துக்ளக் அவ்வாறு செய்தார்.

★ *Ishwari Prasad, A History of the Qaraunah Turks in India, Allahabad, 1936, Page 82-83.* முகமதுபின் துக்ளக் கால கணக்குகளையம் நாணயங்களையும் ஒப்பிட்டு கி.பி. 1327 இல் தலைநகர் மாற்றம் திட்டமிடப்பட்டது என்கிறார் டாக்டர் ஈஸ்வரி பிரசாத்.

★★ *Ibn-i-Battuta, Rehla, Arabic text Cairo 1928. A Mahdi Hussain, The Rehla of Iban Battuta, English. Baro da - 1953 - Rehla, 94.*

சௌகரியங்கள் செய்தல்

டில்லி மக்களைத் தண்டிக்க வேண்டுமென்று முகமதுபின் துக்ளக் எண்ணியிருந்தால் அதற்குரிய கிரையத்தைக் கொடுத்து அந்த வீடுகளை வாங்கியிருக்கமாட்டார். டில்லியிருந்து மக்கள் தேவகிரிக்குச் சென்றபோது அவர்களுக்குத் தேவையான சௌகரியங்களைச் செய்து கொடுத்தார் முகமதுபின் துக்ளக்.

ஏற்கமுடியாது

முகமது பின் துக்ளக்கைத் தாக்கி எழுதப்பட்ட கடிதங்கள் தலைநகரை மாற்ற முடிவெடுத்தபிறகு ஒருவேளை எழுதியிருக்கக்கூடும். அதற்கு முன்னர் எழுதப்பட்டவை என்பதனை ஏற்க இயலாது. கடிதம் எழுதுவதற்கும் நியாயமுமில்லை. எனவே டில்லி மக்களைத் தண்டிப்பதற்காகத் தலைநகரை மாற்றினார் என்பதனை நாம் ஏற்க முடியாது.

இசாமியின் பொய்க்கூற்று

டில்லி மக்களின் நடத்தை மீது முகமது பின் துக்ளக் சந்தேகம் கொண்டார். எனவே அவர்களை மகராஷ்டிரத்திற்கு துரத்திவிட முடிவெடுத்தார் என்று இசாமி கூறுகிறார். இசாமியின் இக்கூற்றையும் நாம் ஏற்பதற்கில்லை. பொய்யே நிறைந்துள்ளது என்பதனை அவர் எழுதிய குறிப்புக்களைப் படிக்கிற போதே தெளிவாக நாம் உணரலாம்.*

பரணீயின் பொய்க்கூற்று

டில்லிப் பேரரசு தென்னிந்தியாவிலும் பரவியிருந்தது. டில்லியிலிருந்து அவைகளைக் கட்டுப்படுத்துவது சிரமம். எனவே பேரரசின் மையப்பகுதியான ஓரிடத்தில் தலைநகரை மாற்றி ஆட்சியைத் திறம்பட நடத்திட முகமதுபின் துக்ளக் முடிவெடுத்தார். தேவகிரியிலிருந்து டில்லி, குஜராத், லக்னோதி, சத்காவ்ன் திலங், மாபார், துவாரசமுத்திரம், கம்பிலா ஆகியவை சமதூரத்தில் இருந்தது. எனவே தலைநகரை தேவகிரிக்கு மாற்றிட முகமதுபின் துக்ளக் முடிவு செய்தார் என்கிறார் பரணீ.

★ *Isalmi, Futuh - Us Salation, Edited M.Usha, Madras 1948, Page 446.*

சம தூரத்தில் இல்லை

பரனீ குறிப்பிடும் இடங்கள் யாவும் தேவகிரிக்குச் சமதூரத்தில் இருப்பதாக குறிப்பிடுவது அவர் இந்தியாவின் புவி அமைப்பைச் புரியவில்லை. தெரியவில்லை என்பது தெளிவாகிறது.

தேவகிரியிலிருந்து டில்லியை எப்படிக் கட்டுப்படுத்துவது?

டில்லியிலிருந்து தேவகிரியைக் கட்டுப்படுத்திவர இயலவில்லை என்றால் தேவகிரியிலிருந்து டில்லியைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு இலகுவாகும். கடினமல்லவா!

Barani Says that the sultan made Devagiri his darul mulk (or capital) because he thought that it was more centrally situated and was equidistant from Delhi, Gujarat, Lakhnauti, Satgaon, Sonargaon, Tilang, Maabar, Dwara Samudra and Kampila.★

A Part from the geographical in accuracy of this statement the point cannot be ignored that if Devagiri could not be controlled from Delhi, Neither Could Delhi becontrolled from Devagiri.

Never the Less, Baranis Observation, as usual, is helpful in understanting the basic motive of the Sultan - effective administrative Control of the South. ★★

மாலிக்காபூர் (Malik Kafur)

தக்காணத்தில் நான்கு படையெடுப்புக்களை நடத்தியவர் மாலிக்காபூர் ஆனாலும் தக்காண அரசுகளுள் ஒன்றுகூட டில்லி அரசுடன் இணைக்கப்படவில்லை.

முபாரக்ஷா (Mubarak shah)

முபாரக்ஷா காலத்தில் (கி.பி. 1316 - 1320) தக்காணத்தில் முதன் முதலாக முஸ்லிம் அரசு அமைக்கப்பட்டது. தேவகிரி பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

★ *Ziyaaddin Barani, Tariki-i-Firuz Shahi Edited by sir Saiyyid Ahmad Khan. Biblio theca Indica Series Calcutta, 1862, Page 433-474.*

★★ *Professor K.A. Nizami, Muhammad Bin Tughluq, A Comrehensive History of India, Volume Five Part One Delhi, 2006, Page 506.*

சதஅமீர்

பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியும் ஒரு சதஅமீரின் (amiran-i-sadah) (நூறு கிராமங்களைக் கண்காணிக்கும் அதிகாரி) (Officers controlling territory containing about a hundred village) பொறுப்பில் விடப்பட்டது. அந்தப்பகுதியில் வரி வசூலிப்பது, அமைதியை நிலைநாட்டுவது அவர்களின் பொறுப்பாகும்.

இந்து அரசுகள்

சதஅமீர்கள் முஸ்லிம்களாக இருந்தனர். அவர்களுடன் வந்தவர்கள் தவிர வேறு முஸ்லிம்கள் தேவகிரியில் வாழ்ந்து வரவில்லை. தேவகிரிக்குத் தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் இந்து அரசுகள் தங்களது பலத்தை இழக்காது இருந்தன. அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டால் தேவகிரியில் அமைந்துள்ள முஸ்லிம் ஆட்சி நொடிப் பொழுதில் அழிந்துவிடக்கூடும். எனவே தேவகிரியையும், தேவகிரியைச் சுற்றியிருந்த நாடுகளையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர டில்லி சுல்தான்கள் கவனம் செலுத்தினர்.

கியாஸ் உத்தீன் துக்ளக்

கியாஸ்உத்தீன் துக்ளக் (கி.பி. 1320 – 1325) காலத்தில் வாரங்கல் வெற்றி கொள்ளப்பட்டது. அங்கும் (Warangal) சதஅமீர்கள் நியமிக்கப்பட்டனர் என்றாலும் அங்கு நிலைமை திருப்திகரமாக இல்லை. அங்குள்ள மக்களும், சத அமீர்களும் டில்லி சுல்தானை எதிர்த்தனர். குஜராத் (Gujarat) மாளவம் (Malwa) ஆகிய இடங்களில் முஸ்லிம்கள் குறைவாகவே இருந்தனர். எனவே அங்கும் ஆட்சிக்கு ஆபத்திற்கான வாய்ப்பு இருந்தது.

தக்காணத்தில் நிலையான ஆட்சி

எனவே தக்காணத்தில் அமைக்கப்பட முஸ்லிம் ஆட்சி, நிலையாக இருந்தாலொழிய வட இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி குஜராத், மாளவத்தில் நிலைபெற வாய்ப்பு இல்லை என்பதனை முகமதுபின் துக்ளக் நன்கு உணர்ந்தார்.

முஸ்லிம் மக்கள் கூட்டம்

தக்காணத்தில் முஸ்லிம்களின் ஆட்சியை நிலை பெறச் செய்ய முகமதுபின் துக்ளக்கிற்கு ஒரு வழி மட்டுமே புலப்பட்டது. அதாவது அங்கு முஸ்லிம் ஆட்சியை ஆதரித்திடும் முஸ்லிம் மக்கள் கூட்டத்தை அதிகரிக்கச் செய்யவேண்டும். முஸ்லிம்களின் குடியிருப்புக்களை உருவாக்கவேண்டும் என்று முடிவெடுத்தார் முகமதுபின் துக்ளக். அதற்கு என்ன வழி? டில்லியில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களை தேவகிரியில் குடி அமர்த்தத் திட்டமிட்டார். அதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்று முகமதுபின் துக்ளக் திடமாக நம்பினார். தில்லியிலிருந்து சென்றவர்கள் அங்கு இஸ்லாமிய மார்க்கப் பிரச்சாரம் செய்யவேண்டும்.

இஸ்லாமியப் பிரச்சாரம்

டில்லியிருந்து அழைத்துச் செல்லப்படும் இஸ்லாமிய மார்க்க மேதைகள், சமயப் பிரச்சாரம் செய்யவேண்டும். தக்காணத்திலுள்ள மக்களை இஸ்லாம் மார்க்கத்தை தழுவச் செய்ய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். எனவே முதலில் தேவகிரிக்குச்செல்ல டில்லியிலுள்ள முஸ்லிம் சமயத்தவர்களே தகுதி வாய்ந்தவர்கள் என்று முகமதுபின் துக்ளக் கருதினார் என்று அலிகார் மாகஸின் இதழில் *1930* இல் வந்த கட்டுரை தெரிவிக்கிறது.*

சியாறல் - அவுலியா

செய்யது முகமது பின் முபாரக் கிர்மாணி மார்க்கத்தின் அமீர். அல்ஹிஜ்ரி *1302* இல் டில்லியிலிருந்து Siyarul Auliya எனும் நூல் வெளிவந்துள்ளது. அதனை லாகூரிலிருந்து கி.பி. *1978* இல் S.மஹதிகோரி வெளியிட்டுள்ளார் இந்த நூலில், தக்காணத்திற்குச் செல்லவும் தேவகிரியை முஸ்லிம் கலாச்சாரத்தின் தலைமையிடமாக்கவேண்டும் என்றும் அதனை முஸ்லிம் குடியேற்ற நகரமாக அமைக்கவேண்டும் என்று முகமது பின் துக்ளக் விரும்பினார் என்பதற்கான எண்ணற்ற சான்றுகள் உள்ளது.

★ *Aligarh Magazine July, 1930, (Mafazuia) Page 1 -11.*

கார்ட்னர் பிரௌன் - மற்றும் ஒரு தலைநகர்

முகம்மதுபின் துக்ளக் தக்காணத்தைத் தமது நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வர முடிவு செய்தார். ஆகவே தக்காணத்தில் **மற்றும் ஒரு தலைநகரை அமைத்தால்** அதனை எளிதாகக் கட்டுப்படுத்திவர இயலும் என்று எண்ணினார் என்பர் கார்ட்னர் பிரௌன்.*

ஆட்சிப் பகுதிகளில் கலகங்கள்

முகமது பின் துக்ளக்கின் ஆட்சிப் பகுதிகளில் கலகங்கள் எழத் துவங்கின கி.பி. 1335 க்கு முன்பு பகா உத்தீன் குர்ஸ்ஹிப் (The rebellion of Baha-ud-din Gurshasp) கிஸ்லுகான் (Kishlu Khan) கமால்பூர் சாஜி குத்ப்பின் கலகம் (The rebellion of the qazi and and khatib of kamal pur) கியாசுத்தீன் பகதூரின் (Ghiyas-ud-Cin Bahadur) கலகம் Wunar and Qaisar -i-Rumi Ulam கலகம் தோப் (Duab) கலகம் ஆகியவை நடந்தது.

மலபார் கலகம் 1335 இல் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்த மசூத்கான் (Masudkhan) கலகம் குலாஜன் (Hulajun) கலகம் மாலிக் ஹவுஸ்கான் கலகம் (Malik Houshang) காம்பிலா (Kampila)மற்றும் வாரங்கல்லில் நடைபெற்ற கலகம், ஹன்சி மற்றும் சிர்சா Hansi and Sirsa கவர்னர் செய்யது இப்ராகிம் நடத்திய கலகம் பக்கராவில் (Fakhra) நடைபெற்ற கலகம்.

சுனம் (Sunam) சாமன (Samana) கெய்தால் (Kaithal) குர்ரம் (Kuhram) பகுதிகளில் நடைபெற்ற கலகங்கள், காரா (Kara) வின் நிஜாம் மெய்ன் நடத்திய கலகம், குல்பர்க்காவின் அலிஷா நடத்திய கலகம், அய்னுல்முக் ஆப்கனின் சாகு (Shaha) காஜி ஜலால் நடத்திய கலகம், (Qazi Jalal) அமிரன்–இ–சதா Taghi தாஹியின் கலகம், தௌலதாபாத்தின் சுல்தானி சிகாப்உத்தீன் நடத்திய கலகம் ஆகிய 22 கலகங்களுக்கு குறையாமல் (1325 – 1351) முகமதுபின் துக்ளக் ஆட்சியில் நடைபெற்றதை அறிய முடிகிறது.

★ *Gardner Brown, Journal of U.P. Historical Society, Volume I, Part II, Page 13.*

மாபார் கலகம்

டில்லிக்கு வெகு தூரத்தில் உள்ள மாபாரில் நடைபெறும் கலகத்தைக் கட்டுப்படுத்த தொலைவிலிருந்த அரசால் இயலாத நிலை ஏற்பட்டது.

தக்காணத்து குர்ஸ்ஹாஸ்ப்

பகா உத்தீன் குர்ஸ்ஹாப் முதலில் கலகத்தை ஆரம்பித்தார். அதனைத் தக்காணத்தில் அடக்கினார் முகமது பின் துக்ளக். அப்போதே திறமையாகச் செயலாற்ற பேரரசின் மையத்தில் தலைநகரை அமைக்க முடிவெடுத்தார்.

உயரிய நோக்கு

உயரிய நோக்குடன் தலைநகர் மாற்றும் திட்டத்தை முகமதுபின் துக்ளக் மேற்கொண்டார்.

அவசர முடிவல்ல

அவசர அவசரமாக தலைநகரை மாற்றும் திட்டத்தை முகமதுபின் துக்ளக் நிறைவேற்றவில்லை.

ஆலோசனை

தலைநகரை மாற்றுவது குறித்து முகமது பின் துக்ளக் தனது ஆலோசகர்களை அழைத்து அவர்களது யோசனைகளைக் கேட்டார். அவரது அமைச்சர்கள் தௌலதாபாத்தைவிட உஜ்ஜயினி பொருத்தமாக இருக்கும் என்றனர். ஆனால் அதனை முகமதுபின் துக்ளக் நிராகரித்தார் என்கிறார் பெரிஷ்டா **தேவகிரியை நன்கு அறிந்த முகமதுபின் துக்ளக் அதனை மற்றுமொரு தலைநகராக்க முயன்றார்.**

இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்தப் பட்ட திட்டம்

தேவகிரிக்கு மக்கள் குடிபெயர்ந்து சென்றது ஹிஜ்ரி 727 இல் அதாவது கி.பி. 1326 – 1327 களில் துவங்கியது. இத்திட்டம் படிப்படியாக இரண்டு ஆணடுகள் கழிந்த பின்னரே அது நடைமுறைப்படுத்தப்பட்டது.

It appears that the idea was conceived at least two years before it was actually executed. *

இரண்டாவது தலைநகர்

தேவகிரியை (தௌலதாபாத்) டில்லி சுல்தானியத்தின் இரண்டாவது தலைநகராக்க வேண்டும். டெல்லிக்கும் புதிய தலைநகருக்குமிடையேயான செய்தி மற்றும் பொருள் போக்குவரத்தை உறுதி செய்யவேண்டும். தௌலதாபாத் தலைநகருக்குரிய அந்தஸ்தைப் பெறவேண்டும். வளரவேண்டும். தென்னிந்தியாவை கட்டுப்படுத்தினால் தில்லி சுல்தானியத்தின் வளங்கள் அதிகரிக்கும். எனவே தௌலதாபாத்தை மேம்படுத்திடவேண்டும் என்று முகமதுபின் துக்ளக் எண்ணினார்.

முன்னேற்பாடான முற்போக்குத் திட்டங்கள்

அலாவுதீன் கில்ஜி தேவகிரிக்கும் *(1296–1316)* டெல்லிக்கும் இடையே *700* மைல் *(5* மைல் *8* கி.மீ.) நீளமுள்ள நெடுஞ் சாலையை முன்னரே அமைத்திருந்தார். அச்சாலை பலப்படுத்தப்பட்டது. அச்சாலையில் தங்கும் இடங்களை அமைக்கச் செய்தார். வழி நெடுகிலும் சாலையின் இரு பக்கங்களிலும் மரங்களை நட்டிடச் செய்தார்.* சாலையின் இரு பக்கங்களிலும் மக்களைக் குடியேறச் செய்தார்.

தேவகிரிக்குச் செல்லும் மக்களுக்கு உதவி

தேவகிரிக்கு டில்லிக்கும் இடையில் சிலரை குடியமர்த்தினார். அவர்கள் தேவகிரிக்குச் செல்லும் மக்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தனர். இடையில் வாழ்ந்திடும் மக்களுக்கு நிலங்களையும் கொடுத்தார். டில்லியில் வீட்டை விட்டு விட்டு தேவகிரிக்குச் செல்பவர்களுக்கு, அவற்றின் மதிப்பிற்கு ஏற்றவாறு பணம் வழங்கினார். டெல்லியை விட்டுச்

★ *Mohammad Habib, Khaliq Ahmed Nizami A Comprehensive History of India Volume Five Partone, New Delhi, 2006, Page 510.*

★★ *Yahya Sirhindi editedby M.Hidyat Husain, Tarikh-i-Mubarak shahi, Biblio theca Indiaca, calcutta, 1931, Page 98.*

செல்லும் எவரும் பொருள் நஷ்டம் அடையக் கூடாது என்றும் முகமது பின் துக்ளக் விரும்பினார். *

தேவகிரிக்குச் செல்லும் மக்களுக்கு பிரயாணத்திற்கான வசதிகளையும் அவர்கள் தேவகிரியை அடைந்தவுடன் அவர்களுக்கு உணவு, இருக்கை ஆகியவற்றை இலவசமாக அளிக்க உத்திரவிட்டார்.

பரிசுப் பொருட்கள்

டில்லியை விட்டு மக்கள் புறப்படும்போதும், தௌலதா பாத்தை (தேவகிரியை) அவ்கள் அடைந்தபோதும் முகமதுபின் துக்ளக் அவர்களுக்கு ஏராளமான பரிசுப் பொருட்களை வழங்கினார்.**

மஹ்துமா-ஐ-ஜஹான்

முகமது பின் துக்ளக்கின் தாயார் மஹ்து துமா – ஐ – ஜஹான், அரச குடும்பத்தவர்கள், அமீர்கள், மலிக்குகள், அடிமைகள், குதிரைகள், யானைகள், கருவூலங்கள் டில்லியிலிருந்து முதலில் தேவகிரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மார்க்க மேதைகள் செய்யதுகள், ஷேக்குகள், உலமாக்கள், பெருங்குடிமக்கள், உயர் பதவியாளர்கள், தேவகிரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

First of all the Sultan's Mother Makhduma-i Jahan and the entire royal house hold with amirs, maliks, slaves, horses, elephants and treasures, shifted to devagiri, after wards the sultan Summoned all the saiyyids, shaikhs (mystics) Ulama and grandees of Delhi.***

வணிகக் குழுக்கள்

இசாமியின் கூற்றுப்படி ஆறு வணிகக் குழுக்கள் தௌலதாபாத்திற்கு அனுப்பப்பட்டனர்.****

★ *In-i-Battuta, The Rehla, Baroda 1953 Page 94.*

★★ *M.A. Chaghtai, Futuhat-i-Firuz shahi, Firuz shah Tughluq, Edited urdutrans lation Poona, 1941, Page 474.*

★★★ முற்கூறிய M. ஹிதையாஹுஸைன் நூல் அதே பக்கம் 98.

★★★★ *Islami Futuh-us-salatin Edited M.usha, madras, 1948 Page 449.*

கி.பி.1328 - 1329

யஹ்யா சிர் கிந்தி, கிபி. 1328 - 1329களில் (ஹிஜ்ரி 729) முகமதுபின் துக்ளக் தேவகிரிக்கு மக்கள் மாறிச் செல்ல உத்திரவிட்டதாகக் குறிப்பிடுகிறார்.★

எல்லோரையும் தேவகிரிக்கு அனுப்பவில்லை

டில்லியில் கட்டடங்களில் ஒரு நாய் அல்லது பூனையைக் கூட காண இயலாது போயிற்று என்று பரணீ கூறுகிறார். தாம் டில்லி நகருக்குள் நுழைந்தபோது இது வெறுமையாக இருந்தது. அங்குமிங்குமாக சிலரே வாழ்ந்து வந்தனர் என்று இபின் பதூதா கூறுகிறார். ஆனால் உண்மை நிலை என்ன? **எல்லோரையும் டில்லியிலிருந்து முகமதுபின் துக்ளக் தேவகிரிக்கு அனுப்பவில்லை.**

இந்துக்களை அனுப்பவில்லை

டில்லியிருந்து இந்துக்களை தேவகிரிக்கு முகமதுபின் துக்ளக் அனுப்பி வைக்கவில்லை. இந்துக்கள் தலைநகர் மாற்றத்தால் பாதிக்கப்படவில்லை.

It follows that the common people, that is, the mass of the Hindus, were not affected by the forced emigration to deogir.★★

இரண்டு கல்வெட்டுக்கள்

டில்லியில் கி.பி. 1327, 1328 ஆண்டுகளில் இந்துக்கள் பெருமளவில் வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கு வரலாற்று ரீதியாக சான்றாக இரண்டு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

6.8.1327 வியாழன்

விக்கிரம ஆண்டு 1384 பிரபோத்ரபதி மூன்றாம் நாள் டில்லிக்கருகேயுள்ள நதயனா (தற்காலத்தில் நாரெய்னா) கிராமத்தில் வாழ்ந்து வந்த ஸ்ரீதரர் என்ற பிராமணர் ஒருவர்

★ முற்கூறிய யஹ்யா சிர்ஹிந்தியின் நூல், பக்கம் 102.

★★ ஆகா மஹதி ஹூசைன், துக்ளக் பரம்பரை நூல் பக்கம் 146. தற்கால முஸ்லிம் வரலாற்று ஆசிரியரான ஆகாமகதி உசைன் கூற்றை எவ்வாறு ஏற்கமுடியும்? நீங்கள் கேட்பது புரிகிறது.

கிணறு தோண்டிய செய்தியைக் கூறுகிறது. 21 வரிகளைக் கொண்ட சிதிலமடைந்து கிடைக்காததுபோக எஞ்சிய 16 வரிகள் நமக்கு கிடைக்கிறது. 18" அளவில் 13" இன்ச் உயரத்தில் இக்கல்வெட்டு உள்ளது. இந்தக் கல்வெட்டில் முதல் நான்கு வரிகள் முழுவதுமாக அழிந்து விட்டது.

முகமதுபின் துக்ளக் அங்கீகாரம்

கல்வெட்டில் 5வது வரியில் முகமது பின் துக்ளக் **நதயனா** கிராமத்து பிராமணர் ஸ்ரீதரருக்கு கிணறு வெட்ட அங்கீகாரம் வழங்கிய வரலாற்றுச் செய்தி கூறப்பட்டுள்ளது.

இந்துக்கள் வாழ்ந்த டில்லி

முகமதுபின் துக்ளக் ஆட்சியின் கீழ் இந்துக்கள் டில்லியில் வாழ்ந்தார்கள் என்பதனை **நதயனா** கிராமத்தில் கிடைத்த கல்வெட்டின் 10வது வரி (Verse) அறிவிக்கிறது.

திரதேவா

திரதேவா (Dhiradeva) அவரது மகாவிதானி (Dhani) அவரது இரு பிள்ளைகள் ரிசதா (Risada) சுதேவா (Sudeva) இவை கல்வெட்டு 11வது 12வது வரிகள் தரும் செய்திகள்

The Councluding two Stanzes necord the foundation of the well which sridhara had dug on the north side of the Village nadayana and describe the Praise bestowed by travellers on the excellency of its water.

மக்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் பயணிகளுக்கும் பலன் தரும் வகையில் முகமதுபின் துக்ளக் ஆட்சியின்போது டில்லியில் நதயானாவில் கிணறு வெட்டப்பட்ட செய்தியை 6.8.1327 தேதியிட்ட கல்வெட்டு அறிவிக்கிறது.* இந்தக் கல்வெட்டு பற்றிய குறிப்பு எங்கு கிடைக்கிறது என்று தெரியுமா? டில்லி தொல்லியல் வெளியிட்டுள்ள நூலில் அந்த விவரம் உள்ளது.**

★ *Proceedings of the Asiatic society Bengal May 1873. Agha Mahadi Husain The Rise and fall of Muhammad bin Tughluq Delhi, Second Reprint 2012, Page 220.*

★★ *Catalogue of the Dehli Museum of Archeology compiled by J. Ph. Vogel, Calcutta Baptist Mission Press 1908 Page 29-33.*

இதே நூல் தரும் இன்னொரு கல்வெட்டு முகமது பின் துக்ளக் ஆட்சியில் *1328*வது ஆண்டில் வெளிவந்தது. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ள அந்த கல்வெட்டு, டில்லிக்கு அருகில் கிடைத்தது.

சர்பான்

டில்லிக்கு அருகில் *5* மைல் தொலைவில் சர்பான் (Sarban) என்ற கிராமத்தில் கிடைத்தது. சர்வலா (Sarvala) அல்லது சர்பலா (Sarabala) என்று அந்தக்கல்வெட்டில் அந்தக் கிராமத்தின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. கருப்புக்கல்லில் *17"* இஞ்ச் அளவில் *18* வரிகளைக் கொண்டது இந்தக் கல்வெட்டு சமஸ்கிருத கவிதை வடிவில் உள்ளது.

16.2.1328 செவ்வாய்க்கிழமை

16.2.1328 செவ்வாய்க்கிழமை பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு அக்ரோதகா (Agrotaka) என்ற இடத்தில் வாழ்ந்து வந்த இந்து வியாபாரிகளின் செழுமையை விளக்குகிறது.*

ஆக்ரா வியாபாரிகள்

அக்ரோதகா என்பது ஆக்ரா வியாபாரிகள் டில்லியில் தங்கியிருந்த குடியிருப்பு பகுதியாகும். நாரெய்டு கல்வெட்டும், சர்பான் கல்வெட்டும், டில்லியில் வாழ்ந்திருந்த இந்துக்கள் முகமது பின் துக்ளக்கின் தலைநகரமாற்றத்தினால் பாதிக்கப்படவில்லை என்பது புலனாகிறது. அதோடு அவர்கள் டில்லியிலே வாழ்ந்து வந்தார்கள் என்பதும் தெளிவாகிறது.

இரண்டாவது நிர்வாக மையம்

டில்லியிலிருந்து தேவகிரிக்கு தலைநகரை முகமதுபின் துக்ளக் மாற்றவில்லை. மாறாக அதனை இரண்டாவது நிர்வாக மையமாக மாற்றிடவே முயன்றார். டில்லியில் (Second Admini strative city) பேரரசுக்கு இரண்டு தலைநகரங்கள் இருந்தன.

★ *Asiatic society of Bengal May 1873 pP 102 - 104 and Epigraphia Indica January 1889 Vol I PP 93 -95.*

குவ்வத் உல் இஸ்லாம் (Qubbatul Islam)

டில்லி, தேவகிரி (குவ்வத் உல் இஸ்லாம்) என்ற இரு தலைநகரங்கள் இருந்ததாக அல் கல் சஉதி (Alqualshaudi) கூறுகிறார். *

தக்த்கா - இ.டில்லி (அல்ஹிஜ்ரி 730)

கி.பி. *1329 – 1330* இல் முகமது பின் துக்ளக் வெளியிட்ட நாணயத்தில் **தக்தீகா – இ – டில்லி என்ற (Takhtgah-i Delhi)** வாசகத்தைக் காண்கிறோம்.**

தக்த்கா - இ - தௌலதாபாத்

அல்ஹிஜ்ரி *731* இல் வெளியான நாணயம் *1330 – 1331* தக்த்கா – இ – தௌலதபாத் என்று உள்ளது Takhtgah - i - Daulatabad. ***

எனவே டில்லியும் தேவகிரியும் இரண்டு தலைநகரங்களாக முகமதுபின் துக்ளக் காலத்தில் விளங்கியிருத்தல் வேண்டும் என்பதனை இந்த நாணயங்கள் உணர்த்துகின்றன.

டில்லியில் நிர்மாணப்பணிகள்

தேவகிரிக்கு மக்களை கொஞ்சம் அனுப்பி வைத்த பிறகு முகமதுபின் துக்ளக் டில்லியில் சில நிர்மாணப் பணிகளைத் திட்டமிட்டு மேற்கொண்டார் என்றும் வரலாற்றில் குறிப்பு காணப்படுகிறது.****

அரண்மனையில் சந்தடி

கி.பி. *1327, 1330* ஆகிய இரண்டு ஆண்டுகளில் டில்லி அரண்மனையில் அவ்வப்போது முகமதுபின் துக்ளக்

★ *Otto spies, An Arab Account of India in the fourteenth century, page 30.*

★ Indian Museum catalogue volume II Page 59. (Takhtgah means capital) (தகத்கா என்றால் தலைநகர் என்று பொருள்.)

★★★ முற்கூறிய நூல் பக்கம் 60. நாணய எண் 385.

★★★★ *The Hisory and culture of the Indian People, volume VI Page 67.*

தங்கியிருந்தார் என்றும் எப்போதும் அரண்மனையில் சந்தடியிருந்து வந்தது என்றும் கூறப்படுகிறது.*

வரலாற்றில் சொல்லப்படும் தவறு

தேவகிரி (The hill of the gods) குத்புதீன் முபாரக்கில்ஜி (Qutbuddin Mubarak) காலத்தில் குத்பாபாத் (Qutbabad) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. குத்பாபாத் என்ற பெயரைத்தான் தௌலதாபாத் (Daulatabad) என்று முகமதுபின் துக்ளக் மாற்றினார்.

தேவகிரியை பெயர் மாற்றம் செய்தது, குத்புதீன் முபாரக்கில்ஜி. குத்பாபாத் என்ற அவர் மாற்றிய பெயரை தௌலதாபாத் என்று முகமதுபின் துக்ளக் மாற்றினார் என்பது தான் வரலாற்று உண்மையாகும்.

W.H. மோர்லேண்டு, ஏ.சி.சாட்டர்ஜி

ஆங்கிலத்தில் W.H. மோர்லண்டு, A.C. சாட்டர்ஜி இருவரும் சேர்ந்து எழுதிய நூல் இந்திய வரலாற்றுச் சுருக்கம் அதன் தமிழாக்கம் 1951 இல் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது. M.R. பெருமாள் முதலியார் இராமச்சந்திர தீட்சிதர் தமிழாக்கம் செய்தவர்கள் ஆவர்.

அந்த நூலில் பக்கம் 219 இல் முகமது துக்ளக்கின் முக்கிய திட்டங்களில் ஒன்று தன்னுடைய தலைநகரை தேவகிரிக்கு மாற்றுவது

புத்திசாலித்தனமானது

அந்தத் திட்டம் ஒரு வகையில் புத்திசாலித்தனமானது தான். அந்த நகரம் இராஜ்ஜியத்தின் மத்தியிலிருந்து மங்கோலியர்களால் டில்லிக்கு எந்தச் சமயத்திலும் ஆபத்து ஏற்படலாம். ஆனால் தேவகிரிக்கு அந்த ஆபத்து இல்லை.

நல்லதுதான்

ஆகவே தலைநகரத்தை டில்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றுவது நல்லது தான் என்று M.H. மோர்லேண்டும் A.C. சாட்டர்ஜியும் தெரிவித்துள்ளனர்.

---

* *N.B. Ray, Journal of Indian History, Volume XX, Page 170.*

வின்ஸ்டன்ஸ்மித் - சரியன்று

ஆக்ஸ்போர்ட் இந்திய வரலாற்றில் வின்ஸ்டன் ஸ்மித் கூறுகிறார்.

கி.பி. 1327 இல் மக்கள் தௌலதாபாத்துக்கு மாற்றப்பட்டனர். இது தண்டிப்பதற்காகச் செய்யப்பட்டதென்றும், **முகமதுபின் துக்ளக்கின் வெடுவெடுப்பின் உற்பத்தி அது என்றும் மிகக் கடுமையாகச் செய்து முடிக்கப்பட்டதென்றும் கூறுவது சரியன்று.**

விந்தியமலைக்கு இப்பால் பேரரசின் இராணுவ நிர்வாகப் பிரச்சினையை முடிப்பதற்கு இராணுவக் கண்ணோட்டத்தில் சிறந்த இடத்தில் அமைந்திருந்தது தௌலதாபாத். எனவே அந்நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தெற்கில் முஸ்லிம்களின் எண்ணிக்கையும் செல்வாக்கும் அதிகரிக்க ஒருவேளை இம்மாற்றம் செய்யப்பட்டிருக்கக்கூடும்.

நாணயச்சாலை ஒன்றினை தில்லியில் நீடித்துவைத்து அந்நகரில் கட்டிடங்களைக் கட்டிக் கொண்டேயிருந்தது இரண்டு ஆண்டுகளுக்குப்பின் டில்லியில் தனது இராணுவத்தை முகமது பின் துக்ளக் வலுப்படுத்தியது ஆகியவையெல்லாம் பிரபுக்களும் அலுவலர்களும்தான் தௌலதாபாத்திற்கு மாற்றப்பட்டனர் என்பதை அறிவிக்கின்றன.

But the contiunance of a mint in Delhi and of building activity, and the Sultan's re-equipment of his army there only two years later, Suggest that the move was for nobles and officials only. ★

எட்டு ஆண்டுகள்

தேவகிரி அல்லது தௌலதாபாத் மற்றுமொறு தலைநகரமாக அறிவிக்கப்பட்ட எட்டு ஆண்டுகளில் முகமது பின் துக்ளக், தில்லிக்குத் திரும்புபவர்கள் திரும்பிச் செல்லட்டும் என்று அறிவித்தார்.

★ *Vincent A.Smith, The Oxford History of India, Part I Revised S.B. Harrison, Oxford 1964, Page 250 - 251.*

17 ஆண்டுகள்

17 ஆண்டுகள் கடந்த பின் (கிபி 1344 இல்) தான் தேவகிரி தலைநகரமாக முகமதுபின் துக்ளக்கால் அறிவிக்கப்பட்டது என்று பேராசிரியர் சத்தியநாதய்யர் கூறுகிறார்.

Though the Sulthan allowed, Eight years after the experimant, those who wished to return to Delhi to do so, Devagiri was abandoned as the imperial capital only after seventeen years. ★

வியத்தகு இந்தியா

A.L. *பாசம்* B.A., Ph.D., FRAS *இலண்டன் பல்கலைக்கழகத்தில் இந்திய வரலாற்றுப் போராசிரியர் 1954இல்* The Wonder that was India *என்ற நூலை எழுதினார். 1956 இல் மறுபதிப்பு கண்டது அந்த நூல். 1963 இல் இலங்கை அரசாங்கம் அதனைத் தமிழாக்கம் செய்து வெளியிட்டது.*

செ.வேலாயுதம் பிள்ளை - மகேசுவரி பாலகிருட்டிணன்

ஏ.எல்.பாசம் நூலை செ.வேலாயுதம் பிள்ளை, மகேசுவரி பாலகிருட்டிணன் ஆகியோர் தமிழில் மொழி பெயர்த்து இலண்டன் சிட்சுவிக்கு யாக்சன் கம்பெனியார் அனுமதியுடன் வெளிவந்தது.

முகமதியர் (முஸ்லிம்கள்) வருகைக்கு முன் இந்தியத் துணைக் கண்டத்திலே நிலவிய பண்பாட்டை ஆராய்வது என்ற அளவில் ஏ.எல்.பாசத்தின் வியத்தகு இந்தியா வெளிவந்தது. அதில் தேவகிரி குறித்துச் சொல்கிறார். பக்கம் 187.

“முசிலிம் வருகைக்கு முற்பட்ட மிகச்சிறந்த அரண் தேவகிரிக்கோட்டையாகும். இன்று இது தௌலதாபாத்து எனப்படும்.” இது 1312 இல் அலாவுதீன் கல்சி என்பவருடைய படைகளாற் கைப்பற்றப்படும் வரை வடதக்கணத்தில் அரசாண்ட யாதவ மன்னரின் தலைநகராய்த் திகழ்ந்தது.

★ *R.Sathianathaier, Indian History Volume II, Madras 1941, Page 50.*

புற மதில்கள் - முசிலிம் மன்னர்கள்

தேவகிரி கோட்டையின் புறமதில்கள் பெரும்பாலும் பிற்கால முசிலிம் மன்னரால் மாற்றியும் விரிவாக்கியும் அமைக்கப்பட்டுள்ளது. (முகமதுபின் துக்ளக் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை)

ஆயின் எய்தற்கரிய குன்றுச்சியில் அமைந்து விளங்கும் நகர அரண் திண்பாறைகளைக் குடைந்து இந்து மன்னர் செய்த இடைகழிகளை இன்றுங் கொண்டிருக்கின்றது. உண்மையில் உச்சியை அடைதற்குரிய தனிச் சாதனமாக அமைந்துள்ள இவ் இடை கழிகள் இடைக்கால இந்தியரின் பொறியியற் திறமைக்கு ஓர் நினைவுக் குறியாகவும் விளங்குகின்றன.

தௌலதாபாத் என்ற தேவ கிரியின் புறமதில்கள் முஸ்லிம் மன்னரால் மாற்றியும் விரிவாக்கியும் அமைக்கப்பட்டது.

The Outer fortifications have mostly been replaced and developed by later muslim rulers.*

இந்திய கலாச்சார வரலாறு

இந்திய கலாச்சார வரலாறு எனும் நூலைத் தொகுத்து வெளியிட்டார். ஏ.எல்.பாசம். 35 வரலாற்று அறிஞர்களின் கட்டுரைத் தொகுப்பு அந்த நூல். 1975 இல் ஆக்ஸ்போர்டு வெளியீடு. இந்தியாவில் மறுபதிப்பு 1983 அடுத்த பதிப்பு 1984. 585 பக்கங்கள். மேலும் பல பக்கப்படங்கள்.

SA.A. ரிஸ்வி

முஸ்லிம் அரச பரம்பரையினர் குறித்து எஸ்.ஏ.ஏ. ரிஸ்வியின் கட்டுரை அந்த நூலில் 245வது பக்கம் முதல் 265 வது பக்கம் வரை 17வதாக வந்துள்ளது அதில் கூறுவார்.**

In 1326-1327 hedecided upon a plan to make Devagiri the second administrative capital of him empire.

★ *A.L.Basham, The Wonder that was india, New Delhi 1995, Page 135.*

★★ *Edited A.L. Basham, A Cultural History of India, 1984 New Delhi 1984, Page 254.*

தேவகிரியை இரண்டாவது நிர்வாகத் தலைநகராக மாற்றிடத் தான் முகமது பின் துக்ளக் முயன்றதை தெளிவுபடுத்தியுள்ளார். (அந்த நூலில் 2007 இல் திராவிடர்கள் மற்றும் முஸ்லிம் அரச வம்சம் பற்றிய கட்டுரைகள் நீக்கப்பட்டு விட்டது. 585 பக்கங்களைக் கொண்ட நூல் 300 பக்கங்களாகச் சுருங்கிப் போயிற்று.)

சமூகக் கலாச்சாரத் தடைகள் நீக்கம்

முகமதுபின் துக்ளக்கின் தலைநகர் மாற்றத் திட்டத்தால் நீண்ட கால விளைவுகள் ஏற்பட்டு, மாபெரும் மாற்றங்கள் நடைபெற்றன. வடஇந்தியாவிற்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான சமூக கலாச்சாரத் தடைகள் நீக்கப்பட்டன. முஸ்லிம் அறிவாளிகளும், புலவர்களும் கற்றறிந்தவர்களும் தெற்கு நோக்கி வந்து நிலையாகக் குடியேறினர். அறிவு வளம் தழைத்தது. அரசாங்கப் பதவிகளில் இருந்தவர்கள் நிலங்களை வாங்கி பண்ணைகளை உருவாக்கி சமூகச் செல்வாக்கைப் பெற்றனர்.

இஸ்லாம் பரவியது

விந்தியமலைகளுக்குத் தெற்கே இஸ்லாமியப் பிரச்சாரம் நடைபெற்றது. இஸ்லாத்தினை பலர் தழுவினர். இஸ்லாமியரின் எண்ணிக்கை அதிகரித்தது. இஸ்லாமியப் பண்பாடு தென்னிந்திய கலாச்சாரப்பகுதியானது. தக்காணம் முஸ்லிம் அதிகார மையமாயிற்று. அத்தோடு பாமினி அரசும் பிறந்தது.

ஜெ.எல்.மெஹ்தா

மேலே கூறிய கருத்துக்களை அடியேன் கூறவில்லை. ஜெ.எல். மெஹ்தா தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.★

முகமதுபின் துக்ளக்கின் முயற்சியில் தெற்கே இஸ்லாம் பரவியதைப் பொறுத்துக் கொள்ள இயலுமா! கோமானை கோமாளி போல சித்தரித்து வரலாற்றைப் புனைந்துரைத்தனர் என்பதனை நாம் உணரமுடிகிறதல்லவா!.

★ *J.L. Mehta, Advanced Study in the History of Mediaval India, Volume I, New Delhi, 2009, Page 203.*

பரணீயின் வெளிப்படையான தவறு

பேரரசின் தலைநகராம் டில்லியைப் பாழாக்கி, தேவகிரியைத் தௌலதாபாத் எனும் பெயரில் தலைநகரம் ஆக்கினார். தௌலதாபாத் பேரரசின் மையத்திலுள்ளது. டெல்லி, குஜராத் லக்னாவதி, தெலுங்கானா, மாபார், துவார சமுத்திரம், கம்பிலா தேவகிரியிலிருந்து சம தூரத்தில் உள்ளவை என்கிறார் பரணீ. (Kampila) தேவகிரியிலிருந்து கம்பிலாவும், (Kampila) மாபாரும் (மதுரை) சமதூரத்தில் உள்ளவை என்று கூறுவது தவறு என்பது வெளிப்படை என்பர் ந.சுப்பிரமண்யன்.*

பரணீ, இபுனுபத்தூதா போன்றவர்கள் தங்களது சுயவெறுப்பால் முகமதுபின் துக்ளக்கின் எழுதிய வரலாற்றைப் புறந்தள்ள வேண்டும்.

அப்துல்காதிர் பதாயூனி

டபிள்யூ.என்.லீஸ், கபீருத்தீன் அகமது, அஹமது அலி தொகுத்தது. அப்துல் காதிர் பதாயூனியின் முண்டகப் உல் தவாரீக்கீ. G.S.A.ராங்கிங் முதல் தொகுதியையும் W.H. லோவ் இரண்டாவது தொகுதியையும், T.W.ஹேக் மூன்றாவது தொகுதியையும் மொழி பெயர்த்தனர். இந்த நூலில் முகமதுபின் துக்ளக் தேவகிரிக்கு தனது தாயார் மக்தூமாஜஹராணை தன்னோடு முதலில் அழைத்துக்கொண்டு சென்றார் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

தானே முன்னுதாரணமாக

முகமதுபின் துக்ளக் தனது தாயாரையும் அரச குடும்பத்தாரையும் முதலில் தேவகிரிக்கு அழைத்து முன் உதாரணமாகத் திகழ்ந்தார்.**

★ ந.சுப்ரமண்யன், இந்திய வரலாறு கி.பி. 1000 - 1707, சென்னை, 1976, பக்கம் 127.

★★ *Abdul Qadir Badauni, Muntakhab-ut, Tawarikh, Editedby W.N.Lees, Kabiraddin Ahmad and Ahmad Ali, Biblitheca Indica 3 Volumes Calcutta, 1864 - 1869. Translated by G.S.A. Ranking (Volume I) W.H. Lowe (Volume II) and T.W. Haig (Volume III) Biblitheca Indica, Calcutta, 1884 - 1925.*

பிரிட்டிஷார் செய்தது

வணிகக் கொடி பிடித்து வந்து வஞ்சக வலைவிரித்து, பிரித்தாளும் சூழ்ச்சியை முன் வைத்து பிரித்தானியர் இந்தியத் திருநாட்டை வளைத்துக் கொண்டனர். ஆங்கிலேய அரசாங்கத்தின் வடமேற்கு எல்லைகள் ஈரான், ஆப்கானிஸ்தானம் வரை எட்டியது. எனவே கி.பி. 1911 இல் அதுவரை தங்களது தலைநகராக இருந்த கல்கத்தாவிலிருந்து தலைநகரை புதிதாக தில்லிக்கு மாற்றினார்கள் இது வரலாறு.

சுதந்திர இந்தியாவில் 1948 இல் நாட்டின் வட மேற்கில் தில்லி ஒதுங்கி இருப்பதால் ஒன்றிய அரசாங்கத்தின் அலுவலகங்களில் சிலவற்றை மத்திய இந்தியாவிலும், நாக்பூருக்கும், ஹைதரபாத்திற்கும் மாற்றிட வேண்டும் என்றும், இந்தியாவில் குடியரசுத் தலைவர் சில காலம் தக்காணத்தில் வசிக்கவேண்டுமென்றும் பேச்சு எழுந்தது. ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. ஆளும் அரசுகள் தலைநகரினை நிர்வாக வசதிக்காக மாற்ற முயற்சிப்பது, இரட்டைத் தலைநகரங்களை உருவாக்குவது என்பது வரலாற்றில் புதியது அல்ல.

மகாஜவன்

மகா ஜவன் (Ivan the greas) கி.பி. 1462 – நாற்பத்தி மூன்று ஆண்டு காலம் ரஷ்யாவை 1505) ஆட்சி புரிந்தவன்.

ஜார்

Tsar (CZar) சீஸர் (Caesar) என்ற வார்த்தையே ஜார் என்று ஆயிற்று மகா ஐவனே முதல் முதலாக தன்னை ஜார் என்று அழைத்துக் கொண்டவன் இவன் ருஷ்யாவை ஒன்று படுத்தி மாஸ்கோவை தலைநகர் ஆக்கினான். க்ரெம்ளின் அரண்மனையின் பெரும் பகுதி இவனால் கட்டப்பட்டது.

மகா பீட்டர்

ரஷ்யாவில் மகாபீட்டர் 1689 இல் அரசரானார் இவர் காலத்தில் செயிண்ட் பீட்டர்ஸ பர்க் ரஷ்யாவின் தலைநகரமாக இருந்தது.★

★ கன்ஸ்தந்தீன் தர்னோ வஸ்கி, சோவியத் யூனியன் சித்திர வரலாறு, 1983, பக்கம் 33.

டிமிட்ரி

ரஷ்யாவில் மங்கோலியர்களை முதன் முதலில் தைரியமாக எதிர்த்து வெற்றி கண்டவன் **டிமிட்ரி** (Dmitri), ருஷ்ய சரித்திரத்தில் மாஸ்கோ (Moscow) என்ற பெயர் கி.பி. 1147 இல் தான் வருகிறது.

விளாடிமீர்மோனாமாக்

விளாடிமீர்மோனாமாக் சுத்தவீரன், யாரஸ்லாவின் பேரன், இங்கிலாந்து அரச குமாரியை மணந்தவன். சீவ் நகரத்தை 1113 – 1125 வரை ஆட்சி புரிந்தவன் Book of Instructions எனும் நூலின் ஆசிரியன் தனது ராஜ்யத்தை தன் ஏழுபிள்ளைகளுக்கும் பிரித்துக் கொடுத்தான். ஜார்ஜ் என்ற பிள்ளைக்கு சூஸ்டால் என்ற பிரதேசம் கிடைத்தது.

மாஸ்க்வி

மாஸ்க்வி (Moskva) நதிக்கரையில் தனது சுகவாச நிமித்தம் ஒரு வீட்டை ஜார்ஜ் நிர்மாணித்தார். அந்த இடம் இப்போதையக் கிரம்லின் அரண்மனை (Kremlin) இருக்கிற இடம் இந்த இடம் மெல்ல வளர்ந்தது. சூஸ்டால் அரச பரம்பரையில் அலெக்ஸாந்தர் நெவ்ஸ்க்கி (Alexander Nevski 1236-1263) தனது கடைசி மகன் டேனியலுக்கு (Daniel) மாஸ்கோவையும் அதைச் சுற்றியுள்ள 500 சதுர மைல் பிரதேசத்தையும் கொடுத்தார். கி.பி. 1263 மாஸ்கோவின் வளர்பிறை வாழ்வு தொடங்கியது. * என்பார் வெ.சாமிநாதசர்மா.

நெவா ஆற்றின் கரையில்

கரேலியப் பகுதியில் நெவா ஆற்றின் முகத்துவாரத்தில் கட்டப்பட்டது. செயின் பீட்டர் ஸ்பார்க் நகரம் பால்டிக் கடலின் கிழக்கு கரையில் உள்ள அந்நகரம், மேற்கு நாடுகளை நோக்கிய ஜன்னல் (Window of the west) எனப்பட்டது. மேற்கு நாடுகளோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்ற ஆசையில் அந்நகரம் அமைந்திருந்தது.**

★ ருஷ்யாவின் வரலாறு, புதுக்கோட்டை, மூன்றாம் பதிப்பு 1959 பக்கம் 53.

★ தியாகராஜன், ஜார்ஜ் ஸ்டீபன், ரஷ்ய வரலாறு. மதுரை, ஆண்டு இல்லை. பக்கம் 12.

கி.பி. 1703

கி.பி. 1703 இல் வேட்டையாட வந்தபோது மகா பீட்டர் தங்கிட போர் வீரர்களால் மூன்று அறைகளைக் கொண்ட மர வீடு அமைக்கப்பட்டது. அந்த வீட்டில் ஐந்து ஆண்டுகள் தங்கிட, மகா பீட்டர் பீட்டர் ஸ்பர்க் நகரத்தை நிர்மானித்தார். சதுப்பு நிலமாக வெள்ளத்தால் பாதிக்கப்படக் கூடியதாக நாட்டின் ஓர் ஓரத்தில் அந்நகர் அமைந்தது. பீட்டர்ஸ் பர்க் தலைநகரானது.*

3.3.1918

கி.பி. 3-3-1918 இல் ருஷ்யப்பிரதிநிதிகளும் செர்மனியப் பிரதிநிதிகளும் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். 16.3.1918 இல் நான்காவது சோவியத் காங்கிரசில் அது ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

ப்ரெஸ்ட் - லிடோவ்ஸ்க் ஒப்பந்தம்

ப்ரெஸ்ட் லிடோவ்ஸ்க் நகரத்தில் இந்தப் பேச்சு வார்த்தை நடைபெற்று முடிந்ததால் அதற்கு ப்ரெஸட் - லிடோவ் ஸ்க் ஒப்பந்தம் என்று பெயர் (Treaty of Brest Litovsk)

போலந்து, லிதுவேனியா, கூர்லாந்து லிவோனியா, எஸ்தோனியா, பெஸ்ஸரேபியா பைலோரஷ்யா ஆகிய பகுதிகளை ரஷ்யா இழந்தது.

பின்லாந்து, உக்ரெயின் (Ukraine) பகுதிகளின் விடுதலையை ரஷ்யா அங்கீகரித்தது. பாதும், எரிவன், கார்ஸ் பகுதிகளை ரஷ்யா துருக்கிக்கு கொடுத்தது. ரஷ்யா உக்ரைன் உட்பட பலவற்றை இழந்தது. **

13 லட்சம் சதுர மைல்

ரஷ்யா மொத்தத்தில் 13 இலட்சம் சதுர மைல் நிலப்பரப்பை இழந்தது. 6.5 கோடி மக்களைத் கொண்ட அப்பகுதிகள் ஜெர்மனியைப் போல இருமடங்கானவை.

★ ம.இராசசேகர தங்கமணி, சு.முத்துராஜ், ரஷ்ய வரலாறு மகா பீட்டர் காலம் முதல் 1964 வரை சென்னை 1977, பக்கங்கள். 39, 40.

★★ *John Lawrence, A History of Russia, New York, 1993 page 239.*

ரஷ்யா தொழிற்சாலைகளில் 37 சதவீதத்தையும் நிலக்கரி வயல்களில் 75 சதவீதத்தையும் இரும்புச் சுரங்கங்களில் 73 சதவீதத்தையும் அப்போது இழந்தது.

பெட்ரோ கிராடு

செயின்ட் பீட்டர்ஸ் பர்க் என்றிருந்த பெயர் பெட்ரோ கிராடு (Petrograd) என மாற்றப்பட்டிருந்தது.

12.3.1918

உலகின் முதலாவது தொழிலாளர் விவசாயிகள் அரசின் தலைமையிடம் பெட்ரோகிராட்டிலிருந்து மாஸ்கோவிற்கு மாறியது; ரஷ்யாவின் தலைநகரமாக மாஸ்கோ 12.3.1918இல் மாறியது.★

ரஷ்யாவின் தலைநகரம் மாஸ்கோ பீட்டர்ஸ் பர்க் மறுபடியும் மாஸ்கோ என்று மாற்றப்பட்டது வரலாறாகும்.

காதல் காவியங்கள்

ஷேக்ஸ்பியரின் அந்தோணியும் கிளியோ பாட்ராவும், நாடகத்தில் வரும் புகழ் பெற்ற காதலர்கள் அந்தோணியும், கிளியோபட்ராவும் சந்தித்த இடம் டாரஸ். புனித பால் பிறந்தது இங்கு தான். ஹோமரின் **'இலியட்', 'ஒடிஸி', வெர்ஜிலின் இளியட்** காவியங்களில் வரும் கனவுக்கன்னி ஹெலன் வாழந்த இடம் ட்ராய்.

வரலாற்றின் தந்தை

வரலாற்றின் தந்தை **ஹெரோட்ட்டஸ்** பிறந்தது **ஹலி கார்னாசஸ்** புனித பிலிப் **உயர்த்தியாகம் செய்த இடம் ஹைரபோலிஸ்.**

கிறிஸ்துமஸ் தாத்தா

கிறிஸ்மஸ் தாத்தா சான்டாக்ளாஸ் என்ற புனித நிக்கோலஸ் பிறந்த இடம் டெம்ரா.

★ *K.Tarnovsky illustrated History of the USSR, 1983 Tamil, Page 118.*

மௌலானா ரூமி

பாரசீக ஷேக்ஸ்பியர் என்று அழைக்கப்படும் சூபி ஞானி மௌலானா **ரூமி** காலமானது கென்யா. இந்த இடங்கள் எல்லாம் துருக்கியில்தான் உள்ளது.*

துருக்கியர்கள்

அனடோலியா (Anatolia) ஆசியா மைனர் (Asia Miner) என்று அழைக்கப்பட்ட நாடு துருக்கி. எஃகுத்தொப்பி போன்றதொரு வடிவுடையமலை மீது மங்கோலியாவிலிருந்து வந்தவர்கள் குடியேறினர். எஃகுத் தொப்பி என்ற சொல்லுக்கு 'துர்க்' என்ற பெயர். இவர்கள் தங்களைத் துருக்கியர்கள் என்று அழைத்துக் கொண்டனர்.**

கான்ஸ்டான்டின் நோபின்

துருக்கியின் தலைநகரம் கான்ஸ்டாஸ்டின் நோபிளாக இருந்தது.

அங்கோரா

அஞ்சா நெஞ்சர் முஸ்தபா கமால் *16.3.1920* இல் இஸ்தாம்பூலிருந்து தப்பி வந்து தேசியத் தலைவர்கள் அடங்கிய பார்லிமெண்டை **அங்கோரா** நகரில் ஏற்படுத்தினார். ***

லாஸேஸில் சமாதானமாநாடு

21.11.1922 இல் துவங்கிய லாலேஸன் சமாதான மாநாடு மூன்று மாதங்கள் நடைபெற்றும் பலன் தரவில்லை. *1923* பிப்ரவரியில் முறிந்து போனது. *9.4.1923* இல் மீண்டும் கூடியது. *24.6.1923* வரை நடைபெற்றது. உடன்படிக்கை ஏற்பட்டது. *2.10.1923* இல் துருக்கியிலிருந்த அன்னியப்படைகள் அனைத்தும் அகற்றப்பட்டது.

---

* முு.பஷீர் அஹமது, ஆசிய இஸ்லாமிய நாடுகள், சென்னை, 1017 பக் 373.

** செ.சாமிநாத சர்மா, கமால் அத்தா துர்க், சென்னை, 2001, பக்கம் 14.

*** முஸ்தபா கமால் பாட்சா, முஸ்லிம் நூற் பதிப்புச் சாலை சென்னை, 1922 பக்கம் 25.

13.10.1923

13.10.1923 இல் துருக்கியின் தலைநகராக 'அங்காரா' பிரகடனப் படுத்தப்பட்டது.*

29.10.1923

துருக்கிய ஜனநாயக அரசாங்கம் *29.10.1923* இல் அங்கோரா (Angora) அங்கிரா) என்னும் நகரைத் தன்னுடைய தலைநகராய்க் கொண்டது.** துருக்கியின் தலைநகர் ஆங்க்ரா மிகப்பெரிய நகர் இஸ்தன்பூல்.*** Mustafa Kemal Proclaimed on Oct 29, 1923 a Turkish republic. ****

தேசிய விடுமுறை

29.10.1923 அன்று அங்கோரா தலைநகராக அறிவிக்கப்பட்டது அந்த அக்டோபர் தினத்தை துருக்கியில் தேசிய விடுமுறையாகக் கொண்டாடுகிறார்கள்.*****

அறுபது இலட்சம் - இஸ்தான்பூல்

மக்கள் தொகையில் பெரியது இஸ்தான்பூல் (ஏறத்தாழ 60 இலட்சம்) தலைநகர் அங்காராவில் மக்கள் தொகை (ஏறத்தாழ

★ டி.செல்வராஜ், வீரத்துருக்கி வல்லரசு, உதவி ஆசிரியர் தாருல் இஸ்லாம்) ஷாஜஹான் புக்டிப்போ, சென்னை ஆண்டு இல்லை பக்கம் 69. கே.எஸ்.நாகராஜனின் கெமால் பாஷா என்ற நூலையும் வாசித்திடலாம். மா.இராசமாணிக்கனார், துருக்கியின் தந்தை, சென்னை, 1959, பக்கம் 99. துருக்கியின் அரசியல் முக்கியத்துவம் பற்றி அறிய எஸ்.எஸ்.மாரிசாமியின் துருக்கி நூலை வாசிக்கலாம் (1944 சென்னை).

★★ ஹாபிஸ் ஏ.என்.முஹம்மது யூசுப்சாஹிப், முஸ்லிம் உலக மன்னர்கள், சென்னை, நூருல் இஸ்லாம் புத்தக சாலை 1947, பக்கம் 18.

★★★ கலைக்களஞ்சியம் தொகுதி 6, தமிழ் வளர்ச்சிக்கழகம் சென்னை, 1959, பக்கம் 103.

★★★★ *Lord Kinross, The ottomen Centuries, The Rise and Fall of the Turkish Empire, New York 1977. Page 609.*

★★★★★ *Year Book of the muslim world 1996, Edited Mohammed Nasir Jawed, New Delhi, Page 323.*

40 இலட்சம்) இருபது இலட்சம் மக்கள் தொகை வித்தியாசமுள்ள அங்காரா தான் துருக்கியின் தலைநகரம்.★ இஸ்தான்புல்லை மாற்றிவிட்டு அங்காராவை துருக்கியின் தலைநகராக அறிவித்த தீரன் முஸ்தபா கமால் பாட்சா வரலாற்றில் போற்றப்படுகிறார். செயின்ட் பீட்டர் ஸ்பர்க்கை மாற்றி மாஸ்கோவை ரஷ்யாவின் தலைநகராக அறிவித்த மாமேதை லெனின் போற்றப்படுகிறார். டில்லியிருந்து தேவகிரிக்கு இரண்டாவது தலைநகரை உருவாக்க முயன்ற முகமதுபின் துக்ளக் தூற்றப்படுவது சரியா?

400 சீடர்கள்

ஹஸ்ரத் ஷாஹ் நிஜாமுத்தீன் அவ்லியா என்னும் இறைநேசர். தமது தில்லி சீடர்கள் தலைசிறந்த 400 பேர்களை தேவகிரிக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் ஷெய்க்புர்ஹானுத்தீன்

மௌலானா புர்கானுத்தீன் தலைமையில் (Maulana Burhan Uddingharib) இறை நேசர்கள் தேவகிரிக்குச் சென்றார்கள்.

ஷெய்க் புர்கானுத்தீன்★★ தேவகிரிக்குச் சென்று சிறப்பான கடமையாற்றினார்கள். சில நூல்களை எழுதினார்கள். தௌலதாபாத்திலே வாழ்ந்து அங்கேயே மறைந்த பின் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

மௌலானா பக்ருதீன்

மௌலான பக்ருதீன் (Malwnana Fakhr - Uddin Zarradi) *தனது மக்கா (ஹஜ்) யாத்திரையை முடித்து விட்டு, தௌலதாபாத் சென்றார்கள். அங்க இறைப்பணி புரிந்தார்கள்.★★★*

மௌலானா சிராஜீதீன் உஸ்மான்

மௌலானா சிராஜீதீன் உஸ்மான் (Maulana Siraj - Ud-din Usman) தௌலதாபாத்திற்கு இறைப்பணிக்கு விரும்பிச்

★ சோமலெ.உலக நாடுகள், சென்னை. 1987 பக்கம் 241.

★★ *Siyar-ul-Auliya P.P.278 - 282*

★★★ கலிக் அகமது நிஜாமி முற்கூறிய ஷேக் நிஜாமுதீன் அவுலியா நூல் பக்கம் 162.

சென்றார்கள். இஸ்லாம் மார்க்கத்தினை மக்கள் தழுவச் செய்தார்கள்.*

மௌலான சிகாபுதீன்

முகமதுபின் துக்ளக் கட்டளையை ஏற்று தௌலதாபாத் சென்று இஸ்லாமியப் பிரச்சாரம் செய்து மீண்டும் சில ஆண்டுகளுக்குப் பின்னர் டில்லிக்கு திரும்பியவர் மௌலானா சிகாபுதீன் (Maulana Shihab-uddin)** தனது மானசீகக் குருவான ஹஸ்ரத் நிஜாமுத்தீன் அவ்லியா தௌலதாபாத் நகரத்திற்கு முக்கியத்தும் அளித்து தனது 400 முக்கிய சீடர்களை அனுப்பி அங்கு இஸ்லாமியப் பிரச்சாரம் செய்ய வைத்து; மார்க்கத்தினைத் தழுவச் செய்யக் காரணமாக அமைந்த தௌலதாபாத்தை தனது இரண்டாவது தலைநகரமாக முகமதுபின் துக்ளக் ஆக்கிட விரும்பியது உண்மை.

கலக வாய்ப்பு குறையும்

முகமதுபின் துக்ளக் டில்லியில் மட்டும் குடியிருக்க மாட்டார். தௌலதாபாத்தில் தங்கியிருப்பார் என்பதால் அங்கு டில்லி அரசை எதிர்த்து கலகம் செய்பவர்கள் புரட்சி செய்ய நினைப்பவர்கள் கட்டுப்படுத்தப்படுவர் என்பதனையும் முகமது பின் துக்ளக் உணர்ந்திருந்தார்.

சமய வாழ்வில் வடக்கும் தெற்கும்

தலைநகர மாற்றத்தின் விளைவாக வடக்கு, தெற்குப் பகுதிகளைப் பிரித்திருந்த தடைகள் அகற்றப்பட்டன. இஸ்லாமிய மார்க்கமும், கலாச்சாரமும் தெற்கே வேகமாகப் பரவிடத் துணை புரிந்தது. தௌலதாபாத்திற்கு வந்து வாழ்ந்து இஸ்லாமியப் பிரச்சாரம் செய்து மறைந்த இறைநேசர்களின் அடக்கஸ்தலங்கள் ஏராளம் ஏற்பட்டது. அந்த சமாதிகளில் ஜியாரத் செய்திட டில்லியிலிருந்தும், வடக்கேயிருந்தும் உறவினர்கள் தௌலதாபாத் நோக்கி வந்தார்கள். அவர்களுடைய இதயங்கள் தெற்கிலுள்ள மண்ணுடன் இணைக்க இச்சமாதிகள் கருவிகளாக அமைந்தது. இதனை விளைவாக வடக்கும் தெற்கும் இணைய வழி ஏற்பட்டது.

★ *Akhbar-Ul Akhyar- PP-86-87*

★★ *Marij-ul Walayat, MS, Vol I, PP 320- 322.*

On all the Four Sides of Daalatabad there appeared graveyards of Musalmans. ★

டெல்லியில் அலுவலகங்கள்

முகமதுபின் துக்ளக்கின் அரச அலுவலகங்கள், முதன்மையான அலுவலர்கள் டெல்லியிலேயே முகமதுபின் துக்ளக் ஆட்சிக் காலம் முழுமையும் இருந்தது. கி.பி. 1337 இல் முகமது பின் துக்ளக் தௌலதாபாத்திலிருந்து தில்லிக்குத் திரும்பும் மக்களுக்கு அனுமதி அளித்தார் என்று மூர்லேண்டு கூறியுள்ளார்.★★

தலைநகர் மாற்றம் நல்ல திட்டம். துருக்கியில் இஸ்தான்பூல் அங்கோரா, ரஷ்யாவில் செயின்ட் பீட்டர் ஸ்பர்க், மாஸ்கோ இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியில் கல்கத்தா, சிம்லா அதன் பின் 1911 இல் டில்லிக்கே தலைநகர் மாற்றம் இவ்வாறு வரலாற்றில் தலைநகர் மாற்றம் நடைபெற்றிராத நிகழ்வல்ல. முகமதுபின் துக்ளக் காலத்தில் நல்ல நோக்கத்தில் நிறைவேற்றிய திட்டத்தை சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக நச்சுக் கருத்துக்களைச் சொல்லி அவரை குற்றவாளி போல சித்தரித்து விட்டார்கள் என்பது வரலாற்று உண்மை.

தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு வகைப்பட்டவையும் பல்வேறு மதிப்புடையவையும் ஆகிய நாணயங்கள் வழக்கில் இருந்ததால் மக்களுக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டன. ஒரு புதிய ஆளுநறுடைய ஆட்சியிலிருக்கும் மாகாணத்திற்குப் போனால் புதிய நாணயம் தேவைப்படுகிறது. ஆதலில் இன்றைக்கு நமது கையிலிருக்கும் நாணயம் நாளைக்கு செல்லாமற்போகும் என்று சீசர் பிரடலிக் முணுமுணுக்கிறார்.★

★ *Futuhat-I Firuz shahi, Page 343.*

★★ *W.H.Moreland, The Agrarian System of Moslem India, Cambridge, 1929, Page 49.*

★★★ *K.A.* நீலகண்டசாஸ்திரி, தென்இந்திய வரலாறு பாகம் *II*, சென்னை 1973, பக்கம் 45 (மு.ரா. பெருமாள் முதலியார் மொழிபெயர்ப்பு)

அடையாளப் பணமும் அவதூறும்

முகமது பின் துக்ளக்கின் முழு வரலாற்றினையும் மொத்த நிர்வாகத்தையும், அடக்கிய கலகங்கள் பற்றியும் ஆட்சி அதிகார நிர்வாகம் பற்றியும் எழுதப்போவதில்லை. இனி அவர் கொண்டு வந்த அடையாளப் பணத் திட்டம் (Token Currency) பற்றிய வரலாற்றையும் அதுகுறித்து அவதூறுகளையும் உண்மைகளையும் ஆராய்வோம்.

ரகுநாத் கர்னாட்

போஸ்ட் மார்ட்டம் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர் **ரகுநாத் கர்னாட்** மும்பை பிரசிடென்சியில் **சிர்சா,** கன்னடத்து **தார்வார்** நகரங்களில் பணிபுரிந்தவர்.

கிருஷ்ணாபாய்

கையில் ஒரு குழந்தையும் இளம் விதவையுமான கிருஷ்ணாபாயை செவிலியர் ரகுநாத் கார்னட்ர் ஐந்து ஆண்டுகள் காதலித்து விதவைத் திருமண எதிர்ப்பு நிலவிய காலத்தில் திருமணம் செய்து கொண்டார்.

கொங்கன் பிராமணர்

ரகுநாத் கர்னாட் கொங்கன் பிராமணர் தனது மரணத்தின்போது பணம் பறிக்கும் புரோகிதக் கும்பல் வந்து விடக்கூடாது என்று சொல்லிவிட்டு இறந்தார்.*

கிரிஷ்கர்னாட்

ரகுநாத் கர்னாட் – கிருஷ்ணபாய் தம்பதியரின் நான்கு பிள்ளைகளின் மூன்றாவது பிள்ளை கிரிஷ்கர்னாட் ஆக்ஸ் போர்ட்டில் கல்வி பயின்றவர். இவரது முதல் நாடகம் யாயாதி *(1961)* (Yayati) இரண்டாவது நாடகம் துக்ளக். *1964* இல் கன்னடத்தில் எழுதினார். அது இந்தி, வங்காளி, மராத்தி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.

★ செம்மலர் ஜூலை 2019, பக்கம். 5.

அலைக்யு பாதம் ஸீ

1970 இல் அலைக்யு பாதம் ஸீ (Alyqhe Padamsee) *அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்ந்தார் பம்பாய் புலாபாய் அரங்கில்* (Bhulabhai Auditorium) *அந்நாடகம் நடந்தது. 1975 இல் ஆக்ஸ்போர்டு நிறுவனத்தார் அந்த நாடகத்தை நூல் வடிவில் வெளியிட்டனர். 1998 இல் 22வது பதிப்பு வந்தது. 86 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் பக்கம் 39 கிரிஷ்கர் னாட் எழுதுகிறார்.*

Muhammad :- From next year we shall have copper currency in our empire along with the silver dinars. Exchange in for a silver coin! A copper coin will have the same value as a Silver dinar.

Shihab-ud-din-But I Don't understand, your Majesty How Can one expect a cupper coin to have the same value as a Silver one?

Muhammad : I tia Question of confidence. A question of trust...! the Other day **I heard that in China they have Paper currency** Paper, Mind you and yet it works because the people acceptit. They have faith in the Emperor's Seal on the Pieces of Paper.★

வி.ஜெயலட்சுமி

துக்ளக் நாடகம் கன்னட மூலத்தை தமிழில் வி.ஜெயலட்சுமி 'க்ரியா' வெளியீட்டகம் மூலம் 1988 சூலை 12 இல் 18 ரூபாய் விலையில் 143 பக்கங்களில் வெளியிட்டுள்ளனர். அதில் பக்கம் 68 மேலேகண்டதை மொழி பெயர்த்துள்ளார். இதோ;

முகம்மது : இனிமேல் என்னுடைய ராஜ்யத்தில் வெள்ளி நாணயங்களும் செப்பு நாணயங்களும் புழக்கத்தில் வர இருக்கின்றன. வெள்ளி நாணயங்களைப் போலவே உபயோகிப்பது ஒரு செப்பு நாணயத்திற்கு ஒரு வெள்ளி நாணயத்தின் மதிப்பே தான்.

ஷிகாபு : ஆனால் செப்புக்கு வெள்ளியின் மதிப்பு எப்படி வரும் அரசே?

★ *Girish Karnad, Tughlaq, K.N.Khandelwal Agra, Page 82.*

முகம்மது : நாம் செப்பு வெள்ளி பற்றி விவாதம் நடத்தவில்லை. நம் முன்னால் இருப்பது நாணயங்களின் பிரச்சினை நாணயங்கள் கேவலம் விலையை அளப்பதற்கு ஒரு கருவி அதற்குச் சொந்தமாக ஏது மதிப்பு? மதிப்புக் கிடையாது. அரசனின் பேச்சுக்கு அவனுடைய அரச முத்திரைக்கு ஜனங்களுக்கு சுல்தானிடம் நம்பிக்கை இருந்தால் போதும்.*

சீனாவில் காகிதப் பணம் இருந்தது என்பது குறித்து துக்ளக் கூறியதாக கிரிஷ்கர்னாட் எழுதிய மூலத்தில் உள்ளது அதனை தமிழாக்கியவர்கள் வேண்டுமென்றே விட்டுள்ளனர் என்றும் எதற்காக என்றால் துக்ளக்கை குறைவாக எண்ணட்டுமே என்ற எண்ணத்தில் தான் என்று எண்ணுகிறேன். துக்ளக்கை தாக்கி எழுதும் முயற்சிகள் தொடர்வதால் உரிய பதிலைச் சொல்லவேண்டுமென்பதும் அவசியமாகிறதல்லவா!.

நா.ஜிதேந்திரன்

எனது நண்பர் முனைவர் நா.ஜிதேந்திரன் இந்திராபார்த்த சாரதி, கிரிஷ்கர்னாட் நாடகங்களில் இருத்தலியல் ஒப்பாய்வு என்னும் முனைவர் பட்ட ஆய்வேட்டை மேலும் பதிப்பகம் பிரியத்திற்குரிய பேராசிரியர் சிவசு அவர்களின் பதிப்புரையோடு 2017 இல் 272 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 22, 23 197–204 இல் கிரிஷ்கர்னாட்டின் துக்ளக் நாடகக் கதையை சுருக்கமாகச் சொல்லியுள்ளார்.

வஞ்சகப் புகழ்ச்சி

கிரிஷ் கர்னாட்டின் துக்ளக் நாடகம் அன்றைய அரசியல் சூழ்நிலைக்காக வஞ்சப் புகழ்ச்சி Ironic யாக எழுதப்பட்டது.**

துக்ளக் நாடகத்தை நன்கு ஊன்றிப் படிப்பவர்கள் துக்ளக்கின் கனவுகள் அறிவுப்பூர்வமானவை என்பதை அறிந்து கொள்ளலாம். ஆனால் கிரிஷ் கர்னாட் எழுதிய துக்ளக்

★ கிரிஷ் கர்னாட், துக்ளக் (நாடகம்) கன்னடத்திலிருந்து தமிழில்- வி.ஜெயலட்சுமி, கிரியா, சென்னை, 1988, பக். 68.

★★ *U.R. Anantha Murthy, Introduction Girish Karnad Tuqhlaq Page IX*

குறித்த நல்ல பகுதிகள் தமிழில் மொழி பெயர்க்கப்படும்போது சொல்லப்படவில்லை. துக்ளக் மீது குறை காண்பவர்கள் தொடர்கிறார்கள்.

செங்கிஸ்கான்

மன்னாதி மன்னன் என்று பொருள்படும் செங்கிஸ்கான் மங்கோலியர் தலைவராக மாறினார். (கி.பி. 1162 - 1227) கி.பி. 1211 இல் சீனாவின் மீது படையெடுத்து பல பகுதிகளை வென்றான். 1227 இல் மறைந்தான். கி.பி. 1234 இல் **கின்**களின் ஆதிக்கம் சீனாவில் முடிந்தது.

குப்ளாய்கான்

செங்கிஸ்கனின் பேரன் குப்ளாய்கான் Kublai Khan (1216-1294) 1259 இல் பட்டத்திற்கு வந்தான். தற்போதய பீகிங் அருகே தனது தலைநகரத்தை ஸ்தாபித்து பெருமை சால்கானின் நகரம் எனும் பொருள்தரும் **கான்பலீக்** (Khanbalig or Canbaluc) என்ற நகரில் இருந்து ஆட்சி புரிந்தான்.

ஒன்பதாம் நூற்றாண்டு

ஒன்பதாம் நூற்றாண்டிலே சீனாவில் அடையாள நாணயங்கள் அறிமுகப் படுத்தப்பட்டபோதிலும், மங்கோலியப் பேரரசர் குப்ளாய்கான் காலத்தில் சீனாவில் (ரூபாய்) அடையாளப் பணம் பெருமளவில் புழக்கத்தில் வந்தது 13ஆம் நூற்றாண்டில் தான்.

பெர்சியா - ஈரான்

ஃபார்ஸ் என்ற பிரதேசம் இருந்ததால் அதன் பெயரில் (பார்சியா) (பேர்சியா) பாரசீகம் என்ற பிரதேசம் ஏற்பட்டது. அதுவே ஈரான் என்று தற்போது அழைக்கப்படுகிறது.

காய்கத்துகான்

பெர்சியாவில் கி.பி. 1293 இல் ஆட்சி செய்தவர் காய்கத்துகான் (Kaikhathkhan) இவரது ஆட்சியில் சீனாவில் குப்ளாய் கான் வெளியிட்ட ரூபாய் நோட்டுக்கள் போல இருந்தது. இதில் **குப்ளாய்கான் கொண்டு வந்த முறை வென்றது. காய்கத்து கான் கொண்டுவந்த முறை தோற்றது.**

கவனமான நடவடிக்கை

அடையாள நாணயமுறை உலகத்தில் பல பாகங்களில் அக்காலத்திலேயே புழக்கத்தில் இருந்து வந்தது. சீனாவில் குப்ளாய்கான் காகிதத்தால் ஆன அடையாள நாணயத்தைப் புகுத்தினார். நாணயத்திற்கான காகிதம், மை ஆகியவற்றை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுத்தார். ஆகவே மற்றவர்கள் அந்த அடையாள ரூபாயை அச்சிட முடியவில்லை.

இந்த இருவரின் முயற்சியையும் பற்றி இதற்குப்பின் இந்தியாவில் ஆட்சிக்குவந்த முகமது பின் துக்ளக் அறிந்திருந்தார். எனவே அடையாள நாணயத்தைப் புகுத்தினார். **நாணய இயலின்** வரலாற்றைக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

நாணயங்கள்

மனித சமூகம் பண்ட மாற்று முறையிலிருந்து மாறி நாணயங்களை செலவாணிக்குப் பயன்படுத்தத் தொடங்கியது. உலக நாடுகளில் பலவற்றில் உலோக நாணயங்கள் உலவிடவில்லை.

இயற்கைப் பொருட்கள்

இயற்கையாகவே கிடைக்கும் பொருட்களே நாணயங்களாக பயன்படுத்தப்பட்டன.

கோக்கோ விதைகள்

மெக்சிகோ நாட்டில் வாழ்ந்த **அசுடெஜ்** மக்கள் **கோக்கோ விதைகளை** நாணயங்களாகப் பயன்படுத்தினர்.

நாயின் பற்கள்

நியூகினியா நாட்டில் சிறு மரத்துண்டுகளில் நாயின் பற்களைப் பதியவைத்து காசாகப் பயன்படுத்தினர். சாலமன் தீவிலும் **நாயின் பற்கள்** நாணயமாகப் பயன்படுத்தப்பட்டது.

பறவைகளின் இறகுகள்

நியூஹெப்ரைட்ஸ் தீவில் அங்குள்ள அரிதான பறவைகளின் இறகுகளே நாணயங்களாக விளங்கின.

பசிபிக் தீவில் மரங்கொத்திப் பறவையின் இறகுகள் நாணயங்களாயின.*

பசு

பாரதத்தில் ஆதி நாணயம் 'பசு' தான்

மோதிரங்கள்

எகிப்து நாட்டில் துவக்க கால நாணயங்கள் மோதிரங்கள் ஆகும்.

சாவி - மண்வெட்டி - தேயிலை - கடற்கரை சோழிகள்

சீனாவில் ஆதிகாலத்தில் சாவி மண்வெட்டி, தேயிலை, கடற்கரை சோழிகள் காசுகளாகப் புழங்கின.**

அழகிய சிப்பிகள்

ஆப்பிரிக்காவில் பல வண்ண அழகிய சிப்பிகள் நாணயங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

இரும்பாலானா கத்தி

இரும்பாலான கத்தியை மத்திய ஆப்பிரிக்க மாந்தர்கள் பணமாகப் பயன்படுத்தினர்.

வட்டப்பாறைகள்

யாப்பில் எனும் பெயருடைய பசிபிக் தீவில் வட்டப்பாறைகள் காசுகளாகச் செலவாணியில் இருந்தன.

யானையின் வால்முடி

ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் யானையின் வால் முடி பணமாக விளங்கியது.

---

* மணவை முஸ்தபாவை தமிழ் பதிப்பின் ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த யுனெஸ்கோ கூரியர் மார்ச் 1990 இல் வெளியிட்ட நாணயச் செல்வங்கள் 52 பக்கங்களைக் கொண்ட இதழில் இதுபோன்ற ஏராளமான செய்திகளைக் காணலாம்.

** முல்லை முத்தையா, நாணயத்தின் கதை, சென்னை, 1960, 110 பக்கங்கள் கொண்ட நூலில் ஏராளமான செய்திகள் அறியலாம்.

எருதுகள்

கிரேக்க நாட்டில் துவக்க காலத்தில் எருதுகளே காசுகளாகக் கருதப்பட்டன.

தோல்

கி.பி 12 ஆம் நூற்றாண்டில் பிரான்சில் தோல் நாணயமாகப் பயன்படுத்தப்பட்டது.

நிலக்கரி

இங்கிலாந்தில் நிலக்கரி பணமாக இருந்த காலமும் உண்டு.

ஈயக் குண்டுகள்

தாய்லாந்து நாட்டில் ஈயக்குண்டுகள் காசுகளாக வழங்கின.

மனித மண்டை ஓடுகள்

போர்னியோ நாட்டில் மனித மண்டை ஓடுகள் பணமாகப் பயன்படுத்தப்பட்டது.

சீட்டுக்கள் (Playing Cards)

இராணுவ வீரர்கள் பயன்படுத்திய சீட்டுக்கள் கனடாவில் பணத் தட்டுப்பாட்டின்போது காசுகளாக வலம் வந்தது.

கம்பிச்சுருள்

சிரியாவில் கம்பிச் சுருள் காசாக இருந்ததுண்டு.

உப்புக் கட்டிகள்

எத்தியோப்பியாவில் உப்புக்கட்டிகள் காசாகப் பயன்படுத்தப்பட்டன.

கைவளையங்கள்

காங்கோ நாட்டில் கை வளையங்கள் காசாகப் பயன்படுத்தப்பட்ட காலமுண்டு.

புகையிலை

வர்ஜீனியாவில் புகையிலை காசாகப் பயன்படுத்தப்பட்டது.

ஒட்டகம்

அரேபியாவில் ஒட்டகங்களைப் பணமாகப் பயன்படுத்தினர்.*

கல்

மதிப்புக்கருவி எதுவாகவேனும் ஆகலாம். கல்லாக வேணும் மண்ணாக வேனும் இருக்கலாம்.

யாப் (Yap)

யாப் என்னும் தீவில் வசித்த மக்கள் கற்களை பெருஞ் செல்வமாக கருதினர். அந்தத் தீவில் கொடுக்கல் வாங்கல் முதலிய எல்லா வர்த்தகத்திலும் இக்கற்களே நாணயங்களாக வழங்கப்பட்டன. தூக்க முடியாத கற்களை மாற்றிக் கொள்ளும்போது வாங்குபவர் தனது பெயரை பொறித்துக் கொள்வார்.**

தங்கம்

தற்காலத்தில் தங்கத்தை அனுப்பாமலே ஒரு பாங்கிலுள்ள தங்கத்தை வேறெரு பாங்கின் கணக்கிற்கு மாற்றிக் கொள்ளும் வழக்கத்திற்கும் இயையிருப்பதாக கெய்ன்ஸ் கூறுகிறார்.***

பொன்

ஆதியில் சீனா, இந்தியா, பாபிலோனில் பொன் பண்டமாற்றாக வழங்கப்பட்டது. கிரேக்கத்தில் இரும்பு பண்டமாற்றாகப் பயன்படுத்தப்பட்டது.

செம்பு

இத்தாலியில் செம்பும் மலேசியாவில் தகரமும் பண்டமாற்றும் பொருளாக உபயோகிக்கப்பட்டது.****

★ க.ஆ. திருஞானசம்பந்தம், பண்டை உலகில் பயன்பட்ட சில விந்தை நாணயங்கள் பழங்காசு, பேழை 3, காசு 3, இதழ் 12, திருச்சி, அக்டோபர் 2003, பக் 12.

★★ பேராசிரியர் ஜே.எஸ்.பொன்னையா, நாணயம், மதுரை, 1935 பக்கம் 5.

★★★ *Keynes, A Treatise On Money Volume II Page 292.*

★★★★ *Helfferich, Money, Volume I, Page 12 ..*

பொன் - வெள்ளி

உலகில் இறுதியில் எல்லாத் தேசங்களிலும் பெரும்பாலும் வெள்ளியும் பொன்னும் ஆகிய இரண்டு உலோகங்களே பண்டமாற்றுப் பொருள்களாயின. அவை கிடைப்பதற்கரியது. எல்லோராலும் விரும்பப்படுவது. சிறிய உருவில் உயர்ந்த விலை மதிப்பு உடையது. சேமித்து வைக்கவும் ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்திற்கு கொண்டு செல்வதும் எளிதானது.

பவுண்டு

பண்டமாற்றுக் கருவியாக ஆங்கிலேயர் *20* அவுன்ஸ் நிறையுள்ள ஒரு பவுண்டு (Libra) வெள்ளியை உபயோகித்தனர். அந்நிறையிற் செய்யப்பட்ட நாணயம் ஒரு பவுண்டு என வழங்கப்பட்டது. நாளடைவில் நாணயத்தில் வெள்ளியின் அளவு குறைக்கப்பட்டு, **5 அவுன்ஸ்** எடையாக மாறியது எனினும் இவ்வெள்ளி நாணயம் *20* அவுன்ஸ் நிறையுள்ள பழைய பெயராலேயே வழங்கப்பட்டது.

கி.பி. 1816 கற்காசு பெறாதகாகிதம்

கி.பி. *1816* இல் இந்நாணயம் அதில் அடங்கிய வெள்ளி மதிப்பிற்குச் சரியான சுமார் கால் அவுன்ஸ் தங்க எடைகொண்ட தங்க நாணயமாகச் செய்யப்பட்டது. ஆனால் பெயரோ பவுண்டுதான்; தற்சமயம் ஆங்கிலேயர் வழங்கும் நாணயம் தங்கமல்ல; **கற்காசு பெறாதகாகிதம்** எனினும் அதன் பெயர் பவுண்டு அதாவது *20* அவுன்ஸ் வெள்ளி எடை.

உலோகக் கட்டிகளில் முத்திரை

பொன், வெள்ளியிலான கட்டிகளில் வர்த்தகர்கள் தங்கள் முத்திரையை (Seal) இட்டனர். இவ்வாறு முத்திரையிடப்பட்ட கட்டிகளை பொருள்களை வாங்கும் போதும், விற்கும்போதும் பயன்படுத்தினர்.*

அரசாங்க முத்திரை

சிறிது காலத்தில் முத்திரைக் கட்டிகளைப் போன்று போலிக்கட்டிகள் தோன்றின. வணிகர்களும், அரசாங்கமும்

★ *H.Stanley Jevons, Money Banking and Exchange in India, Page 4.*

சதுரவடிவமான சிறுசிறு துண்டுகளாக்கி இரு பக்கமும் விளிம்புவரை முத்திரையிட்டனர். சதுரவடிவில் முத்திரையிட சிரமமானது; எனவே வட்டவடிவாகச் செய்யப்பட்டு விளிம்புவரை முத்திரையிடப்பட்டது. இவ்வாறு அரசாங்க முத்திரையிடப்பட்ட உலோகத்துண்டுகளே நாணயங்களாயிற்று (Coins)

லிதியா

சின் ஆசியாவிலுள்ள (Asia Minor) லிதியா (Lydia) நாட்டில் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் இத்தகைய நாணயங்கள் உருவாக்கப்பட்டதாக ஸ்டென்லி சிவோன்ஸ் குறிப்பிடுகிறார். *

சேரலோன்

கிரேக்கர்கள் ஏழுபேரை பரம ஞானிகள் என்று போற்றி வந்தார்கள். பெரியாண்டர் (Periander) கி.மு. 625 – 585) தேலீஸ் (Thales) பையாஸ் (Bias), ஸோலோன் (Solon) பிட்டாக்கஸ் (Fittacus) கைலோன் (Chilon) கிளியோபூலஸ் (Cleobulus),ஆத்தென்சுக்கு அரசியலை வகுத்துக் கொடுத்தவன் ஸோலோன். ஆதென்சின் மகா மேதாவி. கர்மவீரன், கவிதை உள்ளம் படைத்தவன் பரம்பரை பிரபு வமிசத்தைச் சேர்ந்தவன்.

கி.மு. 594 - 572

கி.மு. 594 இல் ஸோலோனுக்கு 44 அல்லது 45வது வயது. ஆர்க்கோன் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவியிலிருந்து விலகும்போது வயது 66. கி.மு. 572 எல்லோரும் திருப்தியுடன் இவனைப் பதவியில் அமர்த்தினார்கள். ஆனால் எல்லோருடைய அதிருப்தியையும் சம்பாதித்துக்கொண்டான். பதவியிலிருந்து விலகுகிறபோது. இதனால் ஸோலோன் எல்லோருடைய நன்மையையும் நாடினான். எல்லோருக்கும் நியாயமாக நடந்து கொண்டான் என்று புலனாகிறதல்லவா?

சீர்திருத்தங்கள்

ஸோலோன் செய்த சீர்திருத்தங்கள் பலப்பல அடிமைகளை விடுவித்தான். விவசாயக் கடன்களை ரத்து செய்தான். தொழில்

★ முற்கூறிய நூல் பக்கம் 5.

வளர்ச்சிக்கும் வியாபாரப் பெருக்கத்திற்கும் ஏற்பாடுகள் செய்தான்.

நாணயமாற்று விகிதம்

ஸோலோன் நாணயமாற்று விகிதத்தை ஒழுங்கு படுத்தினான். ஸோலோன் இயற்றிக் கொடுத்த சட்டங்கள் ஸோலோனுக்குப் பிறகு ஐந்து நூற்றாண்டுகள் வரை காலத்திற்கேற்ற சிற்சில மாறுதல்களுடன் அமுலில் இருந்தன. கி.மு. 558 இல் ஸோலோன் இறந்தான்.*

லைக்கர்ஸ் (Lycurgus)

கிரேக்கத்தில் லைக்கர்ஸ் ஆட்சியின்போது இரும்பு நாணயத்தை பணமாகப் பயன்படுத்தியதற்கு வரலாற்றில் குறிப்புக்கள் உண்டு.

வெள்ளி நாணய எடை குறைப்பு

கி.மு. 594 இல் ஆதென்ஸின் சர்வாதிகாரியாக ஏகமனதாக நியமிக்கப்பட்ட ஸோலோன் அந்த நாட்டு வெள்ளி நாணயங்களின் எடையைக் கால்வாசி குறைத்தான். அத்தோடு புதிய நாணயங்களை பழைய நாணயங்களின் மதிப்பின்படியே அங்கீகரிக்க வேண்டும் என்றான். மக்களும் அவ்வாறே செய்தனர்.

கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு நூற்றாண்டுக்கு முன் நடைபெற்ற சரித்திர நிகழ்வு அது.

இந்தியாவின் ஸோலோன் முகமது பின் துக்ளக்

கிரேக்கத்திலிருந்து இந்தியாவிற்கு வருவோம் இந்தியாவின் ஸோலோன் முகமது பின் துக்ளக் ஆவார்.

அரை அணா மதிப்புள்ள (3 காசுகள்) (100 காசுகள் ஒரு ரூபாய்) செப்புக்காசுகளைப் பதிப்பிலிருந்து அவற்றை வெள்ளிக்காசுகளாகிய ரூபாயின் மதிப்பிற்குச் சமமாக குடிமக்கள் வழங்கவேண்டுமென முகமதுபின் துக்ளக்

★ வெ.சாமிநாதசர்மா, கீரீஸ் வாழ்ந்த வரலாறு, சென்னை, 1955, பக்கம் 62, 90, 134, 135, 136, 141, 144.

உத்திரவிட்டான். மக்களும் சில காலம் அவற்றை அவ்வாறே வழங்கி வந்தனர். ★

ஆனால் செப்புக்காசுகளைப் பதிப்பித்த அவற்றை உயர்ந்த மதிப்புடன் வழங்கச் செய்வதால் உண்டாகும் இலாபத்தை அறிந்த பலரும் முகமதுபின் துக்ளக் பதிப்பித்த செப்புக்காசுகளைப் போல தத்தம் சொந்தச் செப்பக்காசுகளை வெளியிட்டனர். அதனால் முகமதுபின் துக்ளக் இயற்றிய அடையாள நாணயத்திட்டம் பிழைபட்டது.

அரியதோர் உண்மை

கிரேக்க ஸோலோன், கி.மு. 594; இந்திய முகமதுபின் துக்ளக் (கி.பி. 1325 – 1351) இரு உதாரணங்களிலும் அரியதோர் உண்மை அறியக்கிடக்கின்றன. அது நாணயம் உலோகத்தால் ஆனதாலும் அவ்உலோகத்தின் விலை மதிப்புக்கும், நாணயத்தின் விலை மதிப்புக்கும் நேர் சம்பந்தம் இருக்க வேண்டும் என்ற நிமித்தம் இல்லை. நாணய மதிப்பை உலோக மதிப்பினின்றும் வேறாக இருக்கலாம் என்பதே. இதைத்தான் ஸோலோனும் முகமதுபின் துக்ளக்கும் கடைப்பிடித்தார்கள்.

கி.பி. 1504 - ஷிலிங்

இங்கிலாந்தில் கி.பி. 1504 இல் ஷிலிங் (Shilling) வெள்ளி நாணயம் வெளியிடப்பட்டது. வெள்ளி மதிப்பும் (bullion Value) அரசாங்கம் இட்ட நாணய மதிப்பும் (Valne in the money account) சமமாக இருந்தது.

16 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் வெள்ளி உற்பத்தி மிகுந்தது. ஷிலிங் நாணயத்தில் அடங்கிய உலோக மதிப்புக் குறைந்தது.

1504 க்குப் பின் வெளியிடப்பட்ட ஷிலிங் நாணயங்கள் முழு மதிப்புடையனவாக இருந்தது. நல்ல நாணயங்களாகக் கருதப்பட்டன. குடிமக்கள் நல்ல நாணயங்களை கைவசப்படுத்தினர். பொற்கொல்லர் அதனை உலைக்கு அனுப்பி உலோகமாக மாற்றி விற்றனர். நல்ல நாணயங்கள் செலவாணியற்றது. கெட்ட நாணயங்களே புழக்கத்தில் இருந்தன.

★ ஜே.எஸ்.பொன்னையா, நாணயம், மதுரை, 1935 பக்கம் 19.

கிரேஷாம்விதி

இதை அறிந்ததும் இங்கிலாந்து எலிசபெத் மகாராணியின் அமைச்சர் ஸர் தாமஸ்கிரேஷாம், கெட்ட நாணங்கள் நல்ல நாணயங்களை விரட்டி விடும் (bad Money Drives Out, Good Money) என்றார். இதுவே கிரெஷாம் விதி (Greshoms law) என்று அழைக்கப்பட்டது.

சர்தாமஸ் கிரெஷாம்

கெட்ட நாணயங்கள். புழக்கத்தில் இருந்ததால் விளைந்த கேடுகளை ஒழித்த ஸர் தாமஸ் கிரெஷாம் அக்கெட்ட நாணயங்களை மக்களிடமிருந்து திரும்பிப் பெற்றுக் கொண்டு அவற்றிற்கு ஈடாக புதிய நல்ல வெள்ளி நாணயங்களைக் கொடுத்தார்.

கி.பி. 1663

இங்கிலாந்தில் கி.பி. *1663* இல் செலவில்லாமல் (Free coinage) எல்லாக் குடிமக்களுக்கும் நாணயம் செய்யும் உரிமை வழங்கப்பட்டது. இதனால் உலோகங்களின் விலை மதிப்பு குறைந்த காலத்தில் அவைகளை உலோகமாக உருக்கி விற்க எவரும் முன் வரவில்லை.

உலோகங்களை குறைந்த விலைக்கு வாங்கிப் பழைய எடையுள்ள (ஆனால் அதிக விலை மதிப்புள்ள) நாணயங்களாக மாற்றி இலாபம் சம்பாதித்தனர்.*

பிரான்சில் குழப்பம்

1789 பிரெஞ்சுப்புரட்சி; போர்ச் செலவைச் சமாளிக்க பிரபுக்களுக்கும், தேவாலயங்களுக்கும் சொந்தமான பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களின் மதிப்பின் அடிப்படையில் அஜினா (Assignats) இன்னும் தாள் நாணயங்கள் அச்சிடப்பட்டன.

அஜினா

1791 இல் அஜினா நோட்டுக்களின் மதிப்புக் குறைந்தது. கடைசியில் **1700 பிராங்கு அஜினா நோட்டுக்கு ஒரு பிராங்கு மதிப்புள்ள பொருள்தான் வாங்க முடிந்தது.**

★ J.S. பொன்னையா, நாணயம் முற்கூறிய நூல் பக் 29, 30.

ஒரு குவளை காப்பி 500 பிராங்கு

பாரிசில் ஒரு குவளை காப்பிக்கு 500 பிராங்கு (சுமார் 300 ரூபாய்) நோட்டுக்களைக் கொடுத்தார்கள்.

கிரீன் பாக்ஸ்

1861 இல் அமெரிக்காவில் உள்நாட்டுப் போர்ச் செலவைச் சமாளித்திட கிரீன்பாக்ஸ் (Green backs) *என்ற தாள் நாணயம் அச்சிடப்பட்டது. ஏராளமாக வெளியிடப்பட்டதால் அதன் மதிப்பு குறைந்து, முடிதிருத்தும் கடைகளில் அமெரிக்காவில் அந்த கிரீன்பாக்ஸ் நோட்டுக்களை சுவர்களில் சித்திரம் போல ஒட்டி வைத்தனர். சில சில்லரைக்கடைக்காரர்கள் அதனைப் பொட்டலம் போடுவதற்கும் பயன்படுத்தினர்.*

மார்க்

முதல் உலகப் போர் முடிந்ததும் ஜெர்மனியில் **மார்க்** *என்ற தாள் நாணயம் வெளியிடப்பட்டது; நாளடைவில் அதன் மதிப்பு குறைந்தது* **இரண்டு லிட்டர் பால் வாங்க முக்கால் இலட்சம் கோடி மார்க்** *நோட்டுக்கள் கொடுக்க வேண்டியதாயிற்று.*

ரூபிள்

முதல் உலகப்போர் முடிந்ததும் ருஷியாவில் வெளியிடப்பட்ட ரூபிள் (rouble) *என்ற தாள் நாணயங்கள் மதிப்பிழந்து அவை குப்பைத் தொட்டியில் போடப்பட்டது.** உலகில் பல நாடுகள் நாணயங்களை வெளியிட்டதும், பின்னர் அது மதிப்பிழந்தும் வரலாற்றில் காலந்தோறும் நடைபெற்று வரும் நிகழ்வுகள் ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு முகமதுபின் துக்ளக்கின் நாணயச் சீர்திருத்தத்திற்கு வருவோம்.*

டங்கா

*வெள்ளி நாணயங்கள் டங்காக்கள் என்று பெயர். இல்துமிஷ் (கி.பி.1211–1236) காலத்தில் 175 தானிய எடையுள்ள வெள்ளி டேங்கோ நாணயங்கள் வெளியிடப்பட்டன.***

★ முற்கூறிய நூல் பக் 43, 42.

★ கோ.வி.மணிசேகரன், வரலாற்றில் சில செய்திகள், தூத்துக்குடி, 1965, பக் 18.

கஜினி முகம்மது

இந்திய நாணயங்களில் ஒரு பெரும் புரட்சியைச் செய்தவர் கஜ்னி முகம்மது 180 தானிய மணி எடை கொண்ட தங்க நாணயத்தை வெளியிட்டார்.

துக்ளக்

துக்ளக் வம்சத்தினர் தங்கம், வெள்ளி, பில்லன், செம்பு உலோகங்களில் நாணயங்களை வெளியிட்டனர்.*

140 குண்டுமணி எடை

முகமதுபின் துக்ளக் வெளியிட்ட வெள்ளி டங்காக்கள், செப்பு நாணயங்கள் (ஜிடால்கள்) ஒவ்வொன்றும் தானியமணி எடை கொண்டது. பின்னர் வெள்ளிக்குப்பதில் வெங்கலத்தைப் பயன்படுத்த துக்ளக் உத்திரவிட்டார்.

துக்ளக் வெளியிட்ட தங்க நாணயம்

முகமதுபின் துக்ளக் வெளியிட்ட தங்க நாணயத்தில் முன்புறம் :-

ஃபிஜமான் அல் இமாம் அல்முஸ்தாக் ஃபி ப அல்லா அமீர் அல். மூமினீன் அபூரபிய்யா சுலைமான் கல்த் அல்லா கிலாஃபத். பின்புறம் ஃ, ஜர்ப் ஹூந்தா, அல்தினார் அல் கலிஃபாதி, ஃபிஅல்-துல்தபாத் சாஹிவார் சன்ஹ்கம்சா வ. அர்பேய்ன் வ சபமாயே என்று பொறிக்கப்பட்டிருக்கிறது.

முகமது பின் துக்ளக் வெளியிட்ட வெள்ளி நாணயம்

முன்புறத்தில் இரட்டை வட்டத்தில் **அசஹீத்** இன்லா அல்லா அல் அல்லா வஅ சஹாத் இன் முகம்மதா அப்தாவர சூலா பின்புறம் வட்டத்தில் அல்வாசிக்பெ - தாயீத்அல்-ரஹ்மான் முகம்மத்ஷா அல் சுல்தான். சுற்றிலும் ஜர்ப் ஹூந்தா அல்தினார் பஹஜரத் டெல்லி சனாஹ் சத்வஅஸ்ரேய்ன் சபாமாயே என்ற வெள்ளி நாணயத்தையும் வெளியிட்டுள்ளார்.

முகமதுபின் துக்ளக்கின் செம்பு நாணயம்

முன்புறத்தில் வட்டத்தில் மான் அதயா அல்-சுல்தான் ஃபகதாமான் அதயா அல் ரஹ்மான். சுற்றிலும் இக்லிம்

★ ரமா வேல்சாமி, நமது காசுகள், சென்னை, 1986, பக்கம் 55.

துக்ளக்பூர் அர்ஃப் திர்ஹத்சால் பார் ஹஃப்சாத் சி ஏக். பின்புறத்தில் ஃமுஹர் ஷாத்தங்கா யீயாஜ்தர் யோஜ் கார் பௌதக் உனிமேத்வார் முகம்மத் துக்ளக் என்ற செம்பு நாணயத்தையும் வெளியிட்டுள்ளார்.

முகமது பின் துக்ளக்கின் பில்லன் நாணயம்

வெள்ளியும் செம்பும் கலந்தது பில்லன் ஆகும். முன்புறம் ஆறு வட்டக்கோடுகளுக்குள் ஜர்ப்ஃபி ஜமான் அல் அபீத் அல்ராஜி ரஹ்மத் அல்லா முகம்பத்பின் பின்புறம்: அல் சுல்தான் அல்சையத் அல்சாஹித் துக்ளக் ஷா சன்ஹ் சமான் வ உஸ்ரேய்ன் வ சபாமாயே என்ற பில்லன் நாணயத்தை வெளியிட்டுள்ளார்.

தந்தையின் பெயரால் நாணயங்கள்

முகமதுபின் துக்ளக் தனது ஆட்சியில் முதல் மூன்று ஆண்டுகளில் *1325 – 1328* வெளியிட்ட நாணயங்களில் அவரது பெயரைப் பொறிக்கவில்லை. மாறாக தனது தந்தையர் கியாசுதீன் துக்ளக் பெயரைப் பொறித்துள்ளார்.

அல்சஹீத் (புனித்தியாகி) (Alsahid - martyr)

முகமதுபின் துக்ளக் வெளியிட்ட அந்த நாணயங்களில் தனது தந்தையாரின் பெயரோடு அல்சஹீத் (புனிதத்தியாகி) என்ற பட்டத்தையும் சேர்த்துப் பொறித்து அவரைக் கௌரவித்துள்ளார்.

மறுபடியும் கலிமா

இஸ்லாமியரின் ஐம்பெருங்கடமைகளில் ஒன்று கலிமா. அதாவது வணக்கத்திற்குரியவன் ஏக இறைவன் அல்லாஹ்வைத்தவிர வேறுயாரும் இல்லை. அண்ணல் முஹம்மது நபி (ஸல்லல்லாஹூ அலைஹூஸல்லம்) (இறைச்சாந்தி உண்டாவதாக) அல்லாஹ்வின் திருத்தூதராக இருக்கிறார் என்று கூறுவதே கலிமா ஆகும்.

,இல்துமிஷ்காலத்தில் நாணயங்களில் கலிமாவை நீக்கிவிட்டார் அதனை முகமதுபின் துக்ளக் தனது ஆட்சியில் வெளியிட்ட நாணயங்களில் கலிமாவை மறுபடியும் பொறித்தார்.

மாறுதல்களைப் புகுத்த முயன்ற தீரர்

நாணயங்களில் பலமாறுதல்களைப் புகுத்த முயன்றதீரர் என்று முகம்மதுபின் துக்ளக் கருதப்படுவர்.

Muhammad Tughlaq will always be remembered for his experiments with other aspects of coinage. ★

201.5 தானியமணி எடை

பதவி ஏற்ற புதிதில் 170 தானியமணி எடையுள்ள தங்க, வெள்ளி நாணயங்களை வெளியிட்டார். ஆனால் நாளடைவில் தங்க நாணயங்களை 201.5 தானியமணி எடையில் தினார் என்ற பெயரில் (dinares) வெளியிட்டார்.

அட்லிஸ்

இந்தியாவில் அப்போது வெள்ளி பற்றாக்குறையாக இருந்தது எனவே வெள்ளி நாணயங்களின் எடையை ஆறில் ஒரு பங்காக குறைத்தார். 144 தானியமணி எடையில் அட்லிஸ் (adlis) என்ற பெயரில் வெளியிட்டார்

தௌலதாபாத் - சுல்தான்பூர்

கி.பி. 1328 இல் தௌலதாபாத், சுல்தான்பூரில் இருந்து வெளியிட்ட தங்க நாணயங்களின் எடையையும் குறைத்தார் முகமதுபின் துக்ளக்.

தங்காக்கள்

வங்காளம் தவிர நாட்டின் மற்ற பகுதிகளில் 170 தானியமணி எடையுள்ள தங்காக்களை முகமதுபின் துக்ளக் வெளியிட்டார். தங்க நாணயங்கள் பல கிடைக்கின்றது. ஆனால் முகமதுபின் துக்ளக்கின் வெள்ளி நாணயங்கள் கிடைப்பது அரிதாகவே இருக்கிறது.

முகமதுபின் துக்ளக்கின் முதல் மூன்று ஆண்டு கால ஆட்சியில் தங்கா என்ற வெள்ளி நாணயத்தோடு, வெள்ளி எடை குறைந்த அட்லிஸ் நாணயமும் புழக்கத்தில் இருந்தது.

★ *Parmeshwari lal Gupta, Coins, New Delhi, First edition 1969 11th Edition 2016, Page 113.*

கி.பி. 1329 - 1330

ஹிஜ்ரி 730 இல் முகமதுபின் துக்ளக் கி.பி. 1329 – 1330 செம்பு நாணயங்களை வெளியிடத்துணிந்தார். இத்துணிச்சலான செயலை மக்கள் ஆதரிக்கவேண்டும் என்பதற்காக அந்த நாணயங்களில் இரக்கமுள்ள இறைவன் மன் அதாய அல்சுல்தான்ஃபஹுத அதாயெ அல்ரஹ்மான் சுல்தானுக்குப் பணிகின்றவன். இரக்கமுள்ள இறைவனுக்குக் பணிகின்றவன் ஆவான் என்ற வாசகத்தைப் பொறித்தார்.*

புழக்கத்திற்கு வருமென்ற நம்பிக்கை

முஹர் சுத்–தங்கா ரயஜ் தர்ரஜாகர் பந்தா உம்மீதவாரா (Muher Shud Tankah rayaj dar rajagar bandah Ummidavare (Ihope that this stamped tankah would be current in transactions) அரசு முத்திரை கொண்ட இத் தங்கா புழக்கத்திற்கு வந்து விடுமென நம்புகிறேன் என்ற வாசகத்தையும் தான் வெளியிட்ட நாணயத்தில் மக்களுக்கு வேண்டுகோள்போல் பொறித்து வெளியிட்டார்.

எளிதில் எவரும் அச்சிடல்

ஆனால் முகமதுபின் துக்ளக்கின் நம்பிக்கை வீண் போயிற்று இந்த நாணயங்களையும், இவற்றில் உள்ள வாசகங்களையும் எல்லோருமே எளிதில் அச்சிடத் தொடங்கினர்.

ஒவ்வொரு வீடும் நாணயச்சாலை

அவரது காலத்தில் ஒவ்வொரு வீடும் ஒரு நாணய சாலையாக மாறியது. கள்ள நாணயங்கள் புழங்கின. இவைகளைத் தடுத்திட அரசு எந்த ஏற்பாட்டையும் செய்ய வில்லை.**

அத்தோடு நாணயங்களை வாபஸ் பெற ஏற்பாடு ஆயிற்று. அதனால் பெருத்த நஷ்டம் அரசுக்கு ஏற்பட்டது.

★ *Mohamed Habib, Khaliq Ahmed Nizami* முற்கூறிய நூல் பக்கம் 516.

★★ *Edward Thomas, Chronicies of the Pathankings, Trubner and co London 1871 Page 246*

கி.பி. 1331 - 1332

ஹிஜ்ரி 732 இல் (கி.பி. 1331 – 1331) இத்தகைய நாணயங்களை வெளியிடுவதை நிறுத்திவிட்டு மறுபடியும் 55.7 தானியமணி எடை கொண்ட பில்லன் நாணயங்களை முகமதுபின் துக்ளக் வெளியிட்டார்.

25 வகை பில்லன் நாணயங்கள்

முகமதுபின் துக்ளக் வெளியிட்ட பில்லன் நாணயங்கள் 25 வகையாகும். வட இந்தியாவிற்கென்று தௌலதாபாத்திலும் இரு வகையாக அவை அச்சிடப்பட்டன. டில்லியில் அச்சிடப்பட்ட வெள்ளி தங்காக்கள் 48 தரமாகப் பாகுபடுத்தப்பட்டது. தௌலதாபாத்தில் வெளியான காணிகள் (Ganis) அல்லது ஜித்தல்கள் (Jitals) 50 தரங்களாகப் பிரிக்கப்பட்டன.

12 வகை செம்பு நாணயங்கள்

முகமதுபின் துக்ளக் வெளியிட்ட செம்பு நாணயங்கள் பன்னிரெண்டு வகைப்படும் ஆனால் இவை கிடைப்பதில்லை.*

ஒன்பது ஊர்களில் அச்சிடப்பட்டது

டில்லி – தாருஸ் இஸ்லாம் (ரந்தம்பூர்) தார், லக்னௌதி, சட்காம், சுல்தான்பூர், முல்க் – இ – திலிங்கானா, துக்ளக்பூர் (திர்ஹத்) தேவகிரி போன்ற இடங்களில் முகமதுபின் துக்ளக்கின் நாணயங்கள் அச்சிடப்பட்டன.

குத்பாபாத்

தேவகிரியிலிருந்து வெளியான நாணயங்களில் குத்பாபாத் என்ற பெயரைப் பொறித்தார் (1325 – 1327) ஹிஜ்ரி 727 (கி.பி. 1327) வெளியிட்ட நாணயங்களில் தேவகிரி என்றே பெயரைப் பொறித்தார்.

தௌலதாபாத்

ஹிஜ்ரி 728 இல் கி.பி. 1328 இல் முகமதுபின் துக்ளக் வெளியிட்ட நாணயங்களில் தேவகிரிக்கு தௌலதாபாத் என்ற பெயரைச் சூட்டினார்.

★ டாக்டர் பரமேச்வரிலால் குப்தா நாணயங்கள், தமிழாக்கம் அ.குழந்தை, புதுதில்லி, 1975 பக்கம் 145, 146.

அயல்நாடுகளை வென்றிட

முகமது பின் துக்ளக் அயல்நாடுகளை வெல்லத் திட்டமிட்டார். அதற்காகப் பணம் தேவைப்பட்டது. கருவூலத்திலுள்ள வெள்ளியை அதற்குப் பயன்படுத்திக் கொண்டு, நாணயங்களை மட்ட உலோகங்களைக் கொண்டு தயாரிக்க முற்பட்டார். முகமதுபின் துக்ளக் தர்ம சிந்தையுள்ளவர் கருவூலத்திலிருந்து பொருட்களை எல்லாம் காலி செய்து விட்டார் என்று பரனீ கூறுகிறார். இதனை ஏற்க இயலாது.

அடையாள நாணயத்திற்குப் பதில் தங்கம் - வெள்ளி

முகமது பின் துக்ளக் தான் கொண்டு வந்த அடையாள நாணய முறை தோல்வியடைந்ததும், நாட்டில் புதிதாக அச்சிடப்பட்டு புழக்கத்திலிருக்கும் அடையாள நாணயங்களைத் திரும்பப் பெற்றார். அவற்றிற்குப் பதிலாக மக்களும் தங்கத்தையும், வெள்ளியையும் வழங்கினார்.*

As a result, the Sultan was forced to make another an announcement and collected the copper tokens in the treasury, exchanging them with gold coins.**

முகமதுபின் துக்ளக் துக்ளக் தான் வெளியிட்ட அடையாள நாணயங்களை மக்களிடமிருந்து திரும்பப் பெற்று, தனது கருவூலத்திலிருந்து அதற்குப் பதில் தங்கத்தை வழங்கியதை முகமதுபின் துக்ளக்கின் நேர்மையை நியாயத்தை வரலாறு எடுத்துரைக்கிறது.

நல்லஎண்ணம் அரசியல் திறன்

முகமது பின் துக்ளக் வெளியிட்ட அடையாள நாணயங்கள் நல்ல எண்ணத்துடன் வெளியிடப்பட்டன. என்பதில் ஐயமில்லை. அடையாள நாணயமுறை முகமதுபின் துக்ளக்கின் அரசியல் திறத்தை எடுத்துக்கட்டுவதாக அமைந்துள்ளது என்பர் பேராசிரியர் டி.ஆர்.இராமச்சந்திரன்.***

★ *Barani Firuz Shahi, Page 476.*

★★ *Arabic History of Gujarat, Londan 1928 Volume III Page 876.*

★★★ டில்லி சுல்தானியத்தின் வரலாறு பாகம் II, சென்னை 1977 பக்கங்கள் 45 - 46.

எட்வர்டு தாமஸ்

போலி நாணயங்கள் அச்சிடப்படுவதை அரசு தடுக்கவில்லை. எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடிய உலோகத்தாலும், சாதாரண கைவினைஞர்கள் பயன்படுத்தும் கருவிகளாலும் அரசு அடையாள நாணயத்தை வெளியிட்டதால் மக்களும் அதனை இலகுவாகச் செய்து கள்ள நாணயங்களைக் குவித்தனர். வரம்பின்றி நாணயங்கள் அச்சிடப்படுவதை தடுக்க அரசு முயலவில்லை என்று எட்வர்டு தாமஸ் குறிப்பிடுவார்.

போலி நாணயம் தயாரிப்பவர்கள் குற்றமற்றவர்கள்

போலி அடையாள நாணயங்கள் குவிந்தன. மக்களிடம் அதன்மீது நம்பிக்கை குறைந்தது. தலைநகரில் இருந்த மக்கள் அந்த நாணயங்களைப் பெறத் தயங்கினர். பெற்றுக் கொண்டவர்களும் தயங்கினர். பெற்றுக்கொண்டவர்களும் அவற்றை வீசி எறிந்தனர். சிலர் அவைகளை உருக்கிப் பாத்திரம் செய்தனர். அடையாள நாணயங்கள் பல கலகக்காரர்களுக்கு போர்க்கருவிகளை வாங்குவதற்குப் பெரிதும் உதவியாக இருந்தது.*

போலி நாணயங்கள் வைத்திருப்பவர்களுள் பலர் குற்றமற்றவர்கள் என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருந்தது. எனவே போலி நாணயத் தயாரிப்பாளர்கள் முன்னைவிட அதிக உற்சாத்துடன் செயல்படலாயினர்.**

நிலையான முஸ்லிம் ஆட்சி இல்லை

ஓர் அரச குலத்தினரை மற்றோர் அரச குலத்தினர் வீழ்த்திவிட்டு அரசுரிமையைப் பெறுவது சாதாரணமாக இருந்தது.

ஒரு அரச குலத்தவர் வெளியிட்ட நாணயத்தை மற்றவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்ற சந்தேகமும் ஐயமும் இருந்தது. எனவே மக்கள் வெள்ளி நாணயங்களைப் பதுக்கி

★ *Firuzshahi, Page 475*

★★ *The Political Theory of the Delhi Sultanete Page 129.*மேற்கோள் முற்கூறிய முஹம்மது கபிப்காலிக் அகமது நிஜாமி நூல் பக்கம் 519.

வைக்கலானார்கள். தங்கள் கைகளில் வெள்ளி டங்காக்கள் இருப்பினும் அவற்றைப் பொருட்களை வாங்குவதற்கோ, வரி கட்டுவதற்கோ செலவிட மக்களின் மனம் வரவில்லை. எனவே அடையாள நாணயத்தை முகமதுபின் துக்ளக் வெளியிட்ட முக்கிய நோக்கம் நிறைவேறாது போயிற்று என்பர் ஆகாமஹதி உசேன்.

The traditional instability of Muslim rule in India where one muslim dynasty fast Supplanted the other. In Order to Succeed, a token currency sheme must have behind it the credit of the government.*

துக்ளக்காபாதில் எங்கு பார்த்தாலும் இந்த நாணயங்கள் குவியல் குவியல்களாக காணப்பட்டன. ஒருநூற்றாண்டிற்குப்பின் இரண்டாம் முபாரக் ஷா ஆட்சியில் கூட *(1421 – 1434)* இந்த நாணயக் குவியல்கள் காணப்பட்டன; இருந்தாலும் முகமதுபின் துக்ளக் மக்களை ஏமாற்ற இத்தகைய திட்டம் அல்லது தந்திரம் கொண்டிருந்தார் என்று அவரைக் குற்றம் சாட்ட முடியாது என்பர் பேராசிரியர் R.C.மஜூம்தார், H.C.ராய் சௌதுரி, K. தத்தா.**

அரசு தடுத்திருந்தால்

அரசு தடுத்திருந்தால் இப்புதிய நாணயத்தை மக்கள் போலி செய்வதை அரசாங்கம் தடுத்திருந்தால் முகமதுபின் துக்ளக் அதில் வெற்றி பெற்றிருப்பார். அரசாங்கம் அவ்வாறு செய்யவில்லை. போலி நாணயங்கள் கோட்டைக்கு வெளியே கொட்டிக் குவிக்கப்பட்டன என்பார் பரனீ.

Muhammed Tughlaq migat Still have been Successful if the government had been able to Prevent People from forging the new coins... These coins were heaped up out side the fort and Barani says, they remained lying there for many years.***

★ *Agha Mahdi Husain The Rise and Fall of Mohamed bin Tughluq, New Delhi, 1972 Page 135.*

★★ *So he cannot be accused of any device or design to defraud the people.*

முற்கூறிய அட்வான்ஸ் ஹிஸ்டரி ஆப் இந்தியா நூல், பக்கம் 322.

★★★ *Satish chandra, History of Medieval India, Hyderabad, 2018, Page 109.*

ஒருமித்த கருத்து இல்லை

முகமதுபின் துக்ளக்கின் நாணயத் திட்டம் குறித்தும் ஆர்.சி.மஜூம்தார் குறிப்பிடுகையில் There is no unanimity of opinion about the object or the wisdom of this policy.*

முகமதுபின் துக்ளக்கின் நாணயத் திட்டம் குறித்து ஒருமித்த கருத்து கூறப்படவில்லை. எதிர்ப்பாக சிலரும், புத்திசாலித்தனமானது என்று சிலரும் கூறுவதை வரலாற்றின் பக்கங்களில் காண முடிகிறது.

விசித்திரமானவர் - தனிப்போக்குடையவர்

வரலாற்று அறிஞர்கள் ஆர்.சி.மஜூம்தார், சோப்ரா இருவரும் முகமதுபின் துக்ளக் பற்றி குறிப்பிடுகையில், Muhammad Tughluq, was one of the most eccentric sovereigns that ever ruled என்பர்கள்.**

முகமதுபின் துக்ளக் விசித்திரமான தனிப் போக்குடைய ஆட்சியாளர் என்று குறிப்பிடுவார்கள்.

வின்ஸ்டன் A.ஸ்மித்

வரலாற்றாசிரியர் வின்ஸ்டன் A.ஸ்மித் தனது ஆக்ஸ்போர்டு இந்திய வரலாற்றில் முகமது பின் துக்ளக்கை அவரது சம காலத்தவர்கள் **அக்காலத்தின் அற்புதம் என்று நியாயமுற மதிப்பிட்டனர் என்று குறிப்பிடுகிறார்.*****

So that his contemporaries were Justified in esteeming him as one of the wonders of the age. ****

அறிவாளிகளில் தலைசிறந்தவர்

முகமதுபின் துக்ளக் அக்காலத்து வாழ்ந்த அறிவாளிகளில் மிகவும் தலை சிறந்தவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

★ *The Delhi Sultanate, Bombay 1990, Page 71.*

★★ *R.C. Majumdar, P.N.Chopra, Main Currents of Indian History, New Delhi, 1987, Page 113.*

★★★ வின்ஸ்டன் ஸ்மித், ஆக்ஸ்போர்ட் இந்திய வரலாறு பாகம் II, தமிழாக்கம் ஏ. உஸ்மான் ஷெரீப், சென்னை 1967, பக்கம் 33.

★★★★ *Vincent A Smith, Revised J.M. Harrison, Oxford, 1964, Page 249.*

சிறந்த புத்திக்கூர்மை

சிறந்த புத்திக்கூர்மையும் சிறந்த ஞாபக சக்தியும் கொண்டுள்ளதுடன் அவர் அறிவைப் பல துறைகளிலும் பெருக்கிக்கொள்ளும் ஆற்றல் உடையவராக முகமதுபின் துக்ளக் இருந்தார்.

வெற்றி பல; தோல்வி சில

கணிதம், தருக்கம், வேதாந்தம், வான நூல் அறிஞர் கவிஞர் தமது கடிதங்களில் பாரசீகச் செய்யுளை மேற்கோள் காட்டுவார். மருத்துவம் நன்கு தெரியும். பல மொழிகளில் அறிவு பெற்றிருந்தும் அறிஞர்களிடம் ஆலோசித்த பின்பே உரையாடுவார் அனுபவம் படைத்த படைத்தலைவர்; அவர் வென்ற போர்கள் பல, தோற்றவை சில.

நேர்மை

முகமதுபின் துக்ளக்கின் அந்தரங்க வாழ்க்கையும் நேர்மை நிறைந்ததாக உள்ளது. அக்காலத்து மன்னர்களிடம் காணப்பட்ட கெட்ட பழக்க வழக்கங்கள் ஏதுமின்றி மிக எளிமையானதாக அவரது நடத்தை இருந்தது.

எளிமை - கொடையாளி

மெச்சத்தக்க எளிமையும் தயாளமும் கொண்ட முகமதுபின் துக்ளக் சிறந்த கொடையாளியாக விளங்கினார். வெகுமதிகளையும் அள்ளி அள்ளி வழங்கினார். மிக்க எளிய குணம் உடையவர்; எது நீதியோ, எது நேர்மையோ அதை நாடியே செயலாற்றுபவராக தயாள குணத்துடன் விளங்கினனர்.*

Endowed with Keen Intellect, a wonderful memory and a brilliant capacity of assimilating knowledge. An experienced general, he won many victories and lost few campaigns.In his Private Life the Sultan was free from the Prevailing vices of the age and his habits were simple. Possessed of remarkable humility and generosity, he was lavish in distributing gifts and Presents. **

---

* R.C.மஜூம்தார், ஹெச்.சி.ராய் சௌதூரி K.தத்தா, முற்கூறிய நூல் தமிழாக்கம் அ.உஸ்மான் ஷெரீப் சென்னை. 1976 பக்கங்கள் 61-62.

** *R.C. Majumdar, H.C.Raychaudhuri, Kalikinkar Datta, An Advanced History of India, London, 1963, Pages 317 - 318.*

விவசாயிகளின் நன்மைக்காக

*முகமதுபின் துக்ளக் தனது ஆட்சியில் உழவர்களுக்காக நன்மைகள் பல செய்தார். அவர்களுக்கு கடன் வழங்கினார். கிணறுகள் தோண்டிடச் செய்தார். நிலவளத்தைப் பெருக்க விஞ்ஞான முறையில் முயன்றார். வேளாண்மைக்காக தனி அமைச்சரின் கீழ் ஒரு துறையை அமைத்தார்.**

Muhammad wanted to do good to agriculturists, and a proof of his intenions in his loans to them eoupled with the wells du by him for their use.... Creating a Department of **Agriculture Undera** Minister. **

கொடிய பஞ்சம்

முகமது பின் துக்ளக் ஆட்சியில் ஹிஜ்ரி 792, தோஆபிலும், மாளவத்திலும் மழை இல்லை. ஹிஜ்ரி 730 இல் தானியங்கள் விளையவில்லை. ஏழு ஆண்டுகளாக ஹிஜ்ரி 736 வரை ***தோஆப்*** *பிரதேசத்தில் மழை இல்லை. பெரும்பஞ்சம்.*

வங்காளம் - பீஹார்

வங்காளத்திலும் இருந்தும் பீஹாரிலிருந்தும் தானியங்களைத் தருவித்து பஞ்சப்பகுதிகளக்கு அனுப்பி, சகாயவிலையில் தானியத்தை வழங்கினார். ஏழைகளுக்கு தானியங்களும் அன்னமும் அளிக்கப்பட்டது. பஞ்சநிவாரண வேலையில் முழுக்கவனம் செலுத்தினார். ஒவ்வொரு ஏழைக்குடும்பத்திற்கும் ஆறு மாதத்திற்குரிய தானியத்தை வழங்கினார். பஞ்சத்தைப் போக்க பிரயாசையுடன் நடவடிக்கை எடுத்தார்.

தனி விவசாயத்துறை - திவானி கோஹி

விவசாயத்திற்கு தனித்துறையை இந்திய சரித்திரத்தில் முதன் முதலில் நிறுவியவர் முகமதுபின் துக்ளக் ஆறுகளிலிருந்து கால்வாய்கள் அமைத்தார். வயல்களுக்கு நீர் பாய்ச்சிட வழி செய்தார்.

★ R.சத்தியநாதய்யர், D.பாலசுப்பிரமணியன், இந்திய வரலாறு இரண்டாம் பகுதி இடைக்கால இந்தியா 1206 - 1707, சிதம்பரம் 1960, பக்கம் 53.

★★ *R.Sathianathaier, Indian History Volume II, Madras 1941 Page 52.*

மலீக் தாதாகான்

பஞ்சாபில் கவர்னராக இருந்த மலீக் தாதாக்கான் அங்கு வேளாண்மையில் அதிக கவனம் செலுத்தினார்.

உத்திரப்பிரதேசம் - பஞ்சாப்

இக்காலத்திலும் உத்திரப்பிரதேசத்திலும் பஞ்சாபிலும் ஆயிரக்கணக்கான கிணறுகள் உள்ளது. அவைகளை உருவாக்கிய முன்னோடி முகமதுபின் துக்ளக். அவர் காலத்தில் விவசாயம் விருத்தியடைந்தது.★

பஞ்ச காலத்தில் மக்களைக் காப்பாற்றிய மகத்தான ஆட்சியாளர் முகமதுபின் துக்ளக்.

பரந்த நோக்கம் - நாற்பது இலட்சம்

நிஸாமி வ மிஃப் தாஹ்வ ஹலாஷி கன்ஸர் என்றும் நூலை எழுதிய மௌலானா முயினுத்தீன் உம்ராணிக்கு முகமது பின் துக்ளக் ரூ. 40 இலட்சம் வழங்கினார். மதன் முவாகிஃப் என்ற நூலின் ஆசிரியர் மௌலானா அஸ்துத்தீன் என்பவர் முகமது பின் துக்ளக்கின் ஆசிரியர் அந்த ஆசிரியர் மூலமே அந்தப் பணத்தை கொடுத்து அனுப்பினார் முகமதுபின் துக்ளக்.★★

அலாவுதீன் கில்ஜி

அலாவுதீன் கில்ஜி காலத்தில் (கி.பி. 1296 – 1315) சேனையின் பெரும் பகுதிக்கு அரசாங்கம் கஜானாவிலிருந்து ரொக்கத் தொகையாகச் சம்பளமாக கொடுக்கும் பழக்கம் ஏற்பட்டிருந்தது. ஜாகீர்கள் (Apiece of Land assigned to a government officer by the state) வழங்கப்படுவதற்குப் பதிலாக மாதச் சம்பளம் கொடுத்தலே நலமாகத் தோன்றியது. விவசாயிகளிடமிருந்தும் ரொக்கப் பணம் தீர்வையாக வசூலிக்கப்படாமல், தானியங்கள் தீர்வையாகப் பெறப்பட்டன. அத்தானியங்கள் அரசாங்கக் கிடங்குகளில் வைக்கப்பட்டது. அதனால் அரசாங்கமே தானியங்களின் விலையை நிர்ணயித்தது.

★ சையித் இப்ராஹிம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, சென்னை. 2014. பக்கங்கள் 206 - 207.

★★ முற்கூறிய நூல் பக்கம் 219.

சுல்தான் அலாவுதீன் கில்ஜி தமது சிப்பாய்களுக்கு மாதச் சம்பளங்கள் ஏற்படுத்தி, தானியங்கள், காய்கறிகள் ஆடைகள், ஏறு வாகனங்கள் மற்றும் இதர தேவைகளையும் வழங்கி அவற்றிற்கு விலைகளைக் குறிப்பிட்டு வழங்கினார்.

முகமதுபின் துக்ளக்

முகமதுபின் துக்ளக் அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்ட விலைகளை ஒரு கட்டத்தில் நீக்கினார்.

இப்பொழுது படைகளுக்கு ரொக்கச் சம்பளம் கொடுக்க வேண்டியிருந்தது. அதனை நிறுத்த முடியாது. நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு, ஆங்காங்கே கிணறுகள் தோண்டியும் வாய்க்கால்கள் அமைத்தும் விவசாயத்தை நாடெங்கும் வளப்படுத்த தனித்துறையை உருவாக்கி பெருவாரியாகச் செலவளித்தார் முகமதுபின் துக்ளக்.

நேர்மையான வழி

சிப்பாய்களுக்கு ரொக்கமாக சம்பளம் வழங்குவதற்குப் பதிலாக பழங்காலமுறைப்படி ஜாகிர்களை வழங்கினால் சிப்பாய்களுக்கம் விவசாயிகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விடும் என்று முகமதுபின் துக்ளக் நம்பினார். வேளாண்மை விருத்திக்கு அது பயன்படாது என்றும் கருதினார்.

புதிய வரிகள் விதித்தால் மக்கள் பாதிப்படைந்து கலகங்கள் வந்து விடுமோ என்றும் எண்ணினார். அப்போது அவரது உள்ளத்தில் எழுந்தது நேர்மையான ஒரு வழி பிறந்தது.

மனிதன் ஏற்படுத்தியது

தாமிர நாணத்தின் அடையாள மதிப்பை தீர்மானித்தார். கொடுக்கல் வாங்கலில் வியாபாரத்தில் பொன், வெள்ளியிலான அடையாள நாணயங்களின் மதிப்பை மனிதனே ஏற்படுத்தியிருக்கிறான் என்பதை முகமதுபின் துக்ளக் தமது அற்புத அறிவினால் கண்டார். அரசாங்க நாணயங்கள் நிரந்தரமான மதிப்புடன் அக்காலத்தில் எல்லா நாகரிக நாடுகளிலும் செலாவாணியாக அங்கீகரிக்கப்பட்டன.

நவீன வியப்பான சீர்திருத்தமுறை

அடையாள நாணயம் என்னும் நவீன வியப்பான சீர் திருத்தமுறையை முகமதுபின் துக்ளக் கொண்டு வந்தார். எந்தக் கண்டுபிடிப்பால் இன்றைய நாகரிக உலகம் முழுமையாகப் பயன் பெறுகின்றதோ அதை இந்தியாவில் கொண்டு வந்த முகமதுபின் துக்ளக் கோமானா? கோமாளியா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

நாடெங்கும் அமைதி

இந்த நாணயமுறை அறிவிப்பால் நாட்டின் பல பகுதிகளில் குழப்பங்களும், கலகங்களும் உண்டானதா இல்லையே! அரசாங்கத்திற்கு ஆபத்து வந்ததா? இல்லையே! அவ்வாறு ஏதேனும் நடக்கவில்லையே?

தண்டனை தரப்படவில்லை

நாடெங்கும் கள்ளத்தனமாக நாணயங்களை அச்சிட்டவர்களை கைது செய்யவில்லை. கொலை செய்யக் கட்டளையிடவில்லை. முகமதுபின் துக்ளக் மிகப் பெருந்தன்மையுடன் அல்லவா நடந்து கொண்டார். புதிய நாணயங்களை நீக்கினார். பதில் நாணயங்கள் கேட்டவர்களுக்கு பொன்னையும் வெள்ளியையும் தந்தார். பெரிய நஷ்டத்தைச் சந்தித்தார். பரனீ இதை பெரிது படுத்திவிட்டார். **இப்னுபதூதா, ஷம்ஸ்ஸிராஸ் ஹஃபீஃப் ஆகியோர் இதைப் பற்றி கூறவே இல்லை.**

காஜா ஜஹான் மலீக் அஹ்மத் அயாஸ்ரூமி

இறைநேசர் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் தனது புனிதத்தலைப் பாகையை காஜாஜஹான் மலீக் அஹ்மத் அயாஸ் ரூமிக்கு வழங்கினார். ஏனென்றால் அவர் பரிசுத்தமானவர், நல்ல மகான் அவரை முகமதுபின் துக்ளக் தனது முதல் அமைச்சராக நியமித்தார். தன்னைப்போன்றே தூய்மையாளரான அவர் இஸ்லாமியக் கொள்கையிலும் உறுதியோடு இருந்தார்.

குறுகிய மனப்பான்மையுள்ள ஜியாவுத்தீன் பரணீ பேன்றோர் முகமது பின் துக்ளக் மீது வசைமாரி பொழிந்தது ஒன்றும் ஆச்சரியமான விஷயமல்ல, வியப்புமல்ல.

அதிலாபாத்

துக்ளக்காபாத் நகரை யொட்டிய பகுதியில் அதிலாபாத்தில் கோட்டையின் அடித்தளத்தை அமைத்தவர் முகமதுபின் துக்ளக்

ஜகன்பன்னா உலகின் அடைக்கலம்

இஸ்லாமியர்களால் டில்லியில் கட்டப்பட்ட ஏழு நகரங்களில் நான்காவது ஜகன்பன்னா (உலகின் அடைக்கலம்) என்று பொருள். இதை உருவாக்கியது முகமதுபின் துக்ளக்.

செல்வச்செழிப்புள்ள நகர்

தக்காண பீட பூமியில் 180 மீட்டர் உயரமுள்ள பாறைகள் நிறைந்த மலை; வடக்கு தெற்கு திசைகளில் கணவாய், மலை அடிவாரத்தில் மக்கள் வாழ்ந்திட நகரம் உருவாக்கப்பட்டது. **செல்வச் செழிப்புள்ள நகர்** என்று பொருள்படும் தௌலதாபாத்தை உருவாக்கியது முகமதுபின் துக்ளக்.*

தான் நிர்மாணித்த நகரங்களுக்கு **உலகின் அடைக்கலம் (ஜகன் பன்னா) செல்வச் செழிப்புள்ள நகர் (தௌலதாபாத்)** என்று உயர்ந்த பெயர்களைச் சூட்டிய உத்தமர் முகமதுபின் துக்ளக் கோமானா? கோமாளியா?

5 இலட்சம் ஸ்டெர்லிங்

முகமதுபின் துக்ளக்கின் படையினர் அரசவையினர், குதிரைப் படையினர் 3,70,000 காலாட் துருப்புக்கள் 1,00,000 ஒரு இலட்சம் போர்க் களங்களில் வாகை சூடிய முகமதுபின் துக்ளக் ஒரு நாள் செலவு செய்தது 5 இலட்சம் ஸ்டெர்லிங் என்பார் மெடோஸ் டெய்லர்.

Mamomed Toghluk distributed immense largesses to his Dobles and cour tiers and on one day expended more than 500000 Sterling. **

★ *M.*சாலமென் பெர்னாட்ஷா, *P.*முத்துக்குமரன் இந்திய இஸ்லாமியக்கலை வரலாறு சென்னை, 2014, பக்கம் 47 - 50.

★★ *Meadows Taylor, Astudents Manual of the History of India, First Published 1904, New Delhi 1986, Page 114.*

இறைவன் அறிவான்

முகமதுபின் துக்ளக் தனது தந்தையைக் கொன்று பட்டத்திற்கு வந்தார் என்று பழி கூறுவதை இறைவனே அறிவான் உண்மையை என்று கூறியவர் பெரிஷ்டா.

But God only Knous the real Truth.★

மருத்துவ உதவிகள்

முகமதுபின் துக்ளக் மருத்துவமனைகளை அமைத்து நோயாளிகளுக்கு சிகிச்சை தந்தார். ஆதரவற்ற விதவைகளையும், அநாதைகளையும் பாதுகாத்தார் என்று பெரிஷ்டா குறிப்பிட்டுள்ளார்.★★

புதுமையின் தொடக்கம்

முகமதுபின் துக்ளக் ஆட்சி காலம் புதுமையின் தொடக்க காலம் Hisreginin an epoch. He had genius கூர்மதி கொண்டே மேதை என்பார் J.டால்பாய்ஸ் வீலர்.★★★

தட்டுப்பாடு நீங்கிட

முகமதுபின் துக்ளக் தனது புதுமைத் திட்டங்களுக்குத் தேவைப்படும் பெருந்தொகையைப் பெறவே அடையாள

★ *Mohamed Kasim Ferishta History of the Rise of the Muhamedan Power in India Till the year AD 1612. Translated from the original Persiam. John Briggs M.R.A.S.* 1829 இல் மொழி பெயர்பான இது *Page* 235 நான்கு தொகுதிகளாக வந்தது. 1908இல் *R.Chambray* கம்பெனியாரால் மறுபதிப்பானது 2006 இல் டில்லி ஆதம் பப்ளிஷர்ஸ் வெளியிட்டுள்ளனர். முதல் தொகுதி 360 பக்கங்கள் அதில் பக்கம் 229 முதல் 280 வரை துக்ளக் அரச பரம்பரை பற்றி வரும்.

★★ முற்குறிப்பிட்ட நூல் முதல் தொகுதி பக். 236. 328 பக்கங்கள். இரண்டாவது தொகுதி 352 பக்கங்கள் 3வது தொகுதி 4வது தொகுதி, 423 பக்கங்கள்)

★★★ *J.Talboyswheeler, India Part I Underthe Muslim Rule, Delhi 1975, Page 70.*

(முதற் தொகுதி 320 பக்கங்கள் இரண்டாவது தொகுதி 289 பக்கங்கள் மொத்தம் 600 பக்கங்கள்)

நாணயமுறையைக் கொண்டு வந்தார். தான் கொண்டுவரும் நாணயத் திட்டத்தால் தங்கம் மற்றும் வெள்ளித் தட்டுப்பாட்டை சரிக்கட்டலாம் என்று எண்ணினார்.

வெள்ளியின் விலை உயர்வு

வெள்ளியின் விலையை உயர்த்தினார். தங்க நாணயங்களின் எடையைக் கூட்டினார். வெள்ளி நாணயங்களின் எடையைக் குறைத்தார் வெள்ளித் தட்டுப்பாட்டைச் சமாளித்திட அடையாள நாணயத்தைக் கொண்டு வந்தார்.

புதுமைத் திட்டம்

புதிதாக வெளியிட்ட நாணயங்கள் வெள்ளி நாணயத்துக்கு சமமாகக் கருதப்பட்டது. முகமதுபின் துக்ளக்கின் புதுமைத் திட்டம் இது.

முதல் முற்போக்குத் திட்டம்

இந்திய நாணயச் செலவாணி வரலாற்றில் முதன் முறையாக மேற்கொள்ளப்பட்ட முன்னோடி முற்போக்குத் திட்டம் என்பர். க. வெங்கடேசன்.★

தோல்வியிலும் வெற்றி

ஆனால் எதிர்பார்த்ததிற்கு நேர்மாறாக கள்ள செப்பு நாணயங்கள் புழகத்திற்கு நிறைய வந்தன.

செம்பா? பித்தளையா?

முகமதுபின் துக்ளக் வெளியிட்டது செப்புக்காசுகள் என்கிறார் பரனீ; பெரிஸ்டாவோ இக்காசுகள் பித்தளை என்கிறார். திட்டம் தோல்வியுற்றது. முகமதுபின் துக்ளக் உடனடியாக போலிக் காசுகளை திரும்பப் பெற்றுக் கொண்டார். அதுமட்டுமல்ல செப்புக்காசுக்களுக்குப் பதிலாக தங்கம் அல்லது வெள்ளிக்காசுகளை வழங்கி, அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை நிலைநாட்டினார். தோல்வியிலும் வெற்றி கண்டார். முகமதுபின் துக்ளக் கோமானா? கோமாளியா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

★ முற்கூறிய நூல் பக்கம் 484.

93 துறைமுகங்கள் 23 நகரங்கள்

முகமதுபின் துக்ளக் ஆட்சியில் 93 துறைமுகங்கள் வெளிநாட்டு வர்த்தகக் கேந்திரங்களாகத் திகழ்ந்தன. டெல்லி, தேவகிரி (தௌலதாபாத்) கனோஸ், லக்நோ, லக்நௌட்டி, மாபார் (தமிழ்நாடு) போன்ற 23 நகரங்கள் செல்வச் செழிப்போடு இருந்தன. படிப்பாளியும், பல்கலைவித்தகருமான முகமது பின் துக்ளக் ஆட்சியில் இந்த துறைமுகங்களும், நகரங்களும் சிறப்பு ஏதும் குன்றியதா? இல்லையே?

காலத்தை மீறிய முற்போக்குக் கருத்துக்கள், கொள்கைகள், திட்டங்கள், சமகாலத்தவர்களால் ஏற்கப்படவில்லை. ஏற்க மறுத்தனர். முகமது பின் துக்ளக்கின் நிர்வாகத்திறமை வியப்பிற்குரியது. அவரது நோக்கங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது. நேர்மையானது; எதிர்காலத்தைச் சுற்றிச் சுழன்றது.

முகமதுபின் துக்ளக் கோமானா? கோமாளியா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

தொலை நோக்காளர்

முகமதுபின் துக்ளக் கோட்பாட்டாளர், தொலை நோக்காளர் என ஏ.எல்.ஸ்ரீவத்சவா கூறுகிறார்.

He Should have attemped like a wise and Practical Stateman to take them with him in his Project reforms.★

தனிப்பட்ட வாழ்க்கை மிகவும் உயர்ந்தது. வள்ளல் தன்மை கொண்டவர்; தினமும் இஸ்லாமிய வழக்கப்படி ஐவேளை வழக்கமாகத் தொழக்கூடியவர் என்றும் வத்சவா குறிப்பிடுகிறார். ★★

26 ஆண்டு கால கட்சி

முகமதுபின் துக்ளக் கி.பி. 1325 – 1351 வரை 26 ஆண்டுகள் இந்த நாட்டை ஆட்சிபுரிந்தார்.

★ *Ashir badilal Srivastava, The Sultanate of Delhi, Agra, 1976, Page 201.*

★★ முற்கூறிய நூல் பக்கம் 199.

நாகர்காட் - இமாச்சலம் - தாங்மா

டில்லி சுல்தானிய வரலாற்றில் நாகர்காட், இமாச்சலம், தாங்மா ஆகியவற்றை முதன் முதலாக வெற்றி கொண்டவர் முகமதுபின் துக்ளக் அவருடைய வடமேற்கு எல்லைகளை நிலைப்படுத்த உதவியது. இது தோல்வியா? வெற்றியா? 26 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்டது தோல்வியா? வெற்றியா? முகமதுபின் துக்ளக் கோமானா? கோமாளியா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

மாபெரும் ஆட்சியாளர்

அரசுக்கே உலை வைக்கக்கூடிய பகாஉத்தீன் (1326) கிஷ்லுகான் (1328) ஐஸ்உல்முல்க் ஆகியோர்களின் வலிமை வாய்ந்த கிளர்ச்சிகளை அடக்கி வெற்றி பெற்றவர் முகமது பின் துக்ளக்.

பரனீயின் தீயநோக்கம் தோல்விகளைக் மிகைப்படுத்திக் காட்டும் குரோதம் இவைகளைத் தள்ளி வைத்துவிட்டு முகமதுபின் துக்ளக்கை நாம் மதிப்பிடவேண்டும்.

முகமதுபின் துக்ளக் செய்தவை, செய்ய எண்ணியவை அவரைத் துக்ளக் ஆட்சியாளர்களில் மாபெரும் ஆட்சியாளர் என்று கருதவைக்கிறது.

மனநோயாளியா?

The History of India 1874 இல் இலண்டனில் வெளியான எல்பின்ஸ்டன் நூலில் தான் முதல் முதலில் முகமதுபின் துக்ளக் மனநோயால் பீடிக்கப்பட்டவர் என்று கூறினார். 19ஆம் நூற்றாண்டில் அவரது கருத்தை அப்படியே ஐரோப்பிய எழுத்தாளர்கள் ஏற்று முகமதுபின் துக்ளக்கை குறை கூற ஆரம்பித்ததும் இன்று வரை தொடர்வது சரியா?

தலைநகரை மாற்றுபவர்கள் மனநோயாளிகளா? ரஷ்யாவிலும், துருக்கிலும், பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவிலும் தலைநகரம் மாற்றப்பட்டதே அது தவறா? மாற்றியவர்கள் மனநோயாளிகளா?

அடையாள நாணயம் வெளியிட்டது முற்போக்கு திட்டமல்லவா அது தவறா?

உலக உருண்டையை நம்பியதா?

மண்ணுலகில் வாழ்ந்தவர்கள் அவர்கள் வாழும் காலத்தில் மனநோயாளியாகத் தான் எண்ணப்பட்டார்கள் கலீலியோ என்ன ஆனார்? வரலாற்றை நாம் நன்கு அறிவோம் அல்லவா! உலகம் உருண்டை என்று சொன்னதை உலகம் முதலில் நம்பியதா?

தவறான விமரிசனங்கள்

நமது அளவு கோல் அளவிடும் கருவி இக்காலத்திய கருவியென்றால் எவரையும் சரியாகத் துல்லியமாக மதிப்பிடாது. அவர்கள் வாழ்ந்த காலத்துக் கண்ணோட்டத்துடன் காணப்பழகிக்கொண்டு இனி இதுபோன்ற தவறான விமரிசனங்கள் எந்த அரசரைப் பற்றியும் வரலாற்றில் இடம் பெற்று விடக்கூடாது. முடிவாகச் சொல்வதாயின் முகமதுபின் துக்ளக்கின் திட்டங்கள் தொலைநோக்குடையவை. செயல்முறை சரியாக அமையவில்லை.

வரலாறு கண்ட புதுமை மனிதர்

முகமதுபின் துக்ளக் வரலாறு கண்ட புதுமை மனிதர்

புத்துலகம் காண விரும்பியவர்

புத்துலகம் காண விரும்பிய வல்லாட்சியாளர் என்று முனைவர் ந.க. மங்கள முருகேசன், இராசம் மங்கள முருகேசன் இருவரும் முகமது பின் துக்ளக்கிற்குப் புகழாரம் சூட்டுகிறார்கள்.*

இந்துக்களை இன்முகத்துடன் நடத்தியவர்

1337 இல் நாகர்கோட்டை முகமதுபின் துக்ளக் தாக்கினார்; வென்றார்.

ஜூவாலமுகி

ஜூவாலமுகி ஆலயத்தை போரின்போது அழித்திடாமல் நல்லெண்ணத்துடன் தோற்ற ஆட்சியாளர் மேல் ஆதிக்கத்தை

★ இந்திய வரலாறு தொகுதி 2 கி.பி. 1206 - 1526 வரை) சென்னை 2012, பக்கங்கள் 201 -202.

ஏற்றதும் அவரிடமே அதனை வழங்கியவர் முகமதுபின் துக்ளக் வடமொழி கற்றார். இந்துக்களை உயர் பதவிகளில் அமர்த்தினார்.

இரட்டன்

சிந்துவில் இரட்டன் உயர் பதவி பெற்றார்.

பைரோன்

குல்பார்க்காவின் ஆளும் பொறுப்பை பைரோனுக்கு அளித்தார்.

தாரதர்

தேவகிரியில் நிதித்துறைத் தலைமைப் பொறப்பிற்கு தாரதார் என்பரை நியமித்தார்.

இந்துக்கள் எவரேனும் முகமதுபின் துக்ளக் ஆட்சியில் பாதிப்படைந்தார்கள் என்றால் அது அவர்கள் செய்த குற்றங்களுக்காக இருக்கலாம் இந்துக்கள் என்பதால் அல்ல என்று உறுதிபடக் கூற முடியும்.

தெலுங்கானா - கிருஷ்ணா நாயக்

ருத்தராதேவுடைய மைந்தர் கிருஷ்ணா நாயக்கிடம் விசுவாசப்பிரமாணம் வாங்கிக் கொண்டு தெலுங்கானா ராஜ்யத்தின் அதிபராக நியமித்தார்.

கம்பலா ராஜா - பல்லல்மேவா

கிருஷ்ண நாயக்கின் பழைய ராஜியங்களைப் பிரித்து ஹிந்து ராஜாக்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் வழங்கினார் அதில் கம்பலா ராஜாவும் பல்லால்மேவும் முக்கியமானவர்கள்.

நாகநாயக்

கந்துகானா, ஜூனைர் பிரதேசங்கள் நாக நாயக் நாகதேவ் (Nagdev) விற்கு வழங்கப்பட்டது.

திலக்சந்த் சோகர்

பஞ்சாப் தோஆபில் ரிச்னா பிரதேசம் திலக் சந்த் சோகரிடம் தரப்பட்டது. அதுபோலவே அயோத்தி, பீஹார்

மாகாணங்களின் சில ஜில்லாக்களின் அதிகாரம் அங்குள்ள ஹிந்துத் தலைவர்களுக்கு அதிகாரப் பத்திரம் கொடுத்து உயர்வு அளிக்கப்பட்டது.

குஜராத்

ஹிந்து ராயர்களுக்கும், ஹிந்து ராஜாக்களுக்கும் குஜராத்தின் பெரும்பகுதியைப் பங்கிட்டுக்கொடுத்து மேற்பார்வை செய்ய கப்பம் வசூலிக்க கவர்னரை நியமித்தார். கச்பிரதேசராஜா ரானா மண்டல் கங்கார் கர்னால் ஜூனகார் முக்கியமானவர்கள், ராய் மஹாரூப்பிற்கு ஒரு தாலுகா தரப்பட்டது.

கான்தேவ்

பக்லானா பிரதேசம் கான்தேவ்விற்கு வழங்கப்பட்டது. நஹர்வாலாவில் சில மஹன்த் மத குருக்களுக்கு ஜாகிர்களை வழங்கினார்.

மஸ்பீராய்

டட்டா பிரதேசம் மஸ்சீராய்க்கு வழங்கப்பட்டது. டட்டா அருகில் கோண்டல் பகுதிக்கு ஹிந்து அதிகாரி நியமிக்கப்பட்டார்.

கோரக்பூர் - மேவாத்

கோரக்பூர் நிர்வாகமும், மேவாத் ஆட்சிப் பொறுப்பும் ஹிந்துக்களிடம் தரப்பட்டது.

ஸாமரனா

ராஜபுத்திரர்களுக்கு சௌகான் (Chawhan) ஸாமானா பிரதேச அதிகாரம் அளிக்கப்பட்டது. ஸஹாரன்பூர் பாயாம மலைப்பிரதேசம் ராஜபுத்திரர்களுக்கும் கோஜாகளுக்கும் சொந்தமாக்கப்பட்டது.

ஸாலூரா

ஸாலூரா பிரதேசம் (அம்பாலா ஜில்லா) பர்வாரீ ராஜபுத்திரர்களுக்குத் தரப்பட்டது. கேதல், லனாம் பிரதேசத்தில் மண்டாஹா, பஹட்டீ (Bhatti) ராஜபுத்திரர்கள் ஆட்சியாளரானார்கள்.

அக்பரின் முன்னோடி

முகலாய் சக்கரவர்த்தி அக்பருக்கு முன்னரே முஹம்மதுபின் பின் துக்ளக் சதி எனும் உடன் கட்டை ஏறல் எனும் கொடிய பழக்கத்தை நிறுத்தினார் என்பார் ஈஸ்வரி பிரசாத்.*

ஹிந்து ராஜாக்களுக்கு படையில் உயர்பதவிகள் அளித்தார். அக்பருடைய கொள்கைகளைப் புகழ்வோரெல்லாம் முகமதுபின் துக்ளக்கின் கொள்கையை புகழாமல் இருக்க முடியாது என்று பேராசிரியர் கார்டினர் ப்ரவ்ன் (Gardiner Brown) இவர் முகமதுபின் துக்ளக்கை தீர்க்கதரிசி நிலைக்கே கொண்டு சென்று கூறுவார்.**

Gardiner Brown has ignored al together the dark as pect of the life of Muhammed Tughluq. முகமது துக்ளக் பற்றிய குறையை கார்டின் பிரௌன் பொருட்படுத்தாமல் விட்டுவிடுகிறார்.***

வாரங்கல் ருத்ரதேவ்

வாரங்கல் அரசர் ருத்ரதேவ்வும் திர்ஹத்ராஜாவும் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்தனர். தாங்கள் செய்த விசுவாசப் பிரமாணத்திற்கு எதிராக நடந்த அவர்களை முகமதுபின் துக்ளக் நினைத்தால் தூக்கிலிட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. அவர்களை சிறப்பாக்வே நடத்தினார்.

முஸ்லிம்களான அதிகாரிகள் மமிக்கஃபூர்மிஹர் பஹதூர் ஷாஹ் இருவரும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

யானைக்காலில் வைத்து மிதித்துக் கொல்ல உத்திரவிட பல முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் மடிந்துள்ளனர். ஆனால் இந்துக் கிளர்ச்சியாளர்கள் எவரும் அவ்வாறு கொல்லப்பட்வில்லை.

★ *Iswari Prasad, Ashart History of the Muslim Rule in India, Allahahad, 1976, Page 10*

★★ மஆரிஃப் ஆஸம்கர், பகுதி, 4, 5 மேற்கோள் ஸையித் இப்ராஹிம் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி பக்கம் 153 - 155.

★★★ *V.D.Mahajan, History of Medieval India, New Delhi, 2004, Page 195.*

இடைக்காலத்தில் சிறந்த அரசர்

இடைக்காலத்தில் இந்தியாவில் ஆட்சி புரிந்த அரசர்களுள் முகம்மதுபின் துக்ளக் சாலச் சிறந்தவர் என்பதில் சிறிதேனும் ஐயப்பாடு இருக்க முடியாது.*

சூழ்திறம்மிக்கவர்

முகமதுபின் துக்ளக்கை விமர்சித்த ஸ்டான்லிலேன்பூல் கூட தனது நூலில் முகமதுபின் துக்ளக் **(Muhammad Taqhlok the man of Ideas)** கருத்து, எண்ணங்களின் உருவம் என்று குறிப்பிட்டுள்ளார். சூழ்திறம் மிக்கவர் என்று போற்றுகிறார்.**

அனைவரில் அவரே மிக நல்லவர்

துக்ளக் மிகவும் விரும்பத்தக்க குணங்களைப் படைத்தவன். துருக்கிய அரசர்களில் அனைவரிலுமே அவனே மிக நல்லவன் அவன் போரில் மிக வல்லவனாக இருந்ததுபோலவே ஆட்சி முறையிலும் திறமையுள்ளவனாக விளங்கினான் என்று W.H. மோர்லண்டு, A.C.சாட்டர்ஸியும் கூறுவர்.***

சீரியபுத்தி

முகமதுபின் துக்ளக்கை நீரோ அல்லது கலீகுலாவைப் போல் கொடூரமும் இரத்த வெறியும் பிடித்த கொடுங்கோல் மன்னன் என்று கூறும் மதிப்பு அவரது சீரிய புத்திக்கு முரணாக இருக்கிறது.

சீர்திருத்த ஆவல்

மத்தியகால மன்னர்களிடம் அனுபவ சித்தியான சீர்திருத்தம் செய்யவேண்டும் என்ற ஆவலும் அவரிடம் இருந்தன. ஆனால் அவரது வேலை மிகவும் பொறுப்பு வாய்ந்ததாயிருந்தது.

★ *L.P.Sharma, History of Medieval India Newdelhi 1991, P142.*

★★ *Stanley Lanepoole, Mediaeval India Under Mohammedan Rule A.D. 712 - 1764 Londan, Firstredition 1903 Fifteenth Edition 1926, Page 124.*

★ இந்திய வரலாற்றுச் சுருக்கம் தமிழாக்கம் *MR*பெருமாள் முதலியார் *V.R.*இராமச்சந்திர தீட்சிதர் சென்னைப் பல்கலைக்கழகம் 1951, பக்கம் 217.

வளர்ந்து கொண்டேபோன சாம்ராஜ்யத்தின் விஷயங்களைத் தம்முடன் ஒத்துழைக்காத உத்தியோகஸ்தர்களைக் கொண்டு அவர் நடத்தவேண்டியிருந்தது.

அவசியம் திருத்தப்படவேண்டும்

சமரசப்படுத்தும் இச் சந்தர்ப்பங்களை நோக்கின் சுல்தானின் ஒழுக்கம், கொள்கை இவற்றைப்பற்றி சகஜமாய் இருந்துவரும் அபிப்பிராயம் அவசியம் திருத்தப்பட வேண்டியதாயிருக்கிறது என்பர் எம்.எஸ். ராமசாமி அய்யங்கார்.★

M.S. ராமசாமி அய்யங்கார்

1939 இல் M.S.ராமசாமி அய்யங்கார் கூறியதை நினைவுபடுத்துகிறேன். முகமது பின் துக்ளக் பற்றிய தவறான சரித்திரக் குறிப்புகள் அவசியம் திருத்தப்பட வேண்டுமென்ற அவரது கோரிக்கையின் நியாயத்தை தெளிவாக நாம் அறிய முடிகிறது.

எம்.கே.சுந்தரவரதாச்சாரியார்

1940 இல் இந்திய சரித்திரம் எழுதிய எம்.கே.சுந்தரவரதாச்சாரியார் தனது நூலில் சென்னை பக்கம் *167* இல் முகமது பின் துக்ளக் சிறந்த புத்திமான் கல்விக்கடல் மிகுந்த தெய்வபக்தி உள்ளவர். தமது சமஸ்தானத்தில் அநேக வித்வான்களை வைத்து ஆதரித்தும், வைத்திய சாலைகளையும், அன்னசத்திரங்களையும் ஏற்படுத்தியும் வந்தார் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

அபூர்வ தேர்ச்சி பெற்றவர்

முகமது பின் துக்ளக் தெளிவான மனமும் தெய்வபக்தியும் தளராத ஊக்கம் உடையவர் கூரிய அறிவும், தயையுள்ள நெஞ்சமும் படைத்தவர் பட்டத்துக்கு வருமுன்னமேயே யுத்தத்தில் பேர் பெற்று விளங்கின யுத்தவீரர். இத்துணைச் சிறப்புக்கள் ஒருங்கே அமையப்பெற்ற அவரை மனோரதனென்றாவது,

★ *M.S.*ராமசாமி அய்யங்கார் *(M.S.Ramaswami Aiyangar, Aschool History of India, Translated M.S.Sudareswara Aiyar, by, Madras, 1939, Pages 191-192.*

பைத்தியக்காரனென்றாவது அழைப்பதற்கில்லை. அறிவை வளர்த்துக்கற்பனா சக்தியை விசலாப்படுத்தியதின் பலனன்றோ இத்துணைச் சிறப்பும் எய்தியது. சுருங்கச் சொல்லின் அதிக தேர்ச்சியாலும் கல்வி அறிவின் முதிர்ச்சியாலுமே முகமது பின் துக்ளக் இவ்வாறு விளங்கினார். எனலாம் என்பர் ஹெ.சி.*

a man of rare accomplishments

He was a man of ideas, but they werenot the ideas either of a visionary or of an in sane man. They were the Product of a trained intellect. Inshort, he was all that high Culture and finished education could make. **

யானையைப் பற்றி பார்வையற்ற நால்வர்

முகமதுபின் துக்ளக்கின் தலைநகர் மாற்றம் பற்றிய உண்மையான காரணத்தைக் கண்டறிய இயலவில்லை என்பதே உண்மை. இதற்கான காரணங்கள் கூறுபவர் நிலையெல்லாம் யானையைப் பற்றிக் கூறிய பார்வையற்ற நால்வர் போன்ற நிலைதான் என்ற ந.க.மங்கள முருகேசன் கருத்தை எண்ணிப்பார்க்கிறேன்.***

வை.சூரிய நாராயணசாஸ்திரி

வை.சூரிய நாராயண சாஸ்திரி என்று அழைக்கப்பட்டுபின்னர் தனது பெயரை பரிதி மாற்கலைஞர் என்று தமிழ்ப்படுத்திக் கொண்டவர் வை.சூரிய நாராயண சாஸ்திரி உலக சரித்திரம் பிரபஞ்சதாரை அல்லது மானிடர் முன்னேற்றம், தமிழ் நூற் பெருக்கம், செம்மொழி தமிழ் என பல நூல்களையும் நாடகங்களையும் எழுதியவர்.

நமது பரத கண்டம்

1925 இல் சென்னை தாருல் இஸ்லாம் புஸ்தகசாலையிலிருந்து ஒரு ரூபாய் **14** அணா விலையில் நமது பரத கண்டம்

* ஹெச்.சி. இந்திய சரித்திரம் இந்து முஸ்லிம் ஆட்சிகளின் வரலாறு, எஸ்.கே.தேவசிகாமணி மொழி பெயர்ப்பு. பம்பாய், 1946 பக்கம் 195.

** *H.C. A Brief Survey of Indian an History Londan, 1937, Page 114, 115.*

*** முற்கூறிய மங்கள முருகேசன் நூல் பக்கம் 183.

முதற்பாகம் ஆரிய சூரியன் என்னும் நூலை 264, பக்கங்களில் வெளியிட்டார். (இரண்டாம் பாகம் 288 பக்கங்கள்)

முஹம்மத் பின் தொக்லக்

"இந்த ஜூனான்கான் பைத்தியம் பிடித்த முஹம்மத் பின் தொக்லக் எனப்படுவோன். **ஆனால் எம்மட்டில் இப்பட்டப்பெயர் அவனுக்குப் பொருத்த முற்றதென்று தற்காலம் கேள்விகேட்க இடம் உண்டாயிருக்கின்றது.**"

மகாமேதாவி

"ஏனெனின் அவனது செய்கைகளைப் பரிசோதனை செய்து பார்க்குங்கால் அவைகள் **மகா மேதாவியினால் செய்யப்பட வேண்டும் என்று தோன்றுகின்றன.**"

பெருங்குற்றமன்று

"இருபதாவது நூற்றாண்டில் திரவிய சாஸ்திரங்களைக் கற்ற மேதாவிகளும், காயித நாணயம் போடுவதில் ஏமாந்து போகின்றனர். அதற்கு (லிமிட்) அளவு இன்னதென்று கண்டு பிடிக்கக் கஷ்டப்படுகின்றனர். அதனால் ஏற்படும் விலைவாசிகளின் துன்பங்களையும் எக்ஸ்சேஞ்ச் (Exchage) என்று சொல்லப்படும் வியாபார மாறுதல்களையும் காட்டும் Economics பொருள் சாஸ்திரத்தைப் பாருங்கள். **ஆதலால் பதினான்காவது நூற்றாண்டில் தொக்லக் தொடுத்த காரியம் சரிவர நிறைவேறவில்லை என்பது பெருங்குற்றமன்று.**"

"மேலும் பொய் நாணயங்கள் இந்நூற்றாண்டிலும் அடிக்கப்படுகின்றன. இப்படியிருக்க அக்காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும், தங்கசாலை (நாணயசாலை) ஏற்பட்டதென்றால் பரிகாசத்திற்கிடம் ஆகுமா?" என்று கேட்கிறார் வை. சூரியநாராயணன சாஸ்திரி.

இந்த மாதிரி மேனாடுகளில் பலமுறை நடந்திருக்கின்றது.

பிரான்சில் காபி 40000 பிராங்கோ

ஒரு சமயத்தில் பிரான்சில் ஒரு கோப்பை காப்பிக்கு 40,000 பிராங்கோ நோட் கொடுக்க வேண்டி வந்ததென்று சொல்லப்படுகின்றது.

அமெரிக்காவில்

அதே மாதிரி அமெரிக்காவில் ஐக்கியமாகாணங்களில் ஒரு சமயத்தில் நேர்ந்தது.

நந்தன்

நந்தன் என்கிற ஆரிய ராஜன் ஒருவன் தோல் காசுகளை வெளிப்படுத்தியிருந்தான் என்பதையும் யாம் கேள்விப்படுகின்றோம். இவ்வாறு சொல்லிக்கொண்டே செல்கிறார் வை.சூரிய நாராயண சாஸ்திரி.*

2,00000

முகமதுபின் துக்ளக்கிடம் *4000* நெசவாளர்கள் பணிபுரிந்தனர். அவர்கள் ஆண்டுதோறும் *2,00000* நபர்களுக்குப் பயன்படும் துணிகளை உற்பத்தி செய்தனர். அதனை முகமதுபின் துக்ளக் தனது சகாக்களுக்கும், வீரர்களுக்கும் வழங்குவார்.**

இலட்சம் மதரஸாக்கள்

இஸ்லாமிய கல்வி கற்றுத் தரும் மதரஸாக்கள் முகமதுபின் துக்ளக் காலத்தில் டில்லியில் ஒரு இலட்சம் இருந்தது.***

ஹோலிப் பண்டிகை

வட இந்தியாவில் ஹோலிப் பண்டிகையில் கலந்து கொண்ட முதல் முஸ்லிம் அரசர் முஹம்மதுபின் துக்ளக் ஆவார்.

★ நமது பரத கண்டம், முதற்பாகம் ஆரிய சூரியன், சென்னை, 1925 பக்கங்கள் 163 - 164.

★★ *Shihab - Uddin al umari Masalik-u-l-Absar-fi Mamalikul Amsar, Siddiqui, Iqtidar Husain A Fourteenth Century Arab Account of India Under Sultan Muhammad bin Tuqhluq Aliqarh, 1971, Page 39.* மேற்கோள் *Irfan Habib, Medieval-India I, Researches in the History of India, Oxford, 33rd impression 2020, Page 34.*

★★★ *Iqtider Husain Siddiqui (Translated) India Under Sultan Muhammad bin Tuqhluq Aligarh 1971, Page 36.*

சமணக்கோவில்

பாலதீனாவிலுள்ள சத்ருன் ஐயா கோவிலில் சென்றார் அங்கு இருந்த சமண அறிஞர் ஜீன பிரபாசூரியை கௌரவமாக நடத்தினார்.

கிர்னார்

கிர்னார் கோயில்களுக்கும் முகமதுபின் துக்ளக் சென்று வந்தார். மாற்றுமதத்தவர்களை பெரிதும் மதித்துப் போற்றியவர் முகமதுபின் துக்ளக்

எல்லோரா குகைகள்

தான் அமைத்த தௌலதபாத் தலைநகர் அருகே எல்லோரா குகைக் கோவில்கள் இருந்தன. அவைகளை அழிக்காமல் அப்படியே காத்திட்டவர் முகமதுபின் துக்ளக்.

அஜ்மீர்

அஜ்மீர் சென்று ஷெயிக் முகையதீன் சிஷ்தியின் அடக்க ஸ்தலத்திற்குச் சென்று முதலில் ஜியாரத் செய்து வந்தவர் முகமதுபின் துக்ளக்.

பாரெய்க்கிலுள்ள சாலார்மசூத் காஜியன் சமாதியைப் பாதுகாக்க உத்திரவிட்டவர் முகமதுபின் துக்ளக்.

அஞ்சல்துறை

தனது ஆட்சியில் அஞ்சல் துறையை செவ்வனே நடத்தி நாட்டின் ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு கடிதப்போக்குவரத்துவசதியைத் திறமையாகச் செய்தவர் முகமதுபின் துக்ளக்.

சிந்து பயணம்

தனது ஆட்சிக்கு எதிராகக் கலகம் துவங்கியதை அடக்கிட சிந்துநோக்கிப் பயணித்ததார் முகமதுபின் துக்ளக். சிந்துவிலிருந்து 60 மைல் தூரத்தில் கூடாரத்தில் தங்கியிருந்தார்.

20.3.1351

இறுதியாக மீன் உணவை உண்டார்; புத்தர் இறுதியாக பன்றி இறைச்சி உண்டதைப் போல்; அதன் பின் சுகவீனமுற்ற

முகமதுபின் துக்ளக் 21 முஹர்ரம் ஹிஜ்ரி 752 இல் 20.3.1351 இல் தனது 27வது ஆட்சி ஆண்டில் மறைந்தார்.

மீன் உணவில் விஷம் கலந்தது குறித்து பெரிஷ்டா எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் வந்தார்கள் வென்றார்கள் நூலில் மதன் மீன் உணவில் விஷம் கலந்திருந்ததோ என்று அவரது பங்கிற்கும் எழுதியுள்ளார்.*

சரித்திரத்தில் அழியாப் புகழ் பெற்ற சீரிய சிந்தனையாளர் முகமதுபின் துக்ளக் அவர்மீது சுமத்தப்பட்ட அபாண்டங்களுக்கு அடியேன் முயன்ற வரை பதில் தந்துள்ளேன். பேரறிஞர்கள் துணைகொண்டு வரலாற்றின் வெளிச்சத்தில் முகமதுபின் துக்ளக்கின் வாழ்க்கைப் பக்கங்கள் வெளிவர வேண்டும்.

இஸ்லாமிய அமைப்புக்கள் உண்மை வரலாற்றை சிறு சிறு பிரசுரங்களாக வெளியிட வேண்டும். வெளிப்பட வேண்டும். பொய் அகல வேண்டும்.

---

* வந்தார்கள் வென்றார்கள். சென்னை. 1994, பக்கம் 47.

முஹம்மதுபின் துக்ளக்கின் நாணயங்கள்





























எட்டாம் நூற்றாண்டு துவங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்களைப் பற்றி கொடுமையாக எழுதப்பட்ட பொய்ச் சரிதைகள் ஏராளம், ஏராளம். பாரதத்தை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் வன விலங்குகளை கிழித்துத் திண்ணும் மாமிசப் பட்சிணிகள் என்றே நம்மை எண்ணவைத்திடும் அளவிற்கு சரித்திரம் வரையப்பட்டுள்ளது.

வரலாற்றில் இழிவுபடுத்தப்பட்டவர்களில் ஒருவர்தான் முஹம்மத் பின் துக்ளக். சினிமா, நாடகம் மற்றும் பல புதினங்களிலும் கூட கைதேர்ந்த கோமாளியாகக் காட்டப்பட்டவர்.

ISBN No.:978-81-948259-6-8
9 788194 825968

விலை: ₹100/-